padippakam

# தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி




நூல் வரிசை - 1

அ. கௌரிகாந்தன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத

# புதிய கட்சி

புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

வரலாற்று ஆய்வு நூல், பாகம் - 1.

அரவிந்த மகரிஷி சத்திரிய தேடலில்

நூல் வரிசை - 1.

சுடர் பதிப்பகம்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# சமர்ப்பணம்


வ.உ.சி

சனாதன இந்து இந்திய தேசியத்துடனும்
சைவத் தமிழ் வைதீகத்துடனும்....
தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாத

முற்போக்கு ஜனநாயக பகுத்தறிவுடனும்
சீர்திருத்த மற்றும் தளமாற்ற * செல்நெறிகளுடனும்
தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட

தமிழ்த் தேசியத்தைப் புறந்தள்ளி வைக்காத
உறுதி மிக்க **இந்திய தேசியவாதியாக**
தன்னை உருவகப்படுத்திக் கொண்ட

திரு. **வ.உ.சிதம்பரம்பிள்ளை** அவர்களின் பெயரில்
**இந்திய தேசியத்தின்** பாதங்களில் இந்நூலைச்
**சமர்ப்பிக்கின்றேன்.**

எந்த நூலானாலும் குற்றமிருக்குமானால் அதனைத் தள்ளத் தயங்கக் கூடாது. நமக்குக் கடவுள் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். அதனைக் கொண்டு ஆராய்வோம்... கடவுள் எழுதினார் என்று கூறப்படும் நூலிலும் பிழையிருக்குமானால் அதனையும் தள்ள வேண்டியதுதான்... பெரிய புராணத்தில் கூறப்பட்டிருக்கும் மனுஸ்மிருதி இப்பொழுது உள்ளதுதான் என்று கூறினால், சேக்கிழாருக்கும் பிராமணருக்கும் சம்பந்தமுண்டென்று கூறுவதைத் தவிர வேறென்ன சொல்வது? வேதத்தில் பிழைகளிருக்கலாம். திருத்த வேண்டியதுதான். சைவத்திலும் அப்படியே தான்.[1] வ.உ.சி.

* தளமாற்றுவாதிகள் - Radicalists



படிப்பகம்

padippakam

# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

| | | |
|---|---|---|
| நூல் | : | தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி (நூல் வரிசை 1) |
| விடயம் | : | இந்திய வரலாறு, "புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்" (1900 - 1919 வரை). |
| ஆசிரியர் | : | அ. கௌரிகாந்தன் |
| பதிப்புரிமை © | : | ஆசிரியர் |
| முதற்பதிப்பு | : | நவம்பர் 2002 |
| அளவு | : | 1/8 |
| பக்கங்கள் | : | 103 |
| பயன்படுத்திய தாள் | : | கீரிம்வோ ஷேசசாயி |
| வெளியீடு | : | சுடர் பதிப்பகம்,<br>4, கந்தசாமி வாத்தியார் தெரு,<br>தருமபுரி - 636 701. Cell : 98427 - 66259 |
| அச்சாக்கம் | : | மல்டிமீடியா ஆப்செட் |
| அட்டை வடிவமைப்பு | : | மல்டிமீடியா ஆப்செட்,<br>4, கந்தசாமி வாத்தியார் தெரு,<br>தருமபுரி. |
| நூல் வடிவமைப்பு | : | மல்டிமீடியா ஆப்செட், |
| கணினி அச்சு | : | மல்டிமீடியா ஆப்செட், |
| விலை | : | ரூ. 40/- |
| மொத்த பிரதிகள் | : | 600 |

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam



# பதிப்பாளர் உரை

சுடர் பதிப்பகத்தின் முயற்சியாக திரு. அ. கௌரிகாந்தன் அவர்களின் "தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி" என்ற இந்நூலினை எமது முதல் வெளியீடாக தமிழ் வாசகர்களாகிய உங்கள் கரங்களில் அளிப்பதில் பெருமகிழ்ச்சிக் கொள்கிறோம்.

சமூகத்திற்கு பயனுள்ள பல்துறை சார்ந்த கருத்துக்களை வெவ்வேறு நூல்கள் வாயிலாக வெளிக்கொண்டு வரவேண்டும் என சில ஆண்டுகாலமாக முயற்சிகள் மேற்கொண்டு வந்தேன். இவ் ஆய்வு நூல்களை வெளியிடுவதன் மூலம் எனது இந்நீண்டகால எதிர்ப்பார்ப்பு நிறைவேறும் நிலை ஆரம்பித்து உள்ளது.

இந்நூல் சுதந்திர போராட்ட காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளின் பதிவுகளை, கவனிக்கப்படாத அல்லது கண்டுகொள்ளப்படாத அல்லது மறைக்கப்பட்ட பதிவுகளை தற்கால இளஞ்சமூகத்திற்கு ஒரு விவாதப் பொருளாக முன்வைக்கிறது. குறிப்பாக அரவிந்தர், ரவீந்திரநாத் தாகூர், திலகர், கோகலே போன்றவர்களின் அக்கால நிலைப்பாட்டிற்கும் இக்கால மதிப்பீடுகளுக்கும் இடையேயான முரண்பாட்டினை காணக்கூடியதாக உள்ளது. அரவிந்தரை நாம் இன்று ஓர் மகரிஷியாக மட்டுமே காண்கிறோம், ஆனால் அவர் சுதந்திரப் போராட்டத்தின் ஓர் இயக்கத்தின் பெரும் தலைவர் என்பதையும், அதே போல் கவியாக மட்டுமே காணப்படும் ரவீந்திரநாத் தாகூர் சுதந்திரப் போராட்டத்திற்கு கருத்து ரீதியாக வித்திட்டவர் என்பதையும், எடுத்துக் கூறலாம்.

மேற்கண்ட முயற்சிக்காக இந்நூலாசிரியர் பற்பல நூல்களின் துணையை நாடியுள்ளதுடன் அத்தலைவர்களினதும் நூலாசிரியர்களினதும் கருத்துக்களை அவர்களின் வாயிலாகவே கொண்டு வந்து படைத்திருக்கிறார். இதற்காக அவர் மேற்கொண்ட கடும் பணி குறிப்பிடக் கூடியது. இது ஓர் பெரும் நூலின் அறிமுகம் மாத்திரமே. ஒரு வெள்ளோட்ட முயற்சி

இந்நூல் வாயிலாக வெளிப்படுத்தப்படும் சிந்தனைஓட்டம் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் நூல்கள், இதழ்கள் உரையாடல்கள் வாயிலாக நடந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. அது ஆழ்ந்தும் அகன்றும் செல்வதுவும் கண்கூடு. இந்நூலின் கருத்துக்கு இசைவான பல பதிப்பகங்கள் இதழ்கள் செயற்பட்டு வருகின்றன என்பதை சகலரும் அறிவோம் அவ்வரிசையில் சுடர் பதிப்பகத்தையும், இணைத்துக் கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன். சுடர் பதிப்பகத்தின் கன்னி முயற்சியான இந்நூலுக்கும், ஆய்வுக்கும் உதவிப்புரிந்துவரும் அன்பர்களுக்கு எனது நன்றிகள்.

இந்நூலின் கருத்துக்களுக்கு ஆதரவான அல்லது மறுப்பான ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கப்படுகின்றன.

தர்மபுரி
29.10.2002

இவண்


**எம்.ஜி. அன்பழகன்,**
பதிப்பாளர், சுடர் பதிப்பகம்.



படிப்பகம்

padippakam

# 5 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்



1907 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26,27 ஆம் தேதிகளில் புதிய கட்சியினரின் முதலாவது மாநாடு அரவிந்தர் தலைமையில் நடைபெற்றது. நின்ற வண்ணம் உரையாற்றுவது திலகர்.

**தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —**

படிப்பகம்

padippakam



ஐரோப்பாவில் தேசியம் முற்போக்கான கருத்தியலாகவும் இயக்கமாகவும் விளங்கியது. அந்தத் தேசியத்தின் உந்து சக்தியாக எழுச்சி பெற்ற உயிர்பாற்றல் மிக்க முதலாளிய வர்க்கம் இருந்தது. வரலாற்றின் முன்னோக்கிய வளர்ச்சியில் முற்போக்கான பங்கை அது ஆற்றியது.

அந்தத் தேசியத்திற்கும், நிலவுடைமை வர்க்கத்தோடு சமரசம் செய்து கொண்ட, காலனியாதிக்கத்தை நம்பி இயங்கிய தரகு முதலாளியத்தின் தேசியத்திற்கும் பெரும் வேறுபாடு உண்டு. சிறுபான்மையினரை விலக்கி, தலித்துகளைத் தன் அரசியல் ஆதாயத்துக்கு மட்டுமே அணி திரட்டி, பெண்களின் மீதான தந்தைவழிச் சமுக ஒடுக்குமுறைக்குப் புது வடிவம் கொடுத்து, இந்தி தவிர்ந்த பிறமொழிகளுக்கு இரண்டாம் இடத்தை அளிக்கும் தேசியத்தைக் கேள்விக்கு உள்ளாக்கியே ஆக வேண்டும். திருமணச் சம்மத வயதிற்கு முன்னரே தம் மகளுக்கு மணம் முடிப்பேன் என்றும், கலையைப் பேணுவதற்குத் தேவதாசி முறை வேண்டும் என்றும் கூறிய சத்தியமூர்த்தியின் தேசியத்தை விமர்சிப்பது எப்படித் தவறாக முடியும்? ஆ. இரா. வெங்கடாசலபதி



படிப்பகம்

# உள்ளடக்கம்


அ) அணிந்துரை- 1 - *கோவை ஞானி* 8

ஆ) அணிந்துரை- 2 - *பென்னட் பெஞ்சமின்* 10

இ) அணிந்துரை- 3 - *கா.பா. அறவாணன்* 12

ஈ) நன்றி நவிலல் 13

உ) உள் நுழைய முன் சிலவார்த்தைகள் 16

ஊ) அரவிந்தரின் கருத்துநிலை.. (பிறர் பார்வையில்) 21

எ) அரவிந்தரின் தேசிய மக்கள் இயக்கக் கோட்பாடுகள் 29

1. திலகரின் தேசிய மக்கள் இயக்கங்கள்: 35
   - (அ) கணபதி விழா 35
   - (ஆ) சிவாஜி விழா 37
   - (இ) திலகரின் மூன்று மக்கள் இயக்கங்கள் 39

2. தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி : 44
   - (1) ஜோதிராவ் பூலே 44
   - (2) வைகுந்த சுவாமிகள் 45
   - (3) திரு.அருட்பிரகாச வள்ளலார் 47
   - (4) நாராயண குரு சுவாமிகள் 50
   - (5) அயோத்திதாசப் பண்டிதர் 51
   - (6) அய்யன்காளி 58
   - (7) இரட்டைமலை சீனிவாசன் 62
   - (8) பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கார் 64
   - (9) நீதிக்கட்சி : 65
     - (அ) டாக்டர் நாயர் 66
     - (ஆ) பிட்டி தியாகராஜர் 68

3. ஒதுங்கி நில்! ஹியுமின் ஆணை 71

4. ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் 77

5. புதிய கட்சியும் கிறிஸ்தவ நிறுவனங்களும் 93

ஏ) சான்றாதாரங்கள் 97

ஐ) பின்னிணைப்புகள். ஹியுமின் உத்தரவு, பதூர்தீன்தியாப்ஜி, அமிர்அலி, ஆகியோரிடையேயான கடிதத் தொடர்புகள். 99

padippakam



## அணிந்துரை - 1

கோவை ஞானி

நண்பர் கௌரிகாந்தன் இலங்கையில் இடதுசாரி இயக்கத்தில் பணியாற்றியவர். பல்லாண்டுகால அனுபவங்கள் பெற்றவர். இலங்கையில் இருந்த பொழுது வரலாறு மற்றும் சமூக ஆய்விலும் ஈடுபாடு கொண்டவர். இலங்கையின் இன ஒழிப்பு வெறித்தனத்தால் தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்தவர். இவர் மொழிபெயர்ப்பு மற்றும் இடதுசாரி இயக்கவரலாறு ஆகியவற்றிலும் சிலவற்றைச் செய்தார். வ.உ.சி. பாரதியார் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றில் சில வேறுபட்ட போக்குகளை ஆராய வேண்டும் என்று தொடங்கிய கௌரிகாந்தன் தீவிர ஆய்வின் ஒரு கட்டத்தில் இந்திய வரலாற்றின் அடி ஆழத்தில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக செயற்பட்டுவரும் ஒரு புதிரைக் கண்டு பெரும் உற்சாகத்தோடு தன் ஆய்வின் எல்லையை விரிவுபடுத்தினார். பல நூறு பக்கங்கள், 12 பாகங்கள் என விரியும் ஒரு மாபெரும் வரலாற்று ஆய்வின் ஓர் பகுதியை முடித்துள்ளார். இந்த ஆய்வுக்காக நூலகங்கள், நண்பர்கள் என பல இடங்களிலும் தேடி கூடியவரை தனக்குத் தேவையான ஆதாரங்களைத் திரட்டி எல்லாவகையான வசதிக் குறைபாடுகளையும் உடல் நலக் குறைவையும் பொறுத்துக் கொண்டு இந்த ஆய்வைத் தொடர்கிறார்.

இவ் ஆய்வு நூலை உடனடியாக வெளியிடும் வாய்ப்புக் கிட்டாத நிலையில் ஆய்வின் ஒரு பகுதியின் சுருக்கத்தை மிகச் சிறியளவில் ஒரு நூலாகத் தற்பொழுது வெளியிடுகிறார். சிறியளவிலான இந்த நூலைப் படிக்கும் எவரும் ஆய்வுத் துறையில் இவரது மேம்பட்ட தகுதிகண்டு வியப்படைய முடியும். வரலாற்றுப் புதிரை இவர் விடுவிக்கத் தொடங்கும் பொழுதே நமக்குள்ளும் பல்லாண்டுகளாக தொடர்ந்து வரும் சில புதிர்கள், மாயைகள், பொய்மைகள் ஆகியவற்றில் இருந்து நாமும் விடுபடத் தொடங்குகிறோம். இதற்காகவும் அவரை நாம் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

ஈழத் தமிழ் மக்களோடு 2000 ஆண்டிற்கு மேலாக தமிழர்களாகிய நமக்கு உள்ள உறவை நம்மால் இழந்து விட முடியாது. இரு வேறுபட்ட வரலாற்றுச் சூழலில் அவர்களும் நாமும் வாழ்கிறோம். வரலாற்றின் நெருக்கடிகளுக்குள் மாட்டிக் கொண்ட போதிலும், இந் நெருக்கடிகளில் இருந்து தம்மை மீட்டுக் கொள்ளும் முறையில் தங்கள் அறிவையும் ஆற்றலையும் கலையுணர்வையும், மேம்படுத்திக் கொள்வதன் மூலம் தமிழ் சாதியின் மரியாதையை அவர்கள் காப்பாற்றி உள்ளனர். நாமோ, எல்லாவற்றையும் அந்நியர்களுக்கு விட்டுக் கொடுத்த நிலையில் வெற்றுப் பெருமைகள் பேசி வீணே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இலங்கையில் இருந்து தப்பிவந்த அகதித் தமிழர்களை சோதரரர்கள் எனக் கருதி இங்கு வாழவைத்திருப்போமென்றால், ஒரு வேளை, அவர்களின் உறவின் மூலம் நமக்குள்ளும் புதிய சக்திகள் மேம்பட்டிருக்கும். வரலாற்றில் தன்னை உயிர்ப்பித்துக் கொள்ளும் கிடைத்ததற்குரிய வாய்ப்பைத் தவற விட்ட நிலையில் கௌரிகாந்தன் முதலியவர்களைச் சந்திக்கும் வாய்ப்பையாவது நாம் பெற்றுள்ளோம்.



படிப்பகம்

padippakam

## 9 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

இந்தச் சிறுநூலின் உள்ளடக்கம் குறித்து இங்கு சிறிது குறிப்பிடலாம். இந்திய வரலாற்றில் இந்து தீவிரவாதத்தை தொடக்கி வைத்தவர்களில் ஒருவர் என திலகரைப்பற்றி நாம் அறிவோம். மகான் என்று பெருமைப்படுத்தப்படுகின்ற அரவிந்தரின் தத்துவ ஞானம் குறித்து பரவச உணர்வோடு பலர் பேசுவதையும் எழுதியுள்ளதையும் நாம் படித்திருக்கிறோம். இந்துமத தீவிரவாதத்தை வளர்த்தவர்களில் அரவிந்தர் எந்த வகையிலும் திலகருக்கு சளைத்தவர் இல்லை. இந்தியாவில் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரித்து ஆள்வதன் மூலம் ஆங்கிலேயர் தம் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்ட வரலாற்றை நாம் அறிவோம்.

காங்கிரஸில் இருந்து 1907இல் விடுபட்டுச் சென்ற தேசியக் கட்சியின் தீவிரவாத இயக்கம் குறித்துப் போதிய அளவில் நாம் அறிந்து கொள்ளவில்லை. இன்று நாம் தேசியம் எனக் கருதுவது இந்து முஸ்லீம்களின் இணைவில் உருவானதன்று. இத்தேசியம் இந்து மதத்தினுள் உருவானதன்று. இத்தேசியம் இந்து மதத்தினுள் இருக்கும் அனைத்து மக்களின் விடுதலைக்கான கோட்பாடுமன்று. இத்தேசியம் ஆங்கிலேயரிடமிருந்து அனைவரும் பெற வேண்டிய அரசியல் விடுதலையோ, பொருளியல் மற்றும் சமூக விடுதலையோ அன்று. இது இந்துக்களின் வர்ணாசிரம சனாதனதர்ம தேசியம் மட்டுமே.

முஸ்லீம்கள் இந்துக்களுக்கு அடிமைப்பட்டவர்கள் என்றோர் அரக்கத்தனமான கருத்தியலை முன்வைத்து திலகராலும், அரவிந்தராலும் தோற்றுவிக்கப்பட்டதே இப்புதிய கட்சி. இவ்வகை தேசியக் கட்சியோடுதான் பாரதியாரும் இருந்தார் என்பது நமக்கு அதிர்ச்சி தருகின்ற போதிலும், இதுதான் உண்மையென்பதை இந்த நூலில் நாம் அறியவருகிறோம்.

வரலாற்றில் இப்படியொரு தெளிவை நமக்கு ஏற்படுத்தும் முறையில் ஏராளமான நூல்களிலிருந்து நண்பர் கௌரிகாந்தன் மேற்கோள்களைத் தருகிறார். இந்த வரலாற்றுச் சூழலில் நீதிக்கட்சியின் நிலை பற்றியும் விளக்குகிறார். வரலாறு மட்டுமல்லாமல் தத்துவம் பற்றிய புரிதலிலும் கௌரிகாந்தனின் ஆய்வுத்திறனை நாம் பாராட்ட முடியும். ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். சுமார் 500 / 1000 பக்கங்களில் விரித்துரைக்கப்படவேண்டிய இவரது ஆய்வு நூலின் பெருந் தொகுதி விரைவில் நம் கைகளில் வந்து சேர்வதற்கான வாய்ப்புகளை அறிஞர் மக்களும் தலைசிறந்த பதிப்பகத்தாரும் உருவாக்கித்தர வேண்டுகிறோம்.

ஞானி

கி. பழனிச்சாமி (ஞானி)
123, காளீசுவரர் நகர்.
கோயமுத்தூர் - 641 609.
தொலைபேசி - 235040.



படிப்பகம்

padippakam



## அணிந்துரை- 2

*பென்னட் பெஞ்சமின்*

அ. கௌரிகாந்தனால் மேற்கொள்ளப்பட்டுவரும் "புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்" என்கின்ற தலைப்பிலான ஆய்வின் பாகம் ஒன்றாகவுள்ள "அரவிந்த மகரிஷி சத்திரிய தேடலில்" என்ற நூலின் ஒரு பகுதியான தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி எனும் நூல் அரவிந்தரின் கருத்துக்களை உள்ளடக்கியதாக வந்துள்ளது. வியக்கத்தக்க தகவல்களை திரட்டி அன்றைய "புதிய கட்சியினை" விமர்சித்திருப்பதன் நோக்கமே இன்றைய கட்சிகளின் பின்புலங்களையும், பலத்தையும், பலவீனத்தையும் தெரிவிப்பதற்காகவே என்றெண்ணுகின்றேன். அதநூடே பல தத்துவ வரலாறுகளை உரித்தெடுக்கும் நூலாக இந்நூல் இருப்பதையும் உணர்கின்றேன். அரவிந்தரை முன்னிருத்தும் முயற்சி அன்றைய் அரசியல் கட்சிகளும் அவரைப்போன்ற மூதறிஞர்களும் மறுவாசிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துவதற்காகத்தான் என்பதனையும் புரிந்துக் கொள்கின்றேன்.

அரவிந்தர் தன் தத்துவ புலமைக்கு உபநிஷத்துக்களை அடித்தளமாகக் கொண்டவர். உபநிஷத்துக்கள் எதிர்கால நவீன சமூகத்தை அமைக்க உதவுமென்று முழுமையாக நம்பினார். அதோடல்லாமல் பிற மதகுறிப்பேடுகளில் உள்ள தத்துவங்களையும் ஆராய்ந்தார். ஐரோப்பிய மற்றும் ஹிந்து அல்லாத மதங்களில் உள்ள தாராளத்தன்மையையும் (Liberalism) புரிந்துக் கொண்டவர். ஆகவே உபநிஷத்துக்களில் உள்ள முழுமைத்தன்மை அவற்றிற்கு ஈடாக ஒருமைப்பாட்டினை உருவாக்கும் என்கின்ற கருத்தை அரசியல் கோட்பாட்டின் மையமாக உருவாக்க நினைத்தார்.

விவேகானந்தரைப் போலவே அரவிந்தரும் உபநிஷத்துக்களில் அடங்கிய அனந்தம் (Bliss) எனும் உயரிய நிலைக்கு செல்ல ஆன்மீக ஒழுக்கம் வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆகவே அரவிந்தர் இந்திய தேசிய இயக்கத்தில் ஈடுபடும் மக்களிடையே சமூக கலாச்சார விழிப்புணர்வு தேவை என்பதனை வலியுறுத்தினார். (The foundation of Indian Culture & The human Cycle). ஆனால் இவைகளை வலியுறுத்த மேற்கொண்ட வழிமுறைகள் மூலம் இன்றைய ஹிந்துத்துவ அல்லது அன்றைய இளநிலை ஹிந்துத்துவ கோட்பாடுகளை முழுவதுமாக உள்ளடக்கிக் கொண்டவராக விளங்கினார்.

இது இவ்வாறு இருக்க இந்திய தேசியம் என்பது காலப்போக்கில் பல்வேறு பரிணாமங்களைப்பெற்று வளர்ந்து வந்தது. அதில் முக்கியமானதும், பிரதானமானதுமானதுமாக இருப்பது இன (Ethinic) தேசிய வளர்ச்சியேயாகும். ஒரு கோணத்தில் பார்க்குங்கால், இன தேசிய வளர்ச்சிகள் யாவுமே இந்திய தேசிய



படிப்பகம்

கருத்துக்களுக்கு மறுப்பானதாகவுள்ளது என்பது தெளிவு. பிராமணிய ஹிந்துத்துவ கோட்பாடுகளை உள்ளடக்கிக் கொண்டுள்ள இந்திய தேசிய வளர்ச்சியின் முதல் பாதிப்பை பெற்றது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிதான். இன தேசியங்களும் பிராந்திய அரசியலும் வளர்வதற்கான காரணிகளில் ஒன்று, காங்கிரஸ் என்னும் பிராதன கட்சியில் உட்புகுந்த பிராமணிய ஆதிக்கம்தான் என்பதில் ஐயமில்லை. அந்த தாக்கத்தால் தான் காங்கிரஸ் கட்சி பல கூறுகளாக பிரிந்து செயல்பட்டுவரும் உண்மையை இன்று நாம் கண்கூடாக காண்கின்றோம். இருப்பினும், சமீபகாலமாக உருவாகிவரும் சோனியாவின் தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் மறு பிரவேசம் சாத்தியப்பட்டது, பெரும்பான்மை பிராமணிய ஹிந்துத்துவ கருத்தாளர்களும், ஆதரவாளர்களும் ஆதிக்க சக்திகளடங்கிய பாரதிய ஜனநாயக கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் போய்ச் சேர்ந்துவிட்டதினால்தான். ஜம்மு காஷ்மீரத்தின் தேர்தல் முடிவுகள் இதைத்தான் வெளிப்படுத்துகின்றன.

பிராமணிய, ஹிந்துத்துவ ஆதிக்க மற்றும் சமூகத்தினரால் நடத்தப்பட்டுவரும் கட்சிகள் யாவுமே தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத கட்சிகளாகிக் கொண்டு வருகின்றன என்பது தெளிவு. கௌரிகாந்தனின் நூல் வரிசை ஒன்று ஒரு நல்ல சரித்திர/ வரலாற்று அறிமுகம். அதன் வெளிப்பாடுகள் மிக விறுவிறுப்பானதும் எதிர்கால நோக்குடையதாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அன்னாரின் முயற்சிக்கு நமது வாழ்த்துக்கள்! பலரும் இந்நூலைக் கற்று பயன்பட வேண்டும் என்பது எமது அவா.

Dr. பென்னட் பெஞ்சமின்
80-C, கொட்டையூர் சாலை,
ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம்.

"உலகின் பிறபகுதிகள், இந்தியாவின் பாரம்பரிய மரபுவழி ஆன்மீகச் செல்வத்தை தமது வழிகாட்டும் ஒளிப்பிழம்பாகவும் தமது ஆன்மீகத் துணையாகவும் ஏற்றுக் கொள்வதை நோக்கி மேலும் மேலும் முன்னேறி வரும் இன்றைய நிலையில் இந்தியா தனது பரம்பரைச் சொத்தான இந்தச் செல்வத்தை தூக்கி எறியும் ஒரு நிலைக்குச் செல்லுமானால் அதைப் போன்ற துன்பம் வேறு எதுவும் இருக்க முடியாது. இது இவ்விதம் நடக்கக் கூடாது, நடக்கவும் மாட்டாது, ஆனால் இவ்விதமானதோர் ஆபத்தான நிலை இல்லை என்று கூற முடியாது". அரவிந்தர் 1948 (Quated by Michel Davino - Sri Aurobindo and Indian Civilization Page 31)

padippakam



## அணிந்துரை - 3

*அறிஞர். க.பா. அறவாணன்*
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

திரு. அ. கௌரிகாந்தனால் "அரவிந்த மகரிஷி சத்திரியத் தேடலில்" எனும் முகப்பில் உருவாக்கியுள்ள நூல் சிந்தனைக்கு உரியது. கௌதம புத்தருக்குப் பிறகு இந்தியாவில் சுயமாகச் சிந்தித்தோர் பண்டைய கிரேக்க ரோம, பிற்காலத்திய இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, அமெரிக்கா ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளது. இந்நிலையில் புதுவையில் வந்து அடைக்கலம் புகுந்த அரவிந்தர் சுயமாகச் சிந்திக்கும் இந்தியச் சிந்தனையாளராகப் பரிணமித்தார்.

அரவிந்தரின் தொடக்க காலம் வங்கத்தில் மெய்யான சுதந்திர இயக்கப் பின்னணியில் அமைந்தது. அவர்தம் அரசியல் பின்னணியை நூலாசிரியருடைய முதல் கட்டுரை முன்னிலைப்படுத்துகிறது. வினாயகர் வழிபாடு பற்றிய மெய்யான பகுதியை இவர் எடுத்துக் காட்டுகிறார். பிள்ளையார் வழிபாடு மராட்டியத்தில் இசுலாமிய எதிர்ப்பு விழாவாகவும், பல்வேறு பிரிவின் கீழிருந்த இந்துக்களை ஒன்றுபடுத்தும் விழாவாகவும், 1893, 1894 ஆகிய ஆண்டுகளிலேயே திலகரால் முன் நிறுத்தப்பட்டதை நூலாசிரியர் சிறப்புற எடுத்துக் காட்டுகிறார் (ப. 15). திலகரும் அரவிந்தரும் எவ்வாறு ஒன்றுபட்டு இந்தியாவில் சுதந்திர இயக்கத்தை நடத்தினர் என்பது இதுவரை வெளிப்படுத்தப்படாத புதிய சான்றுகளால் விளக்கப்பட்டுள்ளது.

"தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி" எனும் தலைப்பிலுள்ள கட்டுரை பிராமணர் அல்லாதோர் இயக்கம் தொடர்பான பல்வேறு செய்திகளை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்டுள்ளது அரவிந்தர், திலகர், அம்பேத்கார் முதலானோர் எழுதிய கருத்துக்கள் பிராமணர் அல்லாதோர் பார்வையிலும் தலித்தியப் பார்வையிலும் பார்க்கப்பட்டுள்ளன. இந்தியாவிலும் அதில் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும், ஈழத் தமிழகத்திலும், சீனாவைப் போன்று அந்த மண் மணத்துடன், பொது உடைமை இயக்கம் வர்க்கப் பின்னணியில் கட்டி எழுப்பப்பட்டிருத்தல் வேண்டும். மறுதலையாக மத அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் இங்கே இயக்கங்கள் கட்டி எழுப்பப்பட்டன. அதன் விளைவை இந்த மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டுள்ளார்கள் என்பதை கௌரிகாந்தனின் நூல் நமக்கு மறைமுகமாகப் பாடம் கற்பிக்கிறது.

திரு கௌரிகாந்தனின் ஆராய்ச்சித் தேட்டமும் கருத்துக்களை நிரல்படுத்தும் பாங்கும் பாராட்டத்தக்கவை.

*அறிஞர். க.பா. அறவாணன்*
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

## புதிய கட்சி

படிப்பகம்

# 13 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

## நன்றி நவிலல்

நான் ஒரு தொழில்முறை ஆராய்ச்சியாளனல்ல. அதற்குரிய பொருண்மிய அடித்தளமோ அடிப்படையோ நிறுவன பின்பலமோ என்னிடம் இல்லை. ஆனாலும் இவ் ஆய்வின் போது நான் படித்த பதிப்பகச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் என்னை பின்வாங்கவிடவில்லை. பாரதி, வ.உ.சி., சுப்ரமணிய சிவா ஆகியோர் பிச்சை எடுக்காத குறையாக எவ்வளவு சிரமப்பட்டார்கள் என்பதைக் கண்டேன். சில புரவலர்களின் உதவி இல்லையேல் அவர்கள் என்றோ மங்கிப்போயிருப்பார்கள்.

அர்த்தநாரிவர்மா என்னும் இந்திய சுதந்திரப் போராளி ஒருவர் தனது 85வது வயதில் பத்திரிகை நடத்த நிதி உதவி கோரி 'தமிழ் மன்னன்' என்ற பத்திரிக்கையில் பிரசுரித்த கடிதத்தைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இது இவரின் அதுவரை நிறைவேறாத ஆசையின் 85வது வயது முயற்சியாகும். (நன்றி 2002 சிந்தனையாளன் பொங்கல் மலர்)

இத்துறையில் தொடர்ந்து, அடுத்தடுத்த பல தோல்விகளையே சந்தித்த பாரதியார் கூறிய கூற்று மனங்கொள்ளத்தக்கது.

> "இப்போது உலகம் முழுவதிலுமே ராஜாக்களையும் பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம் போய்விட்டது. பொது ஜனங்களை நம்ப வேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் போஷணையும் ஆதரவும் பொது ஜனங்களிடமிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை. பிறகு, நல்ல போஷணை கிடைக்கும். ஒரு பிரபு மாதம் ரூபாய் 100 கொடுப்பான். ஊர் சேர்ந்தால் தலைக்குக் கால் ரூபாயாக வசூல் பண்ணி மாதம் 1000 ரூபாய் கொடுக்கும். ஊரையே யஜமானனாகக் கொள்ள வேண்டும்.
>
> ஊர்தான் ராஜா. இந்த ராஜாவுக்கு ஆரம்பத்திலே கொஞ்சம் ஞானம் அளித்துப் பழக்கங்கொடுத்தால் வித்தைகளுக்கு எவ்விதமான குறைவும் ஏற்படாது." (பக் 66 அந்தக் காலத்தில் காப்பி இல்லை முதலான ஆய்வுக் கட்டுரைகள். அ.இரா. வெங்கடாசலபதி)

பிரக்ஞை பூர்வமாகக் கற்றதை நடைமுறைப்படுத்தினேன். பலரை அனுகினேன், இவர்களில் இருவர் தவிர ஏனைய அனைவரும் சமூக ஆர்வலர்களாக இருந்த போதும், ஏற்றத்தாழ்வுள்ள சாதாரண வாசகர்களே. எனது நோக்கத்தைக் கூறினேன். எனது முயற்சிகளை எடுத்துக் காட்டினேன். சிறு சிறு அளவில் பல்வேறு விதமான உதவிகள் கிடைத்தன. துண்டு துண்டாகக் கிடைத்தன. இவற்றைப் பொருத்தினேன். பாரதியார் சொன்னதுபோல் ராஜாவிடம் இருந்து கிடைத்ததை விட இவை அதிகந்தான். ஒரு முறைசார வாசகர் அணியும் உருவாகியது.

எனது நடவடிக்கைகளுக்கு உதவி வரும் சமூக ஆர்வலர்களான இந்த நண்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

padippakam



சிறிதரன் மேரி சரோஜா தம்பதியினர், திருவள்ளுவன் நீலா தம்பதியினர், பென்னட் பெஞ்சமின் டாக்டர் ஷீலா தம்பதியினர் (CRHE) ஏலகிரி) திரு. வீராசாமி, திரு. சரவணன், திரு. டாக்டர் ராஜசேகர் (சமூக விஞ்ஞான பேரவை பென்னாகரம்) திரு. வீரபத்திரர், திரு. ஸ்ராலின் (S.R.D.) திரு. சிறினிவாசன், திரு. அ. மலரவன், திரு. சர்வேஸ்வரன், திரு. முருகேசன், திரு. நாகராஜன் (நால்வரும் தமிழ் வளர்ச்சி மையம் சித்த வைத்திய நிலையம்) திரு. சங்கர் (எ) மெய்வேலர், திரு. முத்துலிங்கம், திரு. சே. பாலகிருஷ்ணன், திரு. துரைராஜ் (இந்திய மனித உரிமை கட்சி) திரு. ராஜலிங்கம் மற்றும் செல்வன் ஆறுமுகம் திரு. வஜ்ஜிரவேல் (அரண் பதிப்பகம்), சிவகுமார் (ஆங்கிலப்பேராசிரியர்) ஆகியோர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் இது எனது கடமை. கணனி அச்சு மற்றும் அச்சேற்றம் செய்துதந்த மல்டிமீடியாவிற்கும் அதன் தலைமை அமைப்பான இளம் தொழில் முனைவோர் கூட்டமைப்பிற்கும், அச்சகத்தில் பணிபுரியம் ஊழியர்களுக்கும் குறிப்பாக கணனி அச்சுவேலையை பொறுப்புடன் செய்து தந்த செல்வி அ. ஹாஜிராபேகம் அவர்களுக்கும்; எனது ஆய்வு தொடர்பான விடயங்களை கணனி அச்சாக்க தொடர்ந்து ஈடுபட்டு வரும் திருமதி. உஷாராணி (ஜெய் கம்ப்யூட்டர்ஸ்)க்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது ஆய்வு நூல்களை தொடர்ந்து வெளியிடுவது என்பதை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு அந்நோக்கத்திற்கெனவே 'சுடர்' வெளியீட்டகம் என்றோர் அமைப்பை தோற்றுவிக்க முன்வந்த திரு. M.G. அன்பழகன் அவர்களுக்கு எனது மிகுந்த நன்றிகள்.

இவ் ஆய்வை மேற்கொள்வதில் கருத்துரீதியான ஆதரவும், உற்சாகமும் ஊட்டிய புலமையாளர்களாகிய திரு. பென்னட் பெஞ்சமின், திரு. ஞானி (தமிழ் நேயன் இதழ், நிழல் வெளியீடு), திரு. விஜயகுமார் (வழக்கறிஞர், பாரதிதாசன் நற்பணி மன்றம் வாலாஜா). செல்வன் M.P. கமலேசன், ஆகியோர்க்கு மீண்டும் நன்றிகள்.

சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் கட்சி சார்ந்தும், கட்சி சார்பற்ற முறையிலும் இத்துறையில் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்திவரும் புலமையாளர்களுக்கும் எனது நன்றிகள். அவர்களின் படையணியில் நானும் ஒருவனாக கைகோர்த்துக் கொள்ள விரும்புகிறேன். எனது இவ் விருப்பத்தை வரவேற்று என்னைக் கரம்பிடித்து, அரவணைத்து களம் வந்து சேர உதவிய பெனார்ட் பெஞ்சமின், ஞானி, கப. அறவாணன் ஆகிய பெரியோர்களுக்கும், சமூக விஞ்ஞான பேரவைக்கும் சுடர் அமைப்பிற்கும் அவர்களின் / அவற்றின் துணிச்சலான முன்னடி எடுப்பிற்கும் எனது நன்றிகள்.

கொழுத்த சம்பளமும், கொழுத்த கிம்பளமும் தான் உண்மையான உழைப்பு என்று அலையும் இன்றைய சமூக அமைப்பில், ஆய்வுக்கான எனது உழைப்பையும் உழைப்பு என்று ஏற்றுக் கொண்டு, அந்த உழைப்பினை மதித்து, மிகுந்த பொறுப்புணர்வுடன் குடும்ப அமைதிகாத்து எனது வேலையைச் செய்வதற்கு சாதகமான ஒரு குடும்ப சூழலை ஏற்படுத்தித் தருவதில் தீர்மானகரமான பாத்திரம் வகித்தது எனது மனைவி லோகாம்பாளேயாகும். இதன் மூலம், தனிச்சொத்துரிமையை



படிப்பகம்

அடிப்படையாகக் கொண்ட இச் சமூக அமைப்பின் அடித்தள அரணாக விளங்கும் குடும்பம் என்ற சமூக கட்டமைப்பை உடைத்தெறியாமலே அதன் தனிச்சொத்துச் சுபாவத்தை மாற்றியமைக்க முடியும் என்பதை நிரூபிக்க உதவிய என் மனைவிக்கு நன்றிகள்.

இவை எல்லாவற்றையும் விட வாசகர்களாகிய உங்களுக்கு பிரக்ஞைபூர்வமான எனது நன்றிகள். தனது கருத்து ஒரு பௌதீக சக்தியாக மாற வேண்டும் என்பதே எந்தப் படைப்பாளியினதும் நோக்கமாகும். இந்நோக்கம் நிறைவேறுவது அவனின் படைப்பின் சரியான தன்மையையும் வாசகர்களாகிய உங்களையும் பொறுத்ததேயாகும். அவ்விதம் இல்லாத பட்சத்தில் எவ்வளவு தரமான நூல்களென்றாலும் அந்நூல்களெல்லாம் நூலகங்களிலும், புலமையாளர்களினது வீடுகளிலும் வெறும் காட்சிப் பொருட்களாகவே இருக்கும். வேண்டாம் அந்த வேதனை. எழுத்தாளன், வாசகன், பதிப்பாளன் என்ற இந்த முத்தரப்பு சங்கமிப்பின் சுழற்சியில் இருப்பது பணமோ, நூலோ அல்ல, மாறாக. அதனுள் பொதிந்துள்ள கருத்தேயாகும். பணமும், நூலும் அக்கருத்தை சுமந்து செல்லும் வாகனங்களே. வாகனங்களுக்கு அழுத்தம் கொடுப்பதை விடுத்து கருத்தை செருமானஞ்செய்துக் கொள்ள அழுத்தங் கொடுங்கள்.

நன்றி

அன்புடன்
அ. கௌரிகாந்தன்

## அட்டைப்பட விளக்கம்

*இக்கொடி வைகுண்ட சுவாமிகளால் 1840களில் உருவாக்கப்பட்ட "அன்புக் கொடியாகும்". இது அவரின் "மக்கள் இயக்கத்தின்" கொடி. கொடிகண்ட முதல் காலனியல் கால தமிழன்.*

*இவரின் 42 வருட போராட்ட வாழ்க்கை, 1890களில் அகிலத்திரட்டு என்னும் நூலாக அறிகோபாலன் அவர்களால் ஆக்கப்பட்டுள்ளது. அந்நூல் பற்றி பொன்னீலன் அவர்களின் மதிப்பீடு.*

*"ஒப்புயர்வற்ற ஒரு காவியத் தலைவனின் முழுமையான செய்தியைச் சொல்லும் ஒரு காவியம் அது. அதைவிட மேலாக அது ஒரு புரட்சி நூல். பல நூறாண்டுகளாக ஏற்றத்தாழ்வுகளும், சுரண்டல் அடக்குமுறைகளும் மலிந்து கொடிகட்டி மனிதனை வளரவிடாமல் இறுக்கிக் கொண்டிருந்த இந்திய சமூகத்தை உடைத்து, சாதிய சமத்துவத்துக்கான பெரும் போராட்டங்களை இந்தியாவின் தென்கோடியில் தொடங்கி வைத்த புரட்சி நூல். தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே தருமம் என்று தர்மத்துக்கு புதிய விளக்கம் தந்த வைகுண்ட சுவாமியின் லட்சியங்களை மக்களுக்கு புரிய வைப்பதற்காகத் தோன்றிய புதிய தர்ம நூல். ஒடுக்கப்பட்ட மக்களின் புனிதமான வேதம். தென்பகுதி மக்கள் சலிப்பில்லாமல் படித்தும் கேட்டும் தங்களைப் பண்படுத்திப் பலப்படுத்தி கொள்ளும் மக்கள் கீதை." (அய்யா திரு அவதார தினம் திருச்செந்தில் சிறப்பு மலர் 1999 பக்கம் 77)*

*விடுதலை வேள்வி இவர்களை எல்லாம் நிராகரித்தது ஏன்?*

padippakam



# உள் நுழைய முன் சிலவார்த்தைகள்

எது இந்தப் புதிய கட்சி? காலாவதியாகி விட்ட இக்கட்சி பற்றிய ஆய்வுகள் எதற்காக தற்போது அவசியப்படுகின்றது? அதற்கான இன்றைய வரலாற்றுத் தேவைகள் என்ன? என்ற கேள்விகள் எழுப்பப்படுவது இயற்கையே.

மார்க்சியர்கள், தளமாற்றுவாதிகள் ஆகியோரை உள்ளடக்கிய முற்போக்கு ஜனநாயகவாத புலமையாளர்களால் இந்திய வரலாறு தொடர்பாக இதுவரை காலமும் முன்வைக்கப்பட்டு வந்த கருத்துக்கள், தொகுப்புக்கள், முடிவுகள், கருதுகோள்கள் ஆகியன அனைத்தையும் சனாதனவாதிகள் மிகத் துரிதமாக திரிபுபடுத்தியும் அழித்தும் வருகிறார்கள். தமது வர்க்க சாதிய மேலாண்மைப் பேணுகைக்கு அத்தியாவசியமான இந்த முன்நிபந்தனையை மிகச் சரியாகவே புரிந்து கொண்டுள்ளார்கள். புரிந்து கொண்டதை துரிதமாக நிறைவேற்றியும் வருகிறார்கள். இதன் மூலம் இவர்களின் வர்க்க சாதிய மேலாண்மையும், மேட்டுக்குடி நிலையும் மாறி வரும் சூழலுக்கு ஒப்புமீழ் உருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இந்திய உழைக்கும் மக்களும், ஒடுக்கப்பட்ட சாதியினரும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களும், ஒடுக்கப்பட்ட மொழிவழிக்குழுமங்களும், தமது வர்க்க சாதிய மேலாண்மைக்கான இசைவினை வழங்க வேண்டும் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகும்.

அன்ரோனியோகிராம்சியின் கீழ்வரும் கூற்று இதைத் தெளிவுபடுத்துகின்றது.

> "இந்த இசைவினைப் பெற்றுக் கொள்வதற்கு அது வைத்திருக்கும் கருவிகளாவன பாடசாலைகள், தேவாலயங்கள், பத்திரிகைகள், கட்சிகள், சங்கங்கள் ஆகியனவாகும். இவை மேலாதிக்கமுள்ள வர்க்கத்திற்கு துணையாகவுள்ள புலமைக் குழுக்களால் கையளிக்கப்பட்டு, வரலாற்றுப் பழைமையில் இருந்து உருவாக்கப்பட்ட கருத்து நிலைகளின் தொகுதிகள் வழியாக சுரண்டப்படும் மக்கள், செயல்முனைப்பற்ற கீழ்ப்படிவுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள்". (பெரி அண்டர்சன் : 1976 : பக் : 79 - 80) [3]

இந்திய புலமைத் தளத்தின் வரலாற்றியல் துறையில் வர்க்க - சாதிய போராட்டங்களும், ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களும் நடைபெற்று வருவது கண்கூடு. வர்க்க சாதிய முரண்பாடுகள் புதிய தளத்திற்கு நகர்ந்துள்ளதினதும், ஒடுக்கப்பட்டவர்களின் பக்கம் நிற்கும் புலமையாளர்கள் முன்பைவிட செயல்வீச்சுப் பெற்றவர்களாக வளர்ச்சி பெற்றுவருவதனதும், வெளிப்பாடுகளே இவைகளாகும். அதே நேரத்தில் அவர்கள் மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதையும் இது வலியுறுத்துகிறது. இப்பெரு முயற்சியில் ஒரு சிறு துளியே இந்நூலாகும்.

"புதிய கட்சியின் கொள்கைகள்" என்ற தலைப்பிலான நூலை 1907இல் சென்னையில் ஜனத்திரள் மத்தியில் வெளியிட்ட, அக்கட்சியின் சென்னை இராச்சிய செயலாளர் பாரதியின் கூற்றையே நோக்குவோம்.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam

# 17 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

"இந்தியாவின் தேசாபிமானிகளெல்லாம் ஒரே நோக்கத்துடன் நன்றாக உழைத்துக் கொண்டிருந்தபோது அதனிடையே சிலர் புதிய கட்சி என்பதாக ஒன்றைக் கொண்டு வந்து பழைய கட்சிக்கும் புதிய கட்சிக்கும் வேற்றுமையுண்டாக்கி தேசாபிமானக் கூட்டத்தை சின்னாபின்னம் செய்திருக்கிறார்களென்பதாக சிலர் சொல்லுகிறார்கள். இவர்கள் சொல்லுவது சரியாகத் தோன்றிய போதிலும் நன்கு யோசிக்குமிடத்து அது ஆலோசனையற்ற வார்த்தை என்பது விளங்கும். புதிய கட்சி எவ்வாறு தோன்றிற்று என்பதை இவர்கள் சிந்திப்பார்களானால் இவ்விதமாகக் குறைகூற முற்பட்டிருக்க மாட்டார்கள்".[4]

இதோ மேலும் கூறுகிறார்

ஆனால் இந்தியாவிலே இப்போது ஒரு புதிய கட்சி ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் கட்சியார் உதட்டனுதாபத்திலும் வெகு சாமர்த்தியமான உபந்நியாசங்களிலும் மயங்க மாட்டோமென்கிறார்கள். நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணமிருப்பதாக நீ கள்ளச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு சொன்னால் மட்டும் போதாது. அதை உடனே நடவடிக்கையில் செய்து காட்டிவிட வேண்டும். இன்றே செய்திடல் வேண்டும் அதனை (இங்கே) செய்தலும் வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தக் கட்சியார் மட்டும் மார்லியின் ஆச்சரியகரமான உபந்நியாசத்திலே தலைகிறுங்கிப் போக உத்தேசமில்லாமலிருக்கிறார்கள்...[5]

இப்புதிய கட்சிக்கும், காங்கிரஸ் மிதவாதிகளுக்கும் இடையே ஒரு கடுமையான போரே நடைபெற்று வந்தது. புதிய கட்சியின் வரலாறு என்பது பிரதானமாக இப்போரேயாகும். இப்போரில் புதியகட்சியின் இந்தியத் தலைவர்களில் ஒருவரான அரவிந்தர் எவ்விதம் நடந்து கொண்டார் என்பது இந்நூல் வரிசையில் விவரிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய ஓர் முன்னுரையாக பாரதியாரின் ஒரு கூற்றை மட்டும் பார்ப்போம்.

"இந்தியாவிற்கு கனடா, ஆஸ்ட்ரேலியா போல சுயாட்சி கிடைத்தாலன்றி அது செல்வமும் பெருமையும் அடையாது. அந்தக் காலம் வரையில் வறுமையும், சிறுமையும்தான் அதன் கதியாகும். ஆகையால் பிரிட்டிஷார் இதை பகிரங்கமாக ஒப்புக் கொண்டு அதற்கு அவசியமான திருத்தங்களை கபடமில்லாமலும் பயமில்லாமலும் ஜனங்களின் ராஜவிஸ்வாசத்தையும் புத்தியையும் நம்பிச் செய்ய வேண்டுமென்பது தாதாபாயின் அபிப்பிராயம். விபின சந்திரபாலைப் போன்றவர்கள் ஒரே தடவையில் இரண்டடி வைக்க வேண்டுமென்றால் தாதாபாய், கோகலே, மேட்டா, தத் இவர்களைப் போன்றவர்கள் ஒரு அடிதான் சாவதான (சாத்திய)மாகுமென்கிறார்கள். இந்தியாவில் இந்த வேற்றுமையைத் தவிர வேறு வேற்றுமையில்லை. பிரிட்டிஷ் ராஜ்ஜியம் ஒய்ந்து போகவேண்டுமென்று புத்தி பூர்வமாய் சொல்லும் இந்தியனில்லை. அப்படிச் சொல்கிறவன் பைத்தியக்காரனாகவே இருக்க வேண்டும். பிரிட்டிஷ் ராஜ்ஜியம் ஒய்ந்து போனால் பெங்காளிகளா, மகாராஷ்டிரர்களா, சீக்கியர்களா யார் ராஜ்ஜியத்தை ஏற்று நிர்வாகம் செய்வார்கள்? முகமதியர்

**தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —**

படிப்பகம்

padippakam



ஹிந்துக்களுடைய ஆதிபத்தையும் ஹிந்துக்கள் முகமதியருடைய ஆதிபத்தையும் ஏற்பார்களா? அப்படி ஏற்கும் காலம் வரவே மாட்டாதென்று நாம் சொல்லவில்லை. வரவே வரும் நிச்சயமாய் வரும். ஆனால் இப்போது வந்துவிடவில்லை. [6]

முதலிலே எப்படிப்பட்ட விருப்பம் பைத்தியமென்று சொல்லப்படுகிறதோ அதே விருப்பம் இறுதியில் அப்பத்திரிக்கையாலேயே உணர்த்தப்படுகின்றது. இன்றைக்கே பிரிட்டிஷார் இல்லாமல் போய்விடும் பட்சத்தில் பெங்காளிகள், மஹாராஷ்டிரர், சீக்கியர் முதலிய ஜாதியார் வந்து நம்மைக் கழுத்தைத் திருகி விடுவார்களென்று இப் பத்திரிக்கை எழுதியிருப்பதை நினைக்க நமக்கு நகைப்புண்டாகிறது. ஐயோ, பாவம். பெங்காளி பிசாசுகளின் கைவசப்பட்டால், நாம் அமிர்தரூபமான பிரிட்டிஷ் சகோதரர்களின் கீழிருக்கும் ஆனந்தத்தை சுதேசமித்திரன் பத்திரிக்கை தலைவர் நெடுங்காலம் அனுபவித்துக் கொண்டிருக்கட்டும்.

காலனியல் இந்தியாவின் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் புதிய கட்சியினரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட போராட்டம் சுதந்திரப் போராட்டமா அல்லது சுதந்திரப் போராட்ட பின்னணியில் நடந்த ஒரு பிராமண - சைத்திரிய மோதலா என்பது ஆராயப்பட வேண்டும்.

காலனியல் கால இந்திய சமூக உருவாக்கம் தனி ஒரு வர்க்கத்தின் வர்க்க மேலாண்மையில் உருவாக்கப்பட்டதல்ல. தரகு முதலாளிகள் நில உடமையாளர்கள் என இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தார்கள். இவ்விரு பிரிவினருமே இந்திய மேட்டுக் குடியினரின் இருபெரும் தனித்தனி அணியாகத் திகழ்ந்தார்கள். பிரித்தானியர்களால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்த மன்னராட்சி முறை நில உடைமையாளர்களுக்கு சாதகமாக இருக்க, அதே பிரித்தானியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வித் திட்டமும், புதிய பொருளாதார நடைமுறைகளும் தரகு முதலாளிகளுக்கு சாதகமானதாக இருந்தது. இவ்விரு சாராரும் தத்தமது வர்க்க சாதிய நலனுக்கொப்ப இந்திய தேசியத்தை உருவகப்படுத்த முற்பட்டார்கள். அதற்காக தமக்குள் கடுமையாக மோதியும் கொண்டார்கள். இவ்விருவரையும் சமாதானப்படுத்தி, இவ்விரு சாராரையும் மிதவாத நெறிகைப்படுத்தி ஒரே அமைப்புக்குள் கொண்டு வர எம். கே. காந்தி எடுத்த முயற்சி வெற்றி பெறும் வரை (1920 வரை) இப்போராட்டம் தொடர்ந்தது. இந்த பிராமண - சைத்திரிய மோதல் இந்திய வரலாற்றுக்கு ஒன்றும் புதியதல்ல.

இதுபற்றி ரவீந்திரநாத் தாகூர் கூறுவதை அவதானிப்போம் [7]

"ஒவ்வொரு குலத்தைச் சேர்ந்த ஆரியர் கூட்டத்துக்கும் குலபதி ஒருவர் உண்டு. இவர்கள் தத்தமக்குரிய முறையில் தோத்திரப் பாக்களையும், தேவதைகளை இன்னவிதத்தில் திருப்தி செய்ய வேண்டும் என்ற விதி வகைகளையும் பேணி வந்தார்கள். இவற்றை நன்றாக அறிந்தவர்களுக்கே புகழும் பொருளும் முதலிடமும் உண்டு. உலோபியிடம் சிக்கிய அருந்தனம் போல் இந்தக் கல்வி கேள்விகள் நாளடைவில் ஒரு சாராருக்கே உரியனவாகி மற்றவர்களுக்குக் கிட்டாது போயின. இந்த ஒரு சாராரே



படிப்பகம்

padippakam

## 19 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

இவற்றில் சிறந்த பயிற்சியும், தேர்ச்சியும் பெற்று விளங்கினார்கள். அவர்கள் தான் பிராமணராகும்.

ஆரிய வீரர்களில் சிறந்து விளங்கியவர்கள் எல்லோரும் சத்திரிய குலத்தை வளர்த்தார்கள். பகைவர்களுடன் போர் புரியும்போது ஒன்றுபட்டு உயிரைவிடத் துணிந்தவர்களை எந்த வேற்றுமையுணர்ச்சியும் தடை செய்ய முடியாது. வீரமே தமது இலட்சியம் என்று அவர்கள் கருதி வந்ததால் தமக்குள் சில்லறை வேற்றுமை இருந்தாலும் அதைப் பெரிதாகப் பாராட்டவில்லை. மிகவும் நுண்ணிய மந்திரங்களையும், தெய்வ வழிபாட்டையும், வேள்வி முதலிய சடங்குகளையும் காக்கும் பொறுப்பு அவர்களுக்கு இல்லை. எளிதில் மனிதன் செல்ல முடியாத இடங்களிலெல்லாம் பலவகை இடையூறுகளைக் கண்டு வளர்ந்தவர்கள் அவர்கள். ஆகவே பழக்க வழக்கத்தால் ஏற்பட்ட வெளிக்கட்டுத்திட்டங்களில் அவர்களுக்கு அவ்வளவாக ஈடுபாடு இல்லை. தற்காப்பு, குடியேறும் முயற்சி ஆகிய இவற்றிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து ஆரியர்களுள் ஒற்றுமையை வளர்க்கும் பொறுப்பு சத்திரியர்களிடம் இருந்து வந்தது.

இந்த விதமாகச் சமூகத்திலே முரண்பட்ட நோக்கங்கள் தலைதூக்கின. அதன் விளைவாக இருவகைத் தெய்வங்கள் உருவாகின. பழைய வேத மந்திர தந்திரச் சடங்குகளிலே அவற்றின் அதிதேவதையாக விளங்குபவர் பிரம்மா, புதிய கருத்தை கடைப்பிடித்தவர்களின் தெய்வம் விஷ்ணு. பிரம்மாவின் நான்கு முகங்களும் நான்கு வேதங்கள். அவை என்றென்னும் தியானத்தில் ஈடுபட்டவை. விஷ்ணுவுக்கு நான்கு கைகள். அவை முறையே (சங்கு) புதிய புதிய துறைகளில் நலமே ஓங்க வேண்டும். வேற்றுமையைப் போக்கி ஒற்றுமையை நிலைநிறுத்த வேண்டும் (சக்கரம்), ஆட்சி முறை பரவ வேண்டும் (கதாயுதம்) எங்கும் அழகு நிலவ வேண்டும் (பத்மம்) என்று முயலுபவை.

இப்படித் தொழில் முறையால் பிராம்மணர்களுக்கும் சத்திரியர்களுக்குமிடையே தோன்றிய வேறுபாடு கருத்து வேற்றுமையாக வந்து முடிந்தபோது ஒரு பெரும் புரட்சி ஏற்படுவது இயல்புதானே? எரிமலை குமுறி எந்நேரத்திலும் வெடித்து என்ன ஆபத்து வேண்டுமானாலும் நேரலாம் என்பது போன்ற நிலை அது. வசிஷ்டர், விசுவாமித்திரர் இவர்களுடைய வரலாற்றிலும் இந்தப் புரட்சியின் அறிகுறியைக் காணலாம்.

இந்தப்புரட்சியில் பிராம்மணர்கள் வசிஷ்டரையும், சத்திரியர்கள் விசுவாமித்திரரையும் தத்தமக்குரியவர்களாகக் கொண்டார்கள்.

ஆகவே பாரத நாட்டின் அதி மகா காவியங்கள் இரண்டிலும் ஆரிய சமூகத்தில் நிகழ்ந்த பெரும் புரட்சியே முக்கிய இடம் பெற்றிருக்கிறது என்று சொல்ல வேண்டும் பழமைக்கும் புதுமைக்குமிடையே நடந்த போராட்டமே இது. வசிஷ்டருடைய சநாதன தருமமே இராமனுடைய குல தருமமாக இருந்தது. வசிஷ்ட வம்சமே



படிப்பகம்

padippakam



அவனுடைய குல புரோகிதர்களின் பரம்பரையாகவும் இருந்தது. அப்படி இருந்தும் சிறு வயதிலேயே இராமன் வசிஷ்டருடைய எதிரியான விசுவாமித்திரரைப் பின் தொடர்ந்து சென்றான். ஏன், தகப்பனுடைய விருப்பத்தையும் மீறி (உளப்பூர்வமாக தசரதர் இராமனை விட்டுப் பிரிய உடன்படவில்லை). விசுவாமித்திரர் இராமனை அழைத்துச் சென்றார்.

காலனியல் கால பாரதம் பிராமணர், சைத்திரியர் என இரு தனித்தனிக் கூறுகளாகப் பிரியவில்லை. ஆனால் தரகு முதலாளித்துவ அணி, சீர்திருத்த, மிதவாத பார்ப்பனியத்தை முதன்மைப்படுத்தியது. நிலஉடமை அணி, தீவிரவாத பார்ப்பணியத்தை முதன்மைப்படுத்தியது. இதுவே சைத்தரிய குணாம்சங் கொண்டதாகவும் இருந்தது. இருமுகாம்களுக்கும் தலைமை தாங்கியது பார்ப்பனியர்களேயாகும். அதிலும் சித்பவ பிராமணர்களேயாகும். சைத்திரிய அணி சிவாஜியை தனது குறியீடாக உயர்த்திப்பிடித்தது. திலகரும் அரவிந்தரும் விஸ்வாமித்திரர்களாகச் செயற்பட, கோகுலேயும் பனார்ஜியும் வசிட்டர்களாகச் செயற்பட்டார்கள்.

இதனால்தான் அரவிந்தரும் புதிய கட்சியும் பற்றிய இந்நூல் அரவிந்தமகரிஷி சைத்திரியத் தேடலில் என தலைப்பிடப்பட்டது.

இவ்விதமாக உயர்வர்க்க, ஆதிக்க சாதிய தேசியம் இருகூறுகளாகப் பிரிந்து நின்றன. இப்பிரிவுகள் பிரித்தானியருடன் தமக்கு இருக்க வேண்டிய உறவுநிலை தொடர்பாகவும், தமது அதிகாரத்தை தொடர்ந்து பேணுவது தொடர்பாகவும், அதை மறு உற்பத்தி செய்து கொள்வது தொடர்பாகவும், தமக்குள் போரிட்டுக் கொண்டன. இப்போராட்டந்தான் ஆரம்பகால இந்திய சுதந்திரப் போராட்டமாக அர்த்தப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்திய உழைக்கும் மக்களின், இந்திய ஒடுக்கப்பட்ட சாதியினரின் தேசியம் தனது இருத்தலை இந்த சுதந்திரப் போராட்டத்திற்கு உடன்பாடாக பதிவு செய்து கொள்ளவில்லை. மிதவாதப் பார்ப்பனிய சத்திரிய கூட்டுடனோ அல்லது தீவிரவாத சத்திரிய பார்ப்பனிய கூட்டுடனோ தம்மை இனங்காட்டிக் கொள்ளவுமில்லை. அவ்விதம் பதிவு செய்திருந்தால், அல்லது இனங்காட்டியிருந்தால் அது பிற்போக்கானதாகவே அமைந்திருக்கும்; நிலவுடமைப் பண்பாட்டு மேலாண்மைக்கு எதிராகப் போராட முடியாமல் போயிருக்கும் மக்கள் ஜனநாயகத் தலைவர்கள் என்ற அந்தஸ்தைப் பெறமுடியாமல் போயிருக்கும். ஆனால் ஏகாதிபத்தியத்திற்கு இடையேயான போராட்டத்தில் தமது இருத்தலை தனித்துவமாக பதிவு செய்யாமல் விட்டது நிச்சயமாக முற்போக்கானதல்ல.

இச்செயல்நெறிகள் எவ்விதம் தம்மை வெளிப்படுத்திக் கொண்டன என்பதை எடுத்தியம்புவதே "தீண்டப்படாதவர்களால் தீண்டப்படத புதிய கட்சி" (நூல் வரிசை 1) என்ற இந்நூலின் பிரதான நோக்கமாகும். "புதிய கட்சியினரின் நொண்டித் தேசியம்" (நூல் வரிசை 2) என்ற நூலும் இதே விசயத்தை, ஆனால் புதியகட்சியினரின் இந்த அரசியல் நிலைப்பாட்டிற்கான காரணத்துடன் ஆராய்கிறது.

## புதிய கட்சி

padippakam

21 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

# அரவிந்தரின் கருத்துநிலை

(பிறர் பார்வையில்)



1920

## சுபாஷ் சந்திரபோஸ்

இந்திய தேசியத் தலைவர் சுபாஸ்சந்திரபோஸின் வார்த்தைகளில்:

பெரும்பான்மையான தலைவர்கள் தமது நாக்குகளை தமது பற்களுக்கிடையே பாதுகாப்பாகச் செருகி வைத்துக் கொண்டு, காலனியல் சுய அரசாங்கத்தைப் பற்றி மட்டுந்தான் பேசுவேன் என விரதம் இருந்த காலையில் அரவிந்தர்தான் மிகத் துணிச்சலாக சுதந்திரத்திற்காக வாதாடுபவராகவும் காங்கிரஸ் மேடைகளில் இடது அணிக் கருத்துக்களின் முன்னணி பாதுகாவலராகவும் வீறுநடை போட்டு வந்தார். நிலைகுலையாத அமைதித் தன்மையின் சிறந்த உறைவிடமாகத் திகழ்ந்தார்.

.... நான் 1913இல் கல்கத்தா வந்தபோது அவர் மிகப் பெருமளவிற்கு பொதுஜன அங்கீகாரம் பெற்ற ஒரு மனிதராக இருந்துள்ளதை அறிந்து கொண்டேன். இந்தளவுக்கு உற்சாகமாகவும், மனப்பூர்வமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவரை நான் மிக அரிதாகவே கண்டுள்ளேன். பலர் இந்த மகத்தான மனிதரின் அடிப்பாதையைப் பின்பற்றுபவர்களாகவே இருந்தனர். இவர்களில் சிலர் உண்மையாகவும் விசுவாசமானவர்களாகவும் இருந்து இவர் பற்றிய கருத்துக்களை வாய்வழி வாய்வழியாகப் பரப்புவர்களாய் இருந்தார்கள்.[8]

## *எஸ். தோத்தாத்திரியின் பார்வையில்*

இந்தியத் தத்துவத்தின் சில போக்குகளை அரவிந்தர் விமர்சனம் செய்கிறார். ஆன்மீகவாதிகள், பொருள்முதல்வாதிகள் ஆகியோரின் நிலைகள் சரியல்ல என்பது அரவிந்தரின் கருத்து. இந்திய ஆன்மீகவாதிகள் பொருளை அறவே மறுக்கின்றனர். உலகம் என்பதே பொய் அல்லது தோற்றம் அல்லது ஆண்டவனது லீலை என்கின்றனர். உலகாயதவாதிகள் ஆன்மாவை மறுக்கின்றனர். பொருள் மட்டுமே உண்மை என்கின்றனர். ஐரோப்பியத் தத்துவத்திலும் இதே போக்கினைக் காண முடியும். இது தத்துவத்தில் பொருள்முதல்வாதத்திற்கும், கருத்து முதல் வாதத்திற்கும் இடையிலான போராட்டம் எனப்படுகிறது. அரவிந்தர் இந்த நிலைப்பாட்டைச் சரியல்ல என்கிறார். இப்பிரச்சினைக்குரிய தீர்வு மூன்றாவது வழியில் உள்ளது என்றும் அவர் கூறுகிறார். அதுதான் அவர்கூறும் ஒருங்கிணைந்த அமைப்பு ஆகும்.

இந்த ஒருங்கிணைந்த அமைப்பு என்பது என்ன? இந்திய ஆன்மீகவாதிகள் கூறும் பிரம்மத்தை அரவிந்தர் ஏற்றுக் கொள்கிறார். இந்த பிரம்மத்தினை எல்லையற்றது. எல்லாம் கடந்தது. குணமற்றது என்று அவர் கூறுகிறார். இதற்கு அடுத்த கட்டமாக எல்லைக்குட்பட்ட பிரம்மம் பற்றி பேசுகிறார். இது இந்தியத் தத்துவத்தில் சகுண பிரம்மம் என்று

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

padippakam



அழைக்கப்படுகிறது. எல்லையற்ற பிரம்மம் என்பது உணர்வு அல்லது மனதைக் குறிக்கும்.. எல்லைக்குட்பட்ட பிரம்மம் பொருள் சம்பந்தமானது. அரவிந்தரது கருத்துப்படி பொருளும், உணர்வும் பிரம்மத்தின் இருவேறு குணங்கள் ஆகும். பொருள், பிரம்மம் ஆகிய இரண்டையும் அவர் இணைத்துக் காண்கிறார். இது ஏறத்தாழ இராமானுசர் எடுத்த நிலைப்பாடு ஆகும்.

அரவிந்தரது தத்துவத்தில் கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதத்துடன் இணைவதைக் காண முடிகிறது. இந்த நிலைப்பாடு அவர் காலத்திய வெகுஜனப் போராட்டத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்பின் வெளிப்பாடு ஆகும். [9]

## *அரவிந்தர் பற்றி தேவி பிரசாத் சட்டோபத்தியாய ;*

இவர் அரவிந்தரின் தத்துவவியல் பற்றிய ஆய்வை மேற்கொண்ட வங்காளப் புத்திஜீவியாகும். 12 வருடங்கள் ஆய்வு செய்துள்ளார். அரவிந்தரை ஆய்வு செய்வதற்கு முன்னர் இவர் மாக்சிஸம் கற்றார். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்றி சமுகத்தில் ஒரு பொருளாதார செழுமையை ஏற்படுத்துவதில் இவர் மார்க்ஸிஸத்தை மிக ஆர்வமுடன் பின்பற்றினார். ஆனால், மார்க்ஸின் கடவுள் நிராகரிப்பு கொள்கையை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் தான் இவரின் பல்கலைக்கழக ஆசிரியரால் இவருக்கு அரவிந்தர் அறிமுகப்படுத்தப்பட்டார். அதன்பின் கடவுளுக்கு அரவிந்தரையும், பொருளாதார செழுமைக்கு மார்க்ஸையும் ஆதரிக்கத் தொடங்கினார். தனது ஆய்வின் விளைவாக “ சிறி அரவிந்தர் & மார்க்ஸ்” என்ற தனது 400 பக்க நூலை எழுதினார். அந்நூலின் முன்னுரையில் அரவிந்தர் பற்றிய இவரின் கணிப்பீடுகளைத் தருகிறோம்.

“ஒருவர் என்ன செய்கிறார், என்ன கற்கிறார் அல்லது எதைத் தெரிந்து வைத்திருக்கிறார் என்பவற்றை மட்டும் வைத்துக் கொண்டு ஒருவரின் உண்மையான சுயசரிதத்தை உருவாக்க முடியாது என அவர் கருதினார். ஆனால் உண்மையில் ஒருவர் என்னவாக இருக்கிறார் உள்ளூர எவ்விதம் உருவாகி வருகிறார் என்பதை வைத்துக் கொண்டுதான் ஒருவரின் சரிதத்தை கணிக்கமுடியும்.

சுயசரிதம் பற்றி கொலிஸ்உன்ஸ் என்பவரும் இதைப் போன்ற வார்த்தைகளையே சொல்லியுள்ளார். ஒரு சிந்தனையாளனின் உண்மையான வாழ்க்கைக் கதை அவனின் இருத்தலின் ஆன்மீக ஆழத்தில் தான் இருக்குமேயன்றி மேற்பரப்பில் தென்படும் அவனின் சிந்தனை மட்டத்தில் அல்ல எனக் கூறவும் கூடும். எனது வாழ்க்கையை எழுதுவதில் உங்கள் கரங்களை ஈடுபடுத்தாதீர்கள் என அரவிந்தர் தனது வாழ்க்கைக் கதையை எழுதக் கூடியவர்களிடம் கேட்டுக் கொண்டார். ஒருவர் இன்னொருவரின் வாழ்க்கையின் மேற்பரப்பைத் தான் காண முடியுமே தவிர அதன் உள் நிகழ்வுகளைக் காண முடியாது. ‘எனது கடந்த கால சம்பவங்களின் உண்மையான வடிவங்களையும் அதன் முக்கியத்துவங்களையும் பேசக்கூடிய ஒரே நபர் நானாக



படிப்பகம்

padippakam



மாத்திரமே இருக்கும்,' என அவர் கூறினார்." [10]

*சிந்தனைக்கும் செயலுக்கும் இடையே இருக்க வேண்டிய, இருந்து வருகின்ற பிணைப்பை நிராகரிக்கின்றார். சிந்தனை என்பது செயலால் வெளிப்படுத்தபட முடியாமல் வேறு எவருக்கும் தெரியாமல் உறைந்து வாழும் ஒன்று என்கிறார்.. சந்தர்ப்பம் கிடைக்காததால் சிந்தனை முழுமையாக வெளிப்படுத்தப்படாமல் இருக்கலாம். ஆனால் செயலானது ஒருவரின் வாழ்க்கையில் வெறுமனேயொரு மேற்பரப்பல்ல, அது அவரின் சிந்தனையின் குழந்தை.*

அரவிந்தர் பற்றிய டி.பி. சட்டோபதியாவின் போற்றுதல் இதைமேலும் உறுதிப்படுத்துகின்றது.

"அரவிந்தர் ஓர் பல்துறை ஆளுமைமிக்கவராவார். சாதாரண மக்களுக்கு அவர் ஒரு மாயாவாதயோகி. தத்துவார்த்த வட்டத்தினுள் இவர் உளம் பற்றிய மெய்விளக்க இயலின் புதிய சிந்தனை முறையின் கண்டுபிடிப்பாளராகும், லைப் டிவைன் என்ற இவரது தத்துவ நூல் தான் விரிந்துள்ள பரப்பளவிலும் ஒழுங்குமுறையாக முன்வைக்கப்பட்டிருத்தலிலும் மிகவும் வியக்கத்தக்கதாகவும் நேர்த்தியானதாகவும் அமைந்துள்ளது. ஒரு சமூகவியலாளன், வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தத்துவவாதி என்ற முறையிலான இவரின் புகழ் மிக உறுதியான அடித்தளத்தைக் கொண்டதும் பரவிப் பரந்ததுமாகும். சிலர் இவரின் இலக்கிய அழகுணர்வையும் மிக உயர்வாக வியந்து போற்றியுள்ளார்கள். அவரின் சீடர்களுக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் இவர் ஓர் அவதாரமும் மீமனிதனுமாகும். ஸ்ரீ அரவிந்தர் பற்றிய இந்த அனைத்து கண்ணோட்டங்களுடனும் ஒருவர் அவரை இணக்கங்காண வேண்டுமென்பது அவசியமல்ல. ஆனால் அவரின் வாழ்க்கையையும் படைப்புகளையும் மிக அண்மித்து அவதானிக்க விரும்புகிறவர். அவர் ஓர் அசாதாரண ஆளுமை என்பதையும் ஆக்கப்பூர்வமான மேதை என்பதையும் புரிந்து கொள்வார்.

பாண்டிச்சேரிக்கு முன்பான தனது வாழ்க்கைப் பகுதியைப் பற்றிக் கூறும்போது நான் ஒரு கவிஞனாகவும், ஒரு அரசியல்வாதியாகவும் இருந்தேன் என்கிறார். தனது அரசியல் மற்றும் தத்துவார்த்த சிந்தனைகள் உட்பட்ட ஆக்கப்பூர்வமான சாதனைகள் அனைத்துக்குமான காரணமாக யோகாப் பயிற்சியைத் தான் குறிப்பிடுகிறாரே தவிர தனது கல்வியையும் ஆய்வையும் குறிப்பிடவில்லை." [11] தனது சிந்தனையின் பலமான அம்சங்களாக தர்க்கரீதியான காரணங் கற்பித்தலும் பகுப்பாய்வுகளும் அமையவில்லை என்பதை அரவிந்தர் நன்றாகவே புரிந்துள்ளார்.

"ஸ்ரீ அரவிந்தரின் எழுத்துக்களின் 29 தொகுதிகளில் (பிறந்த நூற்றாண்டு நூல் நிலையம்) இருந்து நாம் காண்பது அவர் ஓர் பண்டிதரோ அல்லது கல்விமானோ அல்லர் என்பதையும் அவர் ஓர் ஆக்கப்பூர்வமான எழுத்தாளன் என்பதையுமேயாகும். நூல் கல்வியிலான அவரின் அரைகுறை மனத்தயக்கத்தையும் இதன் காரணத்தால் இவரால் பேர்க்ஸி, கான்ட் மற்றும் ஹெகல் ஆகியோரின் தத்துவார்ந்த நூல்களை கற்கமுடியாமல் போனதையிட்டும் அவரே ஒத்துக் கொண்டுள்ளார். தத்துவவியல் மற்றும் சமூகவியல் துறைகளில் அவ்வப்போதான (அப்பப்போவான) இலக்கியங்களைக்



படிப்பகம்

padippakam



கிரகித்துக் கொள்வதில் ஒப்பு நோக்கில் பின்தங்கியிருந்த அவரின் குறைபாடு வெளிப்படையானதே. இதனால் அரவிந்தரின் வாசிப்புப் பரப்பளவு மிக அகன்றதல்ல என்று அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. அவரின் ஆழ்ந்த ஈடுபாடும், சொந்த ஆக்கத்திறனும் மற்றும் ஆக்கப்பூர்வ செயற்பாடுகளும் அதிகமதிகமான நற்பயன்களைக் கொடுத்துள்ளன. பரந்தளவில் சொல்வதானால், இருவகையான ஆக்கப்பூர்வ எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். தாம் எடுத்துக் கொண்ட விசயத்தில் பிற நூலாசிரியர்களும் சிந்தனையாளர்களும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது பற்றிய போதிய புரிதல்கள் இல்லாமலேயே தமது கண்ணோட்டத்தை மாத்திரம் வெளிப்படுத்துவதில் ஆர்வமுள்ளவர்கள் முதலாவது வகை. தமது சொந்தக் கருத்தை உருவாக்கிக் கொள்ள முற்படுமுன்னர், மிகக் குறிப்பாக தாம் எடுத்துக் கொண்ட விசயம் தொடர்பாக பிறர் கூறியிருப்பதை விமர்சிப்பதில் அதிக சிரமம் எடுத்துக் கொள்பவர்கள் மற்றோர் வகை. ஸ்ரீ அரவிந்தரும், விட்டஸ்ரீனும் முதலாவது வகையைச் சேர்ந்தவர்களாவர். ” [12]

அறிவுக்கும் நடைமுறைக்கும் இடையேயான தொடர்பைப் பொறுத்தவரையில் கூட, நடைமுறையிலிருந்து தான் அறிவு பிறக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்களே இந்த முதலாவது வகையினராவர். நடைமுறையென்பது ஒருவரினதோ, ஒரு அமைப்பினதோ சொந்த நடவடிக்கைகள் மாத்திரமல்ல. பலரின் நடவடிக்கைகளாகும்; சமகால நடவடிக்கைகள் மாத்திரமல்ல முன்னைய நடவடிக்கைகளுமாகும். இந்த முன்னைய நடவடிக்கைகளின் அனுபவந்தான் நூல்களாகும். நடைமுறையில் இருந்து அறிவுக்கும் அறிவில் இருந்து நடைமுறைக்கும் என்ற தொடர் நிகழ்வினூடாகத்தான் செழுமையான அறிவும், செழுமையான நடைமுறையும் பிறக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அதை நிராகரித்து தமது சொந்த சிந்தனைக்கே அதிக அழுத்தம் கொடுக்கிறார்கள். இதனால் இவர்களின் அறிவு கற்பனைகளாக, நடைமுறைக்குப் பொருந்தாதாக மாறுகிறது.

அரவிந்தர் மாத்திரமல்ல, பெரும்பான்மையான சனாதன இந்து தேசியவாத தலைவர்களும் இதே வழிமுறையைத்தான் பின்பற்றியுள்ளார்கள். வ.வே.சு.ஐயர், சாவர்க்கர், கொடியேந்திய பெண்மணி காமா ஆகியோர் அரவிந்தர் வரிசையில் மேலும் சிலராவர். இவர்கள் தாம் ஐரோப்பிய நாடுகளில் இருந்தபோது அங்கு ஏற்பட்ட தத்துவவியல், சமூகவியல், உளவியல் அறிவு வளர்ச்சியுடன் தம்மை இணைத்துக் கொள்ளவேயில்லை. அரசியல் ரீதியில் சமதர்மவாதிகளுடனும், லிபரல் கட்சியினருடனும் நட்பு இருந்துங்கூட அரசியல் உறவுக்கப்பால் இந்த நட்பை அடுத்தடுத்த துறைகளுக்கு வளர்த்துச் செல்லவில்லை. தமது சனாதன தர்ம கற்பனைகளுக்குள்ளேயே அமிழ்ந்திருந்தார்கள். அதைப் பிற தத்துவவியலுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூட விரும்பவில்லை.

அரவிந்தர் பற்றிய சட்டோபாத்தியாவின் கீழ்க்கண்ட மதிப்பீடு இதற்கு சிறந்த விளக்கமாகவுள்ளது.

மார்க்ஸ் மற்றும் ஸ்ரீ அரவிந்தர் ஆகிய இருவரினதும் அடிப்படைச் சிந்தனையோட்டத்தைப் பற்றிய எனது ஒப்புநோக்கு கல்வியானது உளவியலின் தனித்தியங்கு



படிப்பகம்

padippakam



தன்மை மற்றும் சமூகவியலின் தனித்தியங்கு தன்மை ஆகிய இரு பெயர் பெற்ற எதிரும்புதிருமான தர்க்கங்களை மையமாகக் கொண்டதாகவே இருந்தது. சமூகவியலின் தனித்தியங்கு தன்மை என்ற சிந்தனைப் பள்ளியின் ஆசானாக மார்க்சும், உளவியலின் தனித்தியங்கு தன்மை என்ற சிந்தனைப் பள்ளியின் நல்லதோர் மாணவனாக ஸ்ரீ அரவிந்தரும் இருந்தனர். இருவரில் எவருமே இவ்விவகாரத்தையிட்டு எதிர்தரப்பின் விவாதத்தின் வீச்சை புறக்கணிக்கும் அளவிற்கோ அல்லது கணக்கில் கொள்ளாமல் விடுமளவிற்கோ மலிவான நபர்களல்லர்.

மார்க்ஸால் முன்வைக்கப்பட்ட இயக்கவியல் சமூகவியல் தத்துவத்தின்படி தனித்தியங்கு உளவியல் என்பது வெறுமனே ஒரு தோற்றளவிலான வெளிப்பாடு மாத்திரமே தான் என்பதை விளங்கவைக்க மார்க்சியர்கள் கடுமையான முயற்சிகள் எடுத்ததுடன், இதை சமூகத்தின் அடிக்கட்டுமான கூறுகள் மற்றும் செயற்பாடுகளுக்கும் மேல் கட்டுமானக் கூறுகள் மற்றும் செயற்பாடுகளுக்கும் இடையேயான சீரமைவுத் தொகுதித்தன்மை பெற்ற (சிக்கலான), காரணத்தோடு கூடிய உறவுகளுடன் தொடர்புபட்டதொன்றாகவும் விளக்க முனைந்தார்கள்.

அடுத்த பக்கத்தில் ஸ்ரீ அரவிந்தரின் முழுமை நிலைச் சமூகவியல்* என்ற தத்துவமோ, மார்க்ஸின் தத்துவத்தை, மார்க்ஸின் வார்த்தையிலேயே சொல்வதானால், தலை கீழாகப் புரட்ட கடுமையான, ஒழுங்குமுறையான நடவடிக்கை எடுத்துவந்தது. எமது சமூக அரசியல் கட்டுமானம் முழுமையுமே தனது இருப்பிற்கும் முக்கியத்துவத்திற்கும் சில ஆழமான உளவியல் சக்திகளில் தங்கியிருக்கின்றது என்பதையும் இந்த உளவியல் சக்திகளோ தனித்துவமிக்க மற்றும் செயலாக்கமுள்ள ஆன்மீக உயரிகளிலிருந்தே உதயமாகின்றன என்பதையும் நிருபிப்பதே ஸ்ரீ அரவிந்தரின் முயற்சியாக இருந்தது. ஹெப்பன்ஸ், நௌசியு, லிக்கோ, ஹெகல், கொம்ட், மில் மற்றும் மோர்கன் போன்ற பெயர் பெற்ற அறிவாளிகள் சம்பந்தப்பட்டு பல நூற்றாண்டுகளாக நடந்துவரும் சுவையான, பழமையான கருத்துப் போராட்டம் ஒன்றின் ஆக்கப்பூர்வமான தொடர்ச்சிதான் இந்த மார்க்ஸ் அரவிந்தர் கருத்து மோதலாகும் என்பதை ஒரு சமூகவியல் வரலாற்று மாணவன் மறப்பதற்கு எந்தக் காரணமுமில்லை. [13]

இயங்கியலுக்கும் இயக்க மறுப்பியலுக்கும், பொருள் முதல்வாதத்திற்கும் கருத்துமுதல்வாதத்திற்கும் இடையே நடைபெற்றுவந்த போராட்டத்தையே சட்டோபத்யாய இங்கு குறிப்பிடுகிறார். அப்போராட்டம் ஆசியாவிலும் நடந்தது என்பதை நூல் ஆசிரியர் குறிப்பிடவில்லை. இது இந்திய மண்ணிலும் நடந்தது. ஆன்மீக வாதிகளுக்கும் ஆன்மீக மறுப்பாளர்களுக்குமிடையேயான போர்ாட்டமாக இது இங்கும் நடந்துள்ளது. ஆன்மீக மறுப்பாளர்கள் பலர் (ஆயிரக்கணக்கில்) ஆன்மீகவாதிகளால் தலைகீழாகப் புரட்டப்பட்டு வேள்வித் தீயில் உயிருடன் தூக்கிப் போடப்பட்டுமுள்ளார்கள். அந்தப் போராட்டமே அரவிந்தருடாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறதென்பதை எந்தவொரு சமூகவியல் அரசியல் மாணவனும் மறந்துவிடவோ, மறுத்துவிடவோ நியாயமில்லை. மறப்பவனை வரலாறும் மறந்துவிடும், மறுப்பவனை வரலாறு தண்டித்துவிடும். தலைகீழாகப் புரட்டப்பட்ட வரலாறு மீண்டும் நிமிர்த்தப்படும்போது அவர் அவர்களுக்குரியது அவர் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

---

(*) முழுமைநிலைச் சமூகவியல் : சமூகம் ஆளும் வர்க்கம் ஆளப்படும் வர்க்கம் என்றும், மேற்கட்டுமானம் அடிக் கட்டுமானம் என்றும் வெவ்வேறு பகுதிகளாக பிரிக்கப்படவில்லை எனக் கூறும் தத்துவம்.



படிப்பகம்

padippakam



## அரவிந்தர் பற்றி சனாதன புரட்சியாளர் வ.வே.சு. ஐயரின் கூற்று:

சிறி அரவிந்த மஹான், ஆர்யா என்ற தனது சமீபத்திய பருவ இதழில் ரிக் வேதத்தில் உள்ள சில மந்திரங்களுக்கு புதிய விளக்கம் கொடுத்திருந்தார். இம்மந்திரங்களில் அநேகமானவை மனிதனுக்கு புறத்தே வாழும் வெவ்வேறு தேவதைகளிடம் கேட்கப்படும் வேண்டுதல்களாகக் கருதப்படுவது தவறு எனக் கண்டித்தார். மாறாக இம்மந்திரங்கள் யோக நிலையைக் கடைப்பிடிக்கும் ஒருவரின் உடல் மற்றும் மனச் செயல்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய மிக உயர்ந்தமட்ட குறியீட்டுத் தன்மையும் கவித்துவமும் பெற்ற விளக்கங்களேயாகும் எனச் செப்பினார். அவரின் இந்த வியாக்கியானம் சரியானதாக இருக்குமானால் இது வேதங்களைப் பற்றிய எமது இன்றுவரையான கருத்தோட்டம் முழுமையையுமே புரட்சிகரமாக மாற்றிவிடும் என்பது உண்மையே. சம கால சமஸ்கிருத பண்டிதர்கள் இவரால் முன்வைக்கப்பட்ட இந்த கருதுகோளை இன்னமும் கூட பொறுப்புணர்வுடன் பரிசோதித்துப் பார்க்க முன்வராதது துயரத்துக்குரியதே. வேதங்களுக்கான உரையாக்க வரலாற்றில் அரவிந்தருக்கு உரிய இடம் கொடுப்பதைப்பற்றி இன்னமும் கடின முயற்சி எடுக்காமல் இருப்பது பரிதாபத்துக்குரியதே [14]

புதிய கட்சியினரின் தேசிய எழுச்சியின் இந்து, ஆரிய, சனாதன மற்றும் பிராமணிய பக்கத்தைப் பார்க்க மறுத்த ஒரு சோவியத் மாக்ஸிஸ்ட் தத்துவவாதியினதும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் எஸ். தோதாத்ரியினதும் அரவிந்தர் பற்றிய மற்றுமோர் கணிப்பீடு :

இந்தக் கோணத்தில் அவர் தத்துவத்தில் சில முடிவுகளுக்கு வருகிறார். அம்முடிவுகளை வி. புரோடாப் என்ற சோவியத் தத்துவவாதி பின்வருமாறு சுருக்கித் தருகிறார்.

1. பாரம்பரியமான வேதாந்தத்திற்கு அரவிந்தர் புத்துயிரூட்ட முயற்சித்தார். அதை வாழ்க்கை தேச விடுதலை போராட்டம் ஆகியவற்றின் நடைமுறையுடன் இணைத்துக் கண்டார்.

2. ஆன்மீகச் சமத்துவம் பேசுவதன் மூலம் அடக்கப்பட்ட மக்கள் அனைவரும் சமம் எனக் கண்டார். விடுதலைப் போராட்டம் அவர்களது உரிமை எனக் கூறினார்.

3. பாரம்பரியத்திற்கு எதிராகப் போராடும் பொழுது அரவிந்தர் நிலப்பிரபுத்துவக் கருத்தமைப்புகளை விமர்சனம் செய்தார்.

அரவிந்தர், பாரதி, வ.வே.சு. அய்யர் ஆகியோர், மரபு வழித்துவத்திற்கு புதிய விளக்கம் அளித்தாலும் அவர்கள் கருத்து முதல்வாதப் போக்கினையே பிரதிபலித்தனர். இதன் காரணமாக அவர்களிடம் சில முரண்பாடுகளும் இருந்தன. அந்த முரண்பாடுகளையும் மீறி அவர்கள் தேச விடுதலைப் போராட்டத்திற்கு விளக்கம் அளிக்க முற்பட்டனர். மரபு வழித்தத்துவத்தினை முற்போக்கான திசைக்குத் திசை திருப்ப முயற்சித்தனர். அதில் உள்ள ஏற்றுக் கொள்ளக் கூடாதனவற்றை அவர்கள் புறக்கணித்தனர். [15]

முதலாவது கூற்று உண்மைதான். ஆனால் இரண்டாவது, மூன்றாவது



படிப்பகம்

padippakam

## 27 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

கூற்றுகள் உண்மையானவையல்ல. அரவிந்தர் பற்றி மாத்திரமல்ல மேலும் பல புதிய கட்சியினரைப் பற்றியும் கூட இவ்வித மதிப்பீடுகள் இன்றுவரை மேற்கொள்ளப்பட்டு வருவது இயல்பானதே. சாதிய சமூகத்தை நவீனமயப்படுத்துவது என்ற குறிக்கோள் நிலவும் வரை இவ்வித மதிப்பீடுகளும் நிலவவே செய்யும்.

"எனது அனுபவக் கதையை கூற வேண்டிய நிலைமையொன்று வந்தால், அது மனிதனின் வாழ்க்கை வரலாறு என்ற அளவில் நில்லாது, அது காலத்தின் வரலாறாகவே இருக்கும்." [16] எனக் கூறுவது அரவிந்தரல்ல எம்.என். ரோயேயாவர். வரலாற்றுச் செயற்பாடுகள் என்பன வெறும் சம்பவங்களல்ல. அவற்றுக்கு ஓர் உட்புறம் அதாவது சிந்தனைப்புறம் உள்ளது. எனக் கூறுகிறார் ஆர்.சி. கொலிங்வூட் என்னும் வரலாற்றறிஞர்.

யோகநித்திரையின் மயக்கத்தில் செயற்படுபவரும், உள்ளொளியின் ஆணையின் கீழ்ப்படிவான சேவகனும், தனது செயற்பாடுகளை காரண காரியத் தொடர்புகளுடன் இணைத்துப் பார்க்க முடியாது என வாதிடுபவருமான அரவிந்தரின் கருத்து முதல்வாத சிந்தனைக்கும், எம்.என். ரோயின்தும், ஹொலிங்வுட்டினதும் மேற்கூறிய பொருள் முதல்வாத சிந்தனைக்கும் இடையேயான பெருத்த வேறுபாட்டை ஒப்பிட்டுப் பாருங்கள்.

காலத்தின் வரலாற்றை அறிவதும், வரலாற்று முகவர்களின் சிந்தனைப் பக்கத்தை அறிவதுந்தான் வரலாற்றாசிரியர்களின் கடமையாகும். புதிய கட்சியின் காலத்தின் வரலாற்றையும் அதன் சிந்தனைப் பக்கத்தின் அடித்தளங்களில் ஒன்றாக இருந்த அரவிந்தரின் சிந்தனைப் பக்கத்தையும் அறிவதே "அரவிந்தமகரிஷி - சத்திரியதேடலில்" என்ற நூலின் நோக்கமாகும்.

> *சமுதாய அமைப்புகளின் உரிமைகளைக் காக்கும் தலையாய கடமையை நிறைவேற்றுவதற்காக, கடந்த காலத்தைப் போல் சத்திரியன் இன்றைய சமூக அமைப்பில் தன்னுடைய உரிய இடத்தைப் பெற வேண்டும் என்பதை எங்களால் இயன்றளவு ஆணித்தரமாக உரைப்போம். சரியான வலிய கரம் இல்லாமல் மூளை பயனற்றதாகவிடும்.*
>
> *அரவிந்தர் 1907 ஏப்ரல் 5.*

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam



## சான்றாதாரங்கள்

1. மேற்கோள் காட்டப்பட்டது. ஆ. இரா. வெங்கடாசலபதி, அந்தக் காலத்தில் காப்பி இல்லை முதலிய கட்டுரைகள். ஆகஸ்ட் 2001.

2. மேற்கோள் காட்டப்பட்டது. அதே நூல் பக் 66.

3. கா. சிவத்தம்பி - யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை - பக் 136.

4. சுப்ரமணிய பாரதி - மேற்கொள் காட்டப்பட்டது. சி.எஸ். சுப்ரமணியம் - பாரதி தரிசனம் - பக்கம் 23.

5. அதே நூல் பக்கம் - 52

6. அதே நூல் பக்கம் - 56

7. ரவீந்திரநாத்தாகூர் - பாரதநாட்டின் சரித்திரப்போக்கு பக் - 19, 21

8. Quated Manoj Das, SRI ARUOBINDO.

9. மேற்கோள் காட்டப்பட்டது. சுதந்திர வேள்வியில் தமிழகம் பாகம் 1.

10. B.P. Chattopathyaya, SRI ARUOBINDO & KARLMARX, Introduction XVIII

11. Ibid - XVII

12. Ibid - XVI

13. Ibid

14. S. Subramanian, V.V.S. Iyar, Critical Studies.

15. ஸ்ராலின் குணசேகரன், 'விடுதலை வேள்வியில் தமிழகம்' பாகம் - II. பக்கம் 297

16. திரு. சாம்பசிவம், M.N. றோய் வாழ்க்கை வரலாறு பக்கம் - 1.

அரசியல் என்பது சத்திரியனின் பணி, விடுதலைக்கு நாம் தகுதியுடையவராக வேண்டுமெனில், சத்திரியப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். — அரவிந்தர்

1907 ஏப்ரல் 5.



படிப்பகம்

padippakam



# அரவிந்தரின் தேசிய மக்கள் இயக்கக் கோட்பாடுகள்


1906-1908

பிரான்சை எடுத்துக் கொள்ளுங்கள். அது நல்வாய்ப்புப் பெற்ற நாடு, ஒழுங்கான அமைதியான முறையில் அது வளர்ச்சி பெறவில்லை. இரத்தத்திலும், தீயிலும் குளித்துத் தூய்மை அடைந்த பின்பே முன்னேற்றத்தின் முதற்படியில் அது ஏறிற்று. அறியாமையில் முயன்ற பெரும் பகுதியினரான பாமர மக்களே வீறுகொண்டெழுந்து பதின்மூன்று நூற்றாண்டுகளாக மலைபோல் குவிந்திருந்த அநீதிகளை ஐந்து பயங்கரமான ஆண்டுகளில் அறவே ஒழித்தனர். **ஆனால் இங்கோ, காங்கிரஸை இந்திய மக்கள் அனைவரின் ஆணையைத் தாங்கி நிற்கும், ஜனநாயக அமைப்பாக ஆக்குவதற்குநேர்மையான எந்த முயற்சியும் செய்யவில்லை** [1] *அரவிந்தர்.*

இது **புதிய விளக்கு** கட்டுரையில் அவரின் சங்க நாதம். காங்கிரஸை நோக்கிய மிகச் சரியான குற்றச்சாட்டு. மக்கள் அனைவருக்குமான ஜனநாயக அமைப்பொன்றை ஆக்குவதற்கான அறைகூவல். அவ்வித அமைப்பானது இந்தியாவை இரத்தத்திலும் தீயிலும் நீராட்டத் தகுதி வாய்ந்த மக்கள் அமைப்பாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். தான் வலியுறுத்தியபடி அவர் நடந்து கொண்டாரா? ஆராய்வோம்.

அரவிந்தர் தனது புதிய விளக்கு கட்டுரைத் தொடரில் பின்வருமாறு கூறுகிறார். நாட்டின் சக்தி அனைத்தையும் தட்டியெழுப்பி நிர்வகிப்பதில் தேசியம் அடங்கியிருக்கிறது. எனவே அரசியலில் பின்தங்கிய வகுப்பினரை எழுப்பி, அவர்களை அரசியல் வாழ்வின் ஓட்டத்திற்குக் கொண்டு வருவதே தேசியத்தின் முக்கிய கடமையாகும். பழமையில் ஊறிய ஹிந்து மதத்தினரின் மாபெரும் மக்கட் தொகை, கடந்த நூற்றாண்டு முழுவதும் அரசியலில் உறங்கிக் கொண்டிருந்த மாபெரும் இஸ்லாம் மக்கட் தொகையினர், சிறுவியாபாரிகள், தொழிலாளி வர்க்கத்தினர், கல்வியின்றி அறியாமையில் இருக்கும் மிகப்பெரிய விவசாயிக் கூட்டம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஹிந்து நாகரிகத்திற்கப்பால் வாழும் காட்டுவாசிகள், இவர்களில் ஒருவரையும் தேசியம் புறக்கணிக்கவோ தவிர்க்கவோ கூடாது. [2]

... புதிய தேசியம் எல்லா தடைகளையும் தாண்டுகிறது. பணிபுரியும் குமாஸ்தாவை, கடை வியாபாரியை, ஏர்பிடிக்கும் உழவனைக் கூவி அழைக்கிறது. பிராமணனைக் கோவிலிலிருந்து வரவழைக்கிறது. அவலத்திலிருக்கும் சண்டாளனின் கரம் பற்றுகிறது. கல்லூரி மாணவனையும் புத்தகத்துடன் இருக்கும் பள்ளி மாணவனையும் தேடிப்பிடிக்கிறது. அன்னையின் கரங்களில் தவழும் குழந்தையையும் தொடுகிறது. அதன் குரல் கேட்டுச் சிலிர்க்கிறது அந்தப்புரம், குன்றுகளைத் தாண்டி, மலைகளில் வாழும் வனவாசிகளை அதன் வழி தேடுகிறது. வயது, பால், ஜாதி, செல்வம், கல்வி, அந்தஸ்து எதையுமே அது பொருட்படுத்துவதில்லை, நாட்டிற்கு அபாயமென்ற பேச்சைக் கேட்டு நகைக்கிறது. சொத்துத் தகுதி, கல்விச்சான்றிதழ் போன்ற கோரிக்கைகளை தூக்கி எறிகிறது. கல்வியற்றவனிடமும் சாலை வாழ் மனிதனிடமும் அவன் புரிந்து கொள்ளும் வலுவான வார்த்தை பேசுகிறது.

***தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —***

படிப்பகம்

padippakam



இளைஞன் மற்றும் ஊக்கமுடையவனிடம் கவிதையாக, பொறிபறக்கும் மொழியில் ஹிந்துவிடம் காளியின் நாமத்தைப் போதிக்கிறது. முகமதியனின் இஸ்லாமின் புகழுக்கு பணியாற்றும்படி தூண்டுகிறது. இறைவன் பணிக்கு உதவவும், நாட்டைச் சீரமைக்கவும் அவரவரின் சமயமும், கலாச்சாரமும், பலமும், ஆண்மையும் புதிய தேசத்திற்கு அளிக்கவல்லதை அளிக்கும்படி அறைகூவல் விடுகிறது. அது கோரும் ஒரே தகுதி இந்தியத் தாயின் கருவில் வளர்ந்த ஒரு உடல் இந்தியாவிற்காக உணர்ச்சிவசப்படும் ஒரு இதயம். அவளது உயர்விற்காகச் சிந்தித்துத் திட்டமிடும் ஒரு மூளை, அவன் நாமத்தைப் போற்றும் நாவு, அவளுக்காகப் போர்புரியும் கரங்கள் அவ்வளவே. [3]

மேலே அரவிந்தர் கூறுகிறபடியான ஒரு தேசிய இயக்கத்தை உருவாக்குவது என்பது மிகவும் புரட்சிகரமான விசயமாகும். இவ்விதமான கூற்றுகள் மிகவும் முற்போக்கானவைதான். அந்த இலக்கு இந்துத் தேசியமாக இருந்தாலுங்கூட அது முற்போக்கானதுதான். ஏன் எனில் போராட்டத்தில் இறங்கிய மக்கள், தமது எதிரிகளில் ஒருவனை வீழ்த்தியபின் இடைநடுவில் நிற்க மாட்டார்கள். அவர்கள் தொடர்வார்கள். ஆனால், இவை வெறும் உணர்ச்சிப் பெருக்கமான பேச்சுகளால் சாத்தியப்படுத்தக் கூடியதொன்றல்ல. அதற்காக மக்கள் அமைப்பு ரீதியாக அணிதிரட்டப்பட வேண்டும். இல்லையேல் இது வெற்றுக் கனவாகவே முடியும். சிலவேளையில் அது சாத்தியப்பட்டாலும், மக்கள் அமைப்புகள் இன்றேல் இதன் இறுதிப் பலாபலன்களாக மக்களுக்கு எதுவும் கிடைக்காமல் போகலாம். ஆகவே மக்கள் இயக்கங்கள், மக்கள் அமைப்புகள் ஆகியவை தொடர்பாக அரவிந்தரின் நிலைப்பாடு எவ்விதம் இருந்தது என்பது ஆராயப்பட வேண்டியதாகும். 1909 வரை புதியகட்சியினரின் நிலைப்பாடும் அரவிந்தர் நிலைப்பாடும் ஒன்றேதான்.

## காங்கிரஸின் ஆரம்பகால முயற்சிகள்

"இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது மாநாடு 1887, 28,29,30 ஆகிய மூன்று நாட்களும் சென்னையில் நடைபெற்றது. தேசியம் என்றால், அது மக்கட் தொகையின் பங்கேற்பைக் குறிப்பதாக அமைய வேண்டும் என்னும் நிலையை சென்னைக் காங்கிரஸ் முதன் முறையாக தோற்றுவிக்க முயன்றது." எனக் கூறும். பெ.சு.மணி, தனது காங்கிரஸ் வினாவிடை மூலமும் ஆய்வும் எனும் நூலில் இவ்விவகாரம் பற்றி பல தகவல்களைத் தந்துள்ளார். மேற்படி நூலினையும், எ.ஜி. நூறாணி என்பவரின் நூலினையும் ஆதாரமாகக் கொண்டு இக் காங்கிரஸ் மாநாட்டின் தன்மையை இங்கு நோக்குவோம்.

இக்காங்கிரஸ் இதுவரையான முன்னைய இரு காங்கிரஸ்களையும் விட பின்வரும் முறையில் வேறுபட்டதாக இருந்தது.

1 காங்கிரஸ் செலவுக்கென *பகிரங்கமாக* பொது மக்களிடம் நிதி சேர்த்தது.

இதுவரையும் பெரும் புள்ளிகளின் செலவிலேயே மாநாடு நடைபெற்றது. ஆனால் சென்னை நிதி சேர்ப்பில் மிகச் சாதாரண மக்களிடம் இருந்து பைசாக்கணக்கில் கூட நிதி சேகரிக்கப்பட்டது.

### புதிய கட்சி

படிப்பகம்

padippakam



# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

2. காங்கிரஸ் பற்றிய *மக்கள் திரள் விழிப்புணர்வு* ஏற்படுத்தப்பட்டது.

காங்கிரஸ் வினா விடை என்னும் சிறு கைநூல் தமிழில் எழுதி பதிப்பிக்கப்பட்டு, பல ஆயிரம் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. கேள்விபதில் வடிவில் அமைந்திருந்த இந்நூல் சாதாரண மக்களாலும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இந்திய தேசிய மொழியில் வெளியானது இதுதான் முதல் தடவை. இந்நூலையும், அதை இவ்வளவு பரவலாக வெளியிட்டதையும் இட்டு வைஸ்ரோய் மற்றோர் வெள்ளையரான காங்கிரஸ் செயலாளர் ஏ.ஓ. ஹியுமைக் கடிந்து கொண்டார். இது ஒரு முரண்பாடாக தொடர்ந்து வளர்ந்தது.

3. காங்கிரஸ் மாநாடு பலரும் பார்க்கக் கூடியதாக *திறந்த பந்தலில் நடைபெற்றது.* இதை பெ.சு. மணி இவ்விதம் கூறுகிறார்;

மாநாட்டின் மற்றொரு சாதனை, இதுவரை நாற்புற சுவர்களின் மத்தியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு முதன் முறையாக 130 அடி நீளமும், 92 அடி அகலமும் வாய்ந்த மாநாட்டுப் பந்தலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளிக்கும் வண்ணம் சென்னை காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. (பக் 66 )

முன் சொன்ன மூன்றும் இந்திய தேசியம் தனது ஆதரவாளர்களைப் பெருக்கிக் கொள்ள எடுத்த முயற்சிகள் தான். நடுத்தர வர்க்கத்தின் மேலணியினரிடையே முனைப்புப் பெற்றிருந்த இந்த இந்திய மிதவாத தேசியத்தை அல்லது இந்திய (வி) தேசியத்தை நடுத்தர வர்க்கத்தின் பிற அணிகளிடையேயும் கொண்டு செல்ல எடுத்த முயற்சிகளேயாகும். ஏனெனில் படித்த நடுத்தரவர்க்கத்தினர் குறிப்பாக பிராமணர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தது வங்காளத்திற்கு அடுத்ததாக சென்னை ராஜதானியில் தான். இருந்த போதிலும் இவ்வித தேசிய, சமூக நடவடிக்கைகள் முற்போக்கானவைதான். அவையாவன;

4. காங்கிரஸின் சென்னை ராஜதானியின் பிரதிநிதியான *மூக்கன் ஆசாரி* என்பவர் தனது உரையை தனித் தமிழில் ஆற்றியதாகும்.

தமிழில் பேசிவிட்டதற்காக அவ்வுரை ஒன்றும் புரட்சிகரமாகிவிட மாட்டாது. குறைந்தது முற்போக்குத் தேசியமாகிவிடவும் மாட்டாது. ஆங்கில மொழி என்றால் அதில் உள்ளதெல்லாம் ஏகாதிபத்திய ஆதரவு நூல் என்பதா? ஷெல்லியும், ரூசோவும், டார்வினும், மார்க்சும், முதன் முதலில் இந்தியாவுக்கு அறிமுகமானது ஆங்கில மொழியில்தான். காங்கிரஸின் முதல் தமிழ் நூல் அதனது மிதவாதக் கருத்தை நியாயப்படுத்தும் வினா விடை நூல்தான். ஆகவே என்ன சொல்லப்பட்டது என்பதுதான் முக்கியத்துவமிக்கது. மூக்கன் ஆசாரி தனது உரையில் தனது பிரதேச, தேசிய தொழில்துறை வளர்ச்சியை ஆதரித்தும் இந்தியாவில் அதற்கிருக்கும் தடைகளைச் சுட்டிக் காட்டியும் பேசியது தான் இங்கு முக்கியமானது. தேசியப் பிரச்சனையை தேசிய மொழியில் பேசினார். தஞ்சாவூர் மற்றும் கும்பகோண மாவட்டத் தொழிற் துறையின் பிரநிதியான இவர் தொழிற் கல்வி பற்றி முழங்கினார். தனது உரையில் நமது நாட்டில் செல்வம் தொடர்ந்து வெளியேறிக் கொண்டுள்ளது. வரி விதிப்பு உயர்ந்து விட்டது.



படிப்பகம்

padippakam



நமது நாடு இன்று நெருக்கடியான நிலையில் உள்ளது. இம்மோசமான நிலையை ஆங்கில ஆட்சி இலட்சியம் செய்யக் கூடாது எனக் குறிப்பிட்டார். மூன்றாவது காங்கிரஸில் சாதாரண இந்தியர்களும் பங்கு கொண்டார்கள் என்பது வரவேற்கக் கூடியதே.

5. ஆச்சார சீர்திருத்தத்திற்கென தனியான, பந்தல்கள் போட்டமை. பெ.சு. மணி இதை, "தேசியம், சமூக சீர்திருத்தத்திற்கும் பொறுப்பேற்றது என்பதை சென்னைக் காங்கிரஸ் உணர்த்துகிறது" என்கிறார். என்ன நடந்தது என்று அவரே கூறுகிறார்.

காங்கிரஸ் தலைவர்களின் இந்த மாதிரியான பிற்போக்குச் சிந்தனையில் இருந்து தேசியவாதிகள் விடுபட, பேரறிஞர் மகாகோவிந்த்ரானடே ஒரு வழி வகுத்தார். ஆண்டு தோறும் நடக்கும் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலிலேயே அடுத்த நாள் தேசிய சமூக மாநாடுகள் **(National social cenference)** எனும் பெயரில் சமூக சீர்திருத்தப் பிரச்சாரத்திற்கு வழி வகுத்தார். (பக் 90). இதற்கான தொடக்கமும் இந்த மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டில் நிகழ்ந்தது. பெ.சு. மணி, இதற்கான காரணத்தையும் முன்வைக்கிறார்.

"காங்கிரஸ் எல்லாருக்கும் பொதுவான ராஜ்ய திருத்த விஷயத்தை மாத்திரம் கவனிக்கும் என மீண்டும் வற்புறுத்தப்பட்டதால், சமூக சீர்திருத்தவாதிகளான காங்கிரஸ் அன்பர்கள் அரசியல் சீர்திருத்த மாநாடு நடைபெற்று முடிந்த பிறகு அதே இடத்திலேயே சமூக சீர்திருத்த மாநாட்டையும், நடத்தும் முற்போக்கான முடிவை சென்னையில் எடுத்து, அதன்படி முதல் சீர்திருத்த மாநாட்டையும் 1887ல் சென்னையிலேயே நடத்தித் தொடங்கி வைத்தனர்." (பக் 45)

"சுதேசமித்திரன்" பத்திரிக்கை ஆசிரியர் (அது பாரதியாரல்ல) பறையன் இதழை கையால் தொடக்கூடாது என்று கூறி பென்சிலால் புரட்டிப்பார்த்ததாகக் கூறப்படுகிறது. நல்லவேளை அந்தத் தேசியம் அந்தப் பென்சிலைத் தூக்கி தூர எறியவில்லை மாட்டுச் சாணிபோல் காரியமும் ஒரு அரிய தீட்டுக் கடத்திபோலும், அதே போல் காங்கிரஸ் தேசியம் சமூக சீர்திருத்தம் தொடர்பான விசயத்தை காங்கிரஸ் மகாநாடுகளில் இருந்து ஒதுக்கி வைத்ததை, தேசியம், சமூக சீர்திருத்தத்திற்கு பொறுப்பேற்றது என்று ஏன் கூறுகிறார்? மாறாக, அதைத் தீண்டத்தகாத ஒன்றாக கோவிலின் வெளியே (காங்கிரஸ் கோவில் என்றால்) தள்ளி விட்டதாக ஏன் கருதக் கூடாது. திலகர் அது கோவிலின் வெளியே கூட நிற்க அருகதையற்றது எனக் கிளர்ச்சி செய்தார். ஆக இந்நடவடிக்கை காங்கிரஸ் மக்கள் மயப்படுவதற்கு எதிரானதாகவே இருந்தது. இது இந்திய தேசியம் என்ற ஒருமை, சாதி அடிப்படையில் இருமையடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலாவது, தேசிய அமைப்பு, நடவடிக்கையேயாகும். சுதேசமித்திரன் தனது ஆசிரியர் தலையங்கத்தில் "ஜாதியாச்சாரம்பார்க்கும் பிரதிநிதிகளுக்கும் பிரத்தியோகமான ஒரு பங்களாவில் அவர்களுடைய ஜாதியாச்சாரங்களுக்கு ஏற்றபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன" எனக் கூறி அதையும் "இது இவ் வருசத்துக் காங்கிரஸ் சபையில் ஒரு முக்கியமான புது அம்சம்" என்று கூறியது. இது தேசியம் பொறுப்பேற்றதா அல்லது ஒதுக்கி வைத்ததா என்பதைக் காட்டுகிறது. '<u>ஒதுங்கி நில் ஹியுமின் ஆணை</u>' என்ற பகுதி இதை மேலும் விளக்குகிறது.

## புதிய கட்சி

படிப்பகம்

## காங்கிரஸில் முஸ்லீம்களும் பங்கு கொண்டமை



பதுர்தீன் தியாப்ஜி

ஒரு முஸ்லீம் தலைமை ஏற்க, முஸ்லீம்களும் பெருந் திரளாக சென்னை காங்கிரஸில் கலந்து கொண்டு, காங்கிரஸ் ஓர் இந்து காங்கிரஸ் என்ற எதிர்ப் பிரச்சாரத்தை முறியடித்த பெருமையும் சென்னை காங்கிரசிற்கு உண்டு. (பெ.சு.மணி. பக் 67) பதுர்தீன் தியாப்ஜி என்ற முஸ்லீம் தலைமை தாங்கியதால் இந்திய தேசிய காங்கிரஸை தியாப்ஜி காங்கிரஸ் என்றே புகழும் பெ.சு.மணி மேலும் தொடர்கிறார்.

காங்கிரஸ் கூட்டங்களில் முஸ்லீம்கள் கலந்து கொள்ளக் கூடாது என அலிகார் இயக்கத்தலைவர் சையது அகமது கான் கனல் தெறிக்க பிரச்சாரம் செய்த காலத்தில், * பின் இணைப்பு - 2ஐப் பார்க்கவும். தியாப்ஜி காங்கிரஸில் முஸ்லீம்கள் சேர்வது, வரவேற்க வேண்டியது என பதிலளித்தார். சென்னை காங்கிரசின் குறிப்பிடத்தக்கச் சிறப்புகளில் இதுவும் ஒன்று. (பக் 67) இது மெச்சப்பட வேண்டிய ஒரு சிறப்பேதான். பதுர்தீன் தியாப்ஜி தனது தலைமையுரையில் இவ்விதமாகக் கூறுகிறார்.

"மஹமதியப் பெருவகுப்பினர் சென்ற இரண்டு வருஷத்துள் ஒரு கூட்டத்திலும் கலக்காமல் இருப்பது நமது ஜன சபையின் பிரதிநிதித்துவத் தன்மைக்கு பங்கமென்று சிலர் சொல்லுகிறார்கள். சில மஹமதியர் மாத்திரமே அங்ஙனம் சில நிரந்தரமற்ற காரணங்களை ஒட்டி விலகியிருந்தனர். எனினும் இந்த வருஷத்துக் காங்கிரஸ் சபை இது விஷயத்தில் மாறுபட்டதாகவுள்ளது?" (பக் 67) பெரும் கை தட்டல் மற்றும் ஆரவாரம் மத்தியில், தான் தனிநபராக இங்கு வரவில்லை பம்பாய் அஞ்சுமன் கு இஸ்லாம் என்ற அமைப்பின் பிரதிநிதியாகவே வந்துள்ளேன் எனக் கூறும் அவர் தொடர்கிறார்.

கௌரவத்திற்கு உரியவர்களே!

எமது மாபெரும் இந்திய சமூகத்திரளின் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் தத்தமக்கே உரிய குறிப்பான சமூக, ஒழுக்கவியல், கல்வி மற்றும் ஏன் அரசியல் தடைகள் இருக்கவே செய்கின்றன. இவற்றை அவர் அவர்களே தாண்டவேண்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதே நேரம் இந்திய முழுமையையும், பாதிக்கும் பொதுவான பிரச்சனைகளும் உள்ளன. இக்காங்கிரஸ் அவற்றை மட்டுமே விவாதிக்கின்றது. எல்லோர்க்கும் பொதுவான விவகாரங்களின் நலனுக்காக முஸ்லீம்கள் இன மற்றும் சாதிய வேறுபாடுகளை மறந்து தமது நாட்டின் சக குடிகளுடன் ஏன் ஒன்றிணைந்து உழைக்கக் கூடாது என்பது எனக்கு புரியாத புதிராகவே உள்ளது. இந்த அடிப்படையில்தான் நாம் எப்போதுமே பம்பாய் ராஜாங்கத்தில் செயற்பட்டு வந்துள்ளோம். வங்காளம், சென்னை, வட மேல் மாகாணங்கள் மற்றும் பஞ்சாப் ஆகிய ராஜாங்கங்களில் இருந்து வந்திருக்கும் முஸ்லீம் பிரதிநிதிகளின் எண்ணிக்கை, சமூக அந்தஸ்து நிலை, குணவியல்புகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றை நோக்கும் போது, சிலராக இருந்தாலும் முக்கியமான சிலரைத் தவிர இந்தியா எங்கணும் உள்ள அனைத்து முஸ்லீம்களினது தலைவர்களும் இதே கண்ணோட்டத்தைத் தான் கொண்டுள்ளார்கள் என்பதில் எனக்கு எதுவித சந்தேகமும் இல்லை (பக்கம் 73, A.G. NOORANI - BADRUDDIN TYABJI)

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

padippakam



இந்த பதுர்தின் சாதாரண நபரல்லர். 1844இல் பிறந்த இவர் 1860இல் இலண்டன் சென்று அங்கு தனது கல்வியைத் தொடர்ந்தார். அங்கு சட்டம் பயின்று, பட்டதாரியானார். இவரும் அரவிந்தர் போல் கல்வியில் பல்கலை வல்லவராக இருந்தார். 1867இல் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராக கடமையாற்றினார். அந்த நிலையை அடைந்த முதலாவது இந்திய பாரிஸ்டர் இவரேயாவார். இலண்டனில் கல்விகற்ற போது இவர் தாதாபாய் நௌரோஜி பி. மேத்தா, W.C. பேனர்ஜி, எச். வாடியா ஆகிய காங்கிரஸ் தலைவர்களின் நட்பைப் பெற்றார். பம்பாயில் தனது தொழிலில் நன்றாகவே சம்பாதித்தார். இந்திய உயர்மட்ட வெள்ளுடை மத்தியதர வர்க்கத்தில் ஒருவராக வாழ்ந்தார். இவரின் புதல்வன் 19 வயதில் I.C.S. பரிட்சையில் (சித்தி எய்தினார்) வெற்றியடைந்தார். இவ்விதம் (சித்தியடைந்த) வெற்றியடைந்த முதலாவது இந்திய முஸ்லீம் மாணவர் இவரேயாவார்.

பதுர்தீன் 1876இல் மேலும் சிலருடன் இணைந்து அஞ்சுமன் இ. இஸ்லாம் என்ற முஸ்லீம் நலன் பேணும் அமைப்பை உருவாக்கினார். இவரின் மூத்த சகோதரர்தான் இதன் முதலாவது தலைவராவார். ஏழு பேரைக் கொண்ட மஜ்லிங் இ முன்சரீமில் (நிறைவேற்றுக்குழு) இவரும் ஓர் உறுப்பினராவார். இவ் அமைப்பு முஸ்லீம் கல்வி முன்னேற்றத்திற்காக முன்னின்று உழைத்தது. பிரித்தானியர்களுடனும் இந்து தலைவர்களுடனும் ஓர் நட்பையும் பேணி வந்தது.

1890 இல் தனது வருட வருமானம் ரூ. 1,23,260 ஆக இருந்த, பணபலமும் அதிகார பலமும் சமூக பலமும் கொண்ட பதுர்தீன் 1887இல் காங்கிரஸ் தலைவராக வந்தது காங்கிரஸிற்கு ஓர் வெற்றிதான். அதில் சந்தேகமேயில்லை. பதுர்தீனை காங்கிரஸில் கொண்டு வர 2வது காங்கிரஸ் மாநாட்டுத் தலைவரான தாதாபாய் நௌரோஜியும், ஹியுமும் மிகவும் நுட்பமாகச் செயற்பட்டனர். இந்த வெற்றியின் பெருமையின் பெரும்பகுதி ஹியுமையே சாரும்.

ஆனால், மதபேதங்களைக் கடந்து உருவாக்கப்பட்ட இந்த ஒருமை ஒரு வருடத்திற்குக் கூட நீடிக்காமல் போனது ஒரு துன்பியலே. 1888 காங்கிரஸில் (4வது காங்கிரஸ்) பதுர்தீனால் பங்கு கொள்ள முடியவில்லை. அஞ்சுமான் மிகக் குறுகிய வாக்கு வித்தியாசத்தில் (11க்கு-9) பதுர்தீனையும் இன்னும் சிலரையும் காங்கிரஸ் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுத்திருந்தாலும் இவரால் பங்கு கொள்ள முடியவில்லை. A.O. ஹியுமின் முயற்சி தோல்வியுற்றது. இந்திய தேசிய இயக்கம் ஒரு இந்திய தேசிய மக்களியக்கமாக உருவாவது மத அடிப்படையில் தடைப்பட்டது.

எவ்விதம் பார்த்தாலும் 1887 முயற்சி ஒரு மைல்கல் தான். தேசிய இயக்கத்தை ஜனத்திரள்மயப்படுத்துவதில் அது ஒரு வெற்றிதான். ஆனால் அது நிலைத்து நிற்கவில்லை. (பின்னிணைப்பைப் பார்க்கவும்)

## புதிய கட்சி

padippakam

# 35 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

## திலகரின் தேசிய(!?) மக்கள் இயக்கங்கள்.



இந்த இயக்கம் ஒரு அரசியல் இயக்கமன்று, தேசியம் அரசியல் இல்லை, தேசியம் ஒரு மதம், ஒரு கொள்கை, ஒரு நம்பிக்கை என்று நான் சொல்லியிருந்தேன் (சென்ற வருடம்). அதையே இன்று கூறுகிறேன் வேறொரு விதமாக தேசியம் என்பது ஒரு மதம், ஒரு நம்பிக்கை என்று நான் இனிக் கூற மாட்டேன். சனாதன தர்மமே நமக்குத் தேசியம். இந்த செய்தியைத்தான் நான் உங்களுடன் பேச வேண்டும். -[4] *அரவிந்தர் 1909 மே*

1887 சென்னை காங்கிரஸ் மாநாட்டிற்குப் பின்னர், 1890களில் மக்கள் இயக்கத்தை உருவாக்கும் முயற்சி இந்தியாவின் அதிஉயர்ந்த தேசியத் தலைவர் திலகரால் மேற்கொள்ளப்பட்டது. பேஷ்வாக்களின் அதிகாரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த சித்பவா பிராமண இயக்கத்தின் மூர்க்ககுணமிக்க அரசியல் பிரதிநிதியும், அனைத்து வகையான சமூக சீர்திருத்தங்களையும் எதிர்ப்பதில் தலைமை வகித்த சனாதானியும், பிள்ளையார் வழிபாட்டை இஸ்லாமிய எதிர்ப்புக் கொண்ட ஒரு சமூகவிழாவாக மாற்றியவரும், பருத்தி ஆலைப் பங்குடமையாளரும், பருத்தி ஆலை முதலாளிகள் சம்மேளன பிரதிநிதியுமான இந்தத் திலகர் மக்கள் அமைப்புகளை உருவாக்காவிட்டாலும், மக்கள் இயக்கங்களை உருவாக்கினார். இவை மக்களுக்கான இயக்கங்களில்லைதான். ஆனால் மக்கள் பங்கு பற்றியதனால் இவை மக்களியக்கங்கள்தான் என வைத்துக் கொள்வோம்.
அவையாவன :

1. 1893, 1894களில் மராட்டியத்தில் கணபதி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டமை.
2. 1894இல் பம்பாயில் இந்து முஸ்லீம் கலவரம்.
3. 1889இல் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட பசுபாதுகாப்பியக்கம்.

## 1. கணபதி விழா

1893 வரை மொகரம் பண்டிகை இருசாராராலும் இணைந்தே கொண்டாடப்பட்டு வந்தது. இப்போதுள்ளதுபோல் வாக்குகள் திருடும் நோக்கத்திற்கான வெளிவேடங்களாகவல்ல. மாறாக அவை மக்களின் இயல்பான மரபாக இருந்தது. பாம்பே மதக் கலவரத்தைத் தொடர்ந்து இந்த நிலைமை மாற்றமுற்றது.

இந்துக்களின் தனியான விழா, குறிப்பாக கணபதி விழா, இந்துவிழாவாகவே அமைந்த சிவாஜி விழா ஆகியன மராட்டிய மேட்டுக் குடியினருக்கு இரு நன்மைகள் செய்தன.

### *தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam



முதலாவது இந்துக்களின் பல வர்க்கத்தினரையும் ஒன்று சேர்த்தது. எதன் கீழ் ஒன்று சேர்த்தது? தேசிய கொடியின் கீழா? இல்லை இந்து சனாதன கொடியின் கீழ். பம்பாயின் மில் தொழிலாளர்களில் மிகப் பெரும்பான்மையோர் மராட்டிய இந்துக்கள். அதுபோல் மில் முதலாளிகள் இந்து மார்வாடிகளும், பார்சியர்களுமாவர். வர்க்க முரண்பாடுகள் மூடி மறைக்கப்பட்டன.

இரண்டாவது: இவ்விழாக்கள் முஸ்லீம்களுக்கு எதிராக திசை திருப்பப்பட்டுவிட்டதால் இந்திய தேசியம் இந்துமத தேசியமாக மாறத் துணைபுரிந்தது.

1884இல் பூனாவில் நடைபெற்ற இரண்டாவது வருட பிள்ளையார் விழா, திலகரின் எதேச்சாதிகார ஆதரவாளர்களில் ஒருவரான டட்டியா சாஹிஸ் நட்டு என்பவரால் தலைமை தாங்கப்பட்டது. இவ்விழா ஊர்வலம் டாடுலாவாஸ் பாலத்திற்கு அண்மையிலுள்ள பள்ளிவாசல் வழியாகச் செல்லும்போது, அப்பள்ளி வாசலினுள் புகுந்தது, உடைக்கப்படக்கூடியதாக என்னென்ன இருந்தனவோ அவைகளெல்லாம் உடைக்கப்பட்டன, ஒரு முஸ்லீமானவர் தனக்கேற்பட்ட காயங்களினால் அடுத்த நாள் காலை மரணமடைந்தார். *அந்தக் கணபதி கொண்டாட்டம்* ஆரம்பித்து வைக்கப்பட்டது. (5)

இந்து சனாதன தேசியவாதத்தின் பாதை அறிவிக்கப்பட்டுவிட்டது. இதை நடத்திச் சென்ற இளைஞரணி உறுப்பினர்களில் சார்வாக்கரும் ஒருவர்.

இதன் விளைவாக இந்து, முஸ்லீம்கள் ஒன்றாக இருந்து செயற்பட்ட பூனா சர்வஜனிக் சபாவில் இருந்து முஸ்லீம்கள் விலகிக் கொண்டனர். சமூக சீர்திருத்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய ராணடே இவ்அமைப்பினுள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகிறார்.

ஆனால், சேலம் மசூதி உடைப்பு 1882லேயே பூனாவிற்கு வழிகாட்டிவிட்டது. இதோ அந்தத் தகவல்:

1882இல் சேலம் இந்து முஸ்லீம் கலவரம், மசூதியின் முன்னால் இந்து சமய ஊர்வலம், சென்னை அரசாங்க அனுமதியுடன் நடந்தது. பெரும் குழப்பம். மாவட்ட நிர்வாகம் செயலிழந்தது. மசூதி இடிக்கப்பட்டது, தரைமட்டமாயிற்று. சென்னை மாகாண பெங்களூரில் இருந்து கலவரம் அடக்க இராணுவத்தினர் வந்தனர். சேலம் சி. விஜயராகவாச்சாரியார் தான் இதற்கான காரணமென சேலம் செசன்சு நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 10 ஆண்டுகள் நாடுகடத்தல் தண்டனை விதிக்கப்பட்ட இவர் மேல் முறையீட்டில் குற்றமற்றவரெனத் தீர்ப்பாகின்றது. 1883இல் விடுதலையாகிறார். கல்கத்தா அமிர்தா பஜார் என்ற பத்திரிக்கை அவருக்கு சேலத்து நாயகன் எனப் பட்டம் கொடுத்தது. இவர் 1852இல் பிறந்த வைஷ்ணவ பிராமணராவார். திலகரின் முன்னோடி எனக்கூறலாம். (6) ஈ.வே.ரா. பெரியார் தோன்றியிராவிட்டால் தமிழ்நாடு மற்றோர் மராட்டியமாக மாறியிருக்கக்கூடும்.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



## 2. சிவாஜி விழா

திலகர் உருவாக்கிய இரண்டாவது மக்களியக்கம் சிவாஜி விழாவாகும். இதுவும் இஸ்லாமிய எதிர்ப்புக் குணாம்சம் கொண்டதோர் இந்து சனாதன தேசியவாதமேயாகும். சிவாஜி வெள்ளையருக்கும் எதிராகப் போராடியவர்தான். பேஷ்வாக்களின் அகன்ற மராட்டிய இராச்சியத்திற்காகவும் போராடியவர். இந்த நோக்கில் இஸ்லாமிய பேரரசுக்கு எதிராகவும் போராடியவர். தற்காப்பு என்ற நிலையில் இருந்து இராசதானி விஸ்தரிப்பு என்ற நிலைக்கு வளர்ந்தவர். அவருக்கான விழா விடுதலையின் குறியீடல்ல அகன்ற இராச்சிய கனவுகளின் குறியீடேயாகும். முழுமையாகவே ஒரு விடுதலை வீரன் எனக் கொண்டாலுங்கூட பாரதி தெரிவிக்கும் கருத்தை இங்கு நோக்குவோம்.

இவற்றையெல்லாம் கண்ட பாரதி 1906ம் ஆண்டில் சிவாஜி உற்சவம் கொண்டாடுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த அதே சமயத்தில், தனது 'இந்தியா' பத்திரிக்கையில் முகமதியர்கள் தங்கள் நாட்டைவிட்டு இதையே சுயநாடாக எப்போது அடைந்தார்களோ அதுமுதல் அவர்களுக்கும் நமக்கும் ஒருவித சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நாமும் அவர்கள் பேரில் பூர்வீகக் குற்றங்களை எடுத்துரைத்தல் தப்பிதம். அவர்களும் நம்மை உடன்பிறந்தவர்களெனப் பாவித்து நடக்க வேண்டும் நமக்குள்ளே எவ்வளவு சச்சரவுகள் நேர்ந்த போதிலும் நம்மைப் பிரித்து அரசாள எண்ணங்கொள்ளும் ஐரோப்பியரின் எண்ணத்தைக் குலைப்பதே நமது முதல் கடமை என்று எழுதியதோடு இந்து முஸ்லீம் ஒற்றுமையைக் காரியாம்சத்தல் செய்து காட்டுமாறு இந்துத் தலைவர்களையும் மக்களையும் வேண்டும் விதத்தில், இதை நாமெல்லோரும் நமது முகமதிய சகோதரர்களுக்குக் காரியத்தில் காட்ட அக்பர் போன்ற முகமதிய மகான்களின் உற்சவத்தையும் கொண்டாட வேண்டும். அதனால் தான் அவர்களுக்கு முழுநம்பிக்கை உண்டாகும் என்றும் எழுதியிருக்கிறார். (7)

பாரதியாரின் இந்த நிலைப்பாடு முற்போக்கானதாகவும், முற்போக்கு ஜனநாயகத் தன்மை பெற்றதாகவும் தோற்றம் தருகிறது. ஆனால் உண்மை அதற்கு எதிரானது. இந்து மாறா மரபியல்பான (அடிப்படைவாதமான) இந்து சனாதனத்திற்கும், இஸ்லாமிய மாறா மரபியல் வாதத்திற்கும் இடையில் ஒரு அரசியல் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியின் வெளிப்பாடே இதுவாகும். இதன்மூலம இந்துக்களும் இஸ்லாமியர்களும் தமக்குள் மோதிக் கொள்வது தற்காலிகமாக தவிர்க்கப்பட்டது. இது இவ் ஐக்கிய முன்னணியின் பக்கவிளைவாகும். இம்முன்னணியின் இறுதி எல்லைதான் 'வந்தே மாதரம்', 'அல்லா கூ அக்பர்', ஆகியவை ஒன்றாக முழங்கப்பட்டமையாகும். அந்த எல்லைக்கு அடுத்த கட்டந்தான் இதை முன்வைத்தவர்களாலேயே ஏற்படுத்தப்பட்ட பெரும் பிளவாகும்.

சிவாஜி விழாவில் ஏதோ ஒரு முழுமையில்லை என்பது திலகருக்கு புரிந்தது. அந்தக் குறைபாடு என்ன? சித்பவ பிராமணரின் புண்ணிய பூமியான பெஷ்வா ராச்சியத்தின் குறியீடாக பிராமணன் அல்லாத ஒருவன் இருப்பதா என்பதே அந்தக் குறைபாடாகும்.

இதனால் 1897இல் கொண்டாடப்பட்ட இரண்டாவது சிவாஜி விழா, சிவாஜி



படிப்பகம்

padippakam



பிறந்த நாளான ஏப்ரலில் கொண்டாடப்படுவது நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக புனித சமஸ்கிருத சத்ரபதி என்ற நிலையை சிவாஜி அடைந்த ஜுன் மாதத்திற்கு அது மாற்றியமைக்கப்பட்டது. இது பிராமணர்கள் வேதமோதி வழங்கப்படும் ஒரு ஞானஸ்தானமாகும்.

இந்த தேதி மாற்றம் மூலம் திலகர் முழு இந்திய மக்களுக்கும் ஒரு செய்தியை சொல்லியுள்ளார். அதை ஒரு தடவை சொல்லுவதுடன் மாத்திரம் நிறுத்தி விடவில்லை, ஒவ்வொரு வருடமும் அதை நினைவுபடுத்தியும் வந்தார். அது என்ன அந்த செய்தி? சனாதன இந்து அல்லாத எவனும், இரட்டைப்பிறப்போன் என்ற தகமையை பிராமணரிடமிருந்து பெறாதவன் எவனும் இந்திய தலைவனாக வரமுடியாது என்பதே அந்தத் தகவலாகும்.

இதனால் தான் பிராமணரல்லாத இந்திய தலைவரான காந்தி தனது யங் இந்தியா 1921, அக்டோபர் 12 இதழில் கீழ்க்கண்டவாறு பிரகடனம் செய்து கொண்டார் போலும். இதன்மூலம் இந்திய தலைவனாகவரும் தகமை தனக்கு உண்டு எனச் சொல்கிறார்.

நான் என்னை ஒரு சனாதன இந்து எனச் சொல்லிக் கொள்கிறேன். ஏனெனில்

1. வேதங்களையும், உபநிடதங்களையும், புராணங்களையும் இந்து சாத்திரங்கள் எனப்படுகின்ற அனைத்தையும், அவதாரங்களையும், மறு பிறப்புகளையும் நான் நம்புகிறேன்.
2. என் கருத்துப்படி, வேதப் பொருளில், தற்போது பொதுவான பக்குவமற்ற பொருளில் அல்லாமல் நான் வருணாசிரம தர்மத்தை நம்புகிறேன்.
3. மக்கள் நம்பும் பொருளில் அல்லாமல், இன்னும் விரிவான பொருளில் நான் பசுவைப் பாதுகாப்பதை நம்புகிறேன்.
4. விக்கிரக ஆராதனையை நான் நம்பாமலும் இல்லை.[8]

காந்தி ஒரு முழுமையான இந்துவல்லர் என்பதோர் கருத்து அப்போது நிலவி வந்தது. அரவிந்தரும் இதே கருத்தையே கொண்டிருந்தார். அவர் இதைப் பிரச்சாரமும் செய்து வந்தார். ஒரு குற்றச்சாட்டாகவும் வைத்து வந்தார். ஆனால் இது ஒரு அரசியல் விமர்சனமல்ல, மத நம்பிக்கை தொடர்பான விமர்சனமும் அல்ல, மாறாக வாழ்வியல் நெறி தொடர்பான விமர்சனங்களே ஆகும்.

சீடர் : இந்தியாவில் சில முக்கிய தேசிய பணியாளர்கள் ஐரோப்பிய சக்தியின் மறுபிறப்பாக எனக்குத் தோன்றுகிறது.

அரவிந்தர் :அவர்கள் மறுப்பிறப்புகள் அல்ல, ஐரோப்பிய சிந்தனையால் பலமாகத் தாக்கப்பட்டிருப்பார்கள். *உதாரணத்திற்கு, காந்தி ஒரு ஐரோப்பியர். உண்மையில் இந்திய உடலில் வாழும் ஒரு ருஸ்ய கிருத்துவர் அவர்.* அதுபோலவே ஐரோப்பிய உடல்களில் சில இந்தியர்களும் இருக்கின்றனர்.

சீடர் : காந்தி ஒரு ஐரோப்பியரா?

# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

அரவிந்தர் : ஆமாம், பல கிறித்துவர்களைவிடவும் உயர்ந்த கிறித்தவர் அவர் (நவீன காலத்தின் கிறித்துவர் என்றும் கூட சிலர் கூறுகின்றனர்) என்று ஐரோப்பியர்கள் கூறும்போது, அது மிகவும் சரியானதுதான். *காந்தியின் உபதேசம் எல்லாம் கிறித்துவ மதத்திலிருந்து வந்துள்ளன. இந்தியப் போர்வையில் இருந்தாலும் அடிப்படை உணர்வு கிறித்துவம்தான்.* அவர் இயேசு கிறிஸ்துவாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதே சிந்தனை அதிர்வுகளில்தான் இருக்கிறார். உபநிடதங்களையும் கீதையையும் அவர் தன் சிந்தனைக்கேற்ப விளக்கம் கொள்வார். எப்படியும் இந்திய மறைநூல்களை விடவும் பைபிள் மற்றும் டால்ஸ்டாய் அவரை மிகவும் பாதித்துள்ளன. அவரது போதனையில் ஜைன மதச் சாயலும் இருக்கிறது.

காந்தியினதும், அரவிந்தரினதும் ஆன்மீகம் பற்றிய ஒப்புநோக்கு ஆய்வு எமது இத்தலைப்புக்கு அப்பாற்பட்டது. ஆனால் இப்படியுமோர் பிரச்சனையுண்டு என்பதையும், அரவிந்தர் ஒரு ஆழ்ந்த மிகப் பரந்த பரிமாணமுள்ள ஓர் இந்துத்துவ தத்துவவாதி என்பதைப் புரிந்து கொள்ளவுமே இதை இங்கு குறிப்பிடுகிறோம். இவ்விவகாரம் தனியாக ஆராயப்படும். அரவிந்தரின் இக்கருத்து புதிய கட்சியினர் அனைவரினதும் கருத்தல்ல. ஆனால் புதியகட்சியினர் அரவிந்தரின் இக்கருத்தை நிராகரிக்கவில்லை.

**<u>திலகரின் மூன்றாவது மக்கள் இயக்கம்</u>** 1889, நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட கோறக்ஷாவ மண்டலய (பசுவதைத் தடுப்பு இயக்கமாகும்).

**<u>இவரின் நான்காவது மக்களியக்கம்.</u>** சமூக சீர்திருத்த எதிர்ப்பியக்கமாகும். 1880களின் மிகப் பிற்கூற்றில் கொண்டு வரப்பட்ட திருமண வயதை உயர்த்துவது என்ற சட்டத்தை எடுத்துக் கொள்வோம். இதை இவர் கடுமையாக எதிர்த்தார். இதை எதிர்த்து மக்கள் இயக்கங்களையும் உருவாக்கினார். நயிடாட் கமிட்டி என்றோர் மக்கள் அமைப்பு திலகரின் பின்னணியில் 1881, ஜனவரி 5இல் வைஸ்ரோயிற்கு மகஜர் ஒன்று சமர்பித்தது. அதன் சில வாசகங்கள் :

தம்மை சீர்திருத்தவாதிகள் என்று கூறிக் கொள்ளும் ஒரு சிலர், எந்த வழியிலும், 25 கோடி மக்களின் அதிகாரத்துவ பிரதிநிதிகளோ அல்லது குறைந்தது அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றவர்களோ அல்லர். அவர்கள் கடுகளவு சிறுபான்மையினரேயாவர். ஆகவே அரசாங்கம் இவர்களின் அபிப்பிராயங்களை இந்திய மக்களின் அபிப்பிராயங்களாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. அவற்றினை நம்பி இந்திய மக்களின் வறுமை, சமூக மரபு, மத அனுஷ்டானம் ஆகியவற்றில் தலையிடக் கூடியதான முறையில் சட்டதிருத்தம் எதையும் மேற்கொள்ளவோ, புதிதானவற்றை ஆக்கவோ கூடாது. [11]

மரபுகள், வழமைகள், அனுஷ்டானங்கள் எல்லாம் அப்படியே பின்பற்றப்படவேண்டும். இதுதான் திலகரின் அவாவாகும். இந்த அவாதான் சனாதனம்.

இவர் பயன்படுத்திய 'கடுகளவு சிறுபான்மையினர்' என்ற அதே சொற்பதத்தைத்தான் இந்திய வைஷ்ரோல் ரோய் 1853யின் பின் காங்கிரசுக்கு எதிராகப் பயன்படுத்தி காங்கிரஸிற்கு செவிமடுக்க வேண்டிய அவசியமில்லை எனக் கூறினார்.

## *தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

padippakam



இதைக் கண்டித்து திலகர் எதிர்ப்புக்குரல் எழுப்பினார். இதுதான் காங்கிரசுக்குள் எழுந்த பிரித்தானிய எதிர்ப்பு முதல் தீவிரக் குரலாகும். தாம் இந்திய மக்களின் ஒருசாராரை அடக்கலாம், ஆனால் தம்மை பிறர் அடக்கக் கூடாது. இது தான் திலகரின் தேசியம். இதைத்தான் ஜோதிராவ் பூலே பிராமணிய சாம்ராஜ்யம் என்கிறார்.

திலகர், தனது சொந்தப் பத்திரிக்கையான கேசரி இதழில் 1891 ஜனவரி 21இல் எழுதுகிறார். இந்தச் சட்ட வரைவானது இப்போதிருக்கும் இதே வடிவத்திலேயே சட்டமாக்கப்படுமானால் அது எமது மரபுகளையும், சாஸ்திரங்களையும் மிக மோசமாக சேதப்படுத்தி விடும். இதுதான் எமது ஆட்சேபணைக்கான பிரதான காரணியாகும். ஆகவே எவ்வளவு அழுத்தமாக முடியுமோ அவ்வளவு அழுத்தமாக நாம் இதை முன்வைக்க வேண்டும். [12]

ராணடே அணியினர் இம் மசோதாவை ஆதரித்து பூனாவில் ஒரு கூட்டம் நடத்த இருந்தனர். திலகரின் மக்கள் இயக்கம் இக்கூட்டத்தைக் குழப்பியது. குழப்பியவர்கள் திலகர் வாழ்க என முழக்கமிட்டனர். வழக்கு நடந்தது. ஆனால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை. சீர்திருத்தத் தலைவர்களுக்கு எதிராக திலகர் தனது கேசரியில் எழுதிய வசனங்கள் மக்களை அத்தலைவர்களுக்கு எதிராக தூண்டி விடுபனவையாகவே அமைந்திருந்தன. 1891, பிப்ரவரி 17 கேசரி இதழில் இவ்விதம் எழுதுகிறார்.

தர்மசாஸ்திரத்தில் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்யும்படி உங்களை யாரும் கோரவில்லை. இவற்றுள் இருந்து நல்ல வாக்கியங்களை (இது கிறிஸ்துவர்களுக்கு வீழ்ந்த அடி) கண்டெடுத்துத் தரும்படி உங்களை யாரும் கோரவில்லை. தர்ம சாஸ்திரத்தை சரியான வழியில் வியாக்கியானம் செய்ய உங்களுக்குத் தெரியாவிட்டால் குறைந்தது வாய்மூடி இருக்கவாவது பழகிக் கொள்ளுங்கள். [13]

பொத்தடா வாயை என்பதை மிக நாகரிகமாகச் சொல்லக் கூடாத ஒரு விசயத்தை சொல்லக் கூடிய ஒரு மொழி நடையில் சொல்கிறார். மத உணர்ச்சிகளை தூண்டும் வசனங்கள். சமூக சீர்திருத்த இயக்கம் ஒரு சனாதன இயக்கமாதலால் பிறமதங்களுக்கு எதிர்ப்பான உணர்ச்சியையும் இதனூடே தூண்டுகிறார். 1891, மார்ச் 24 கேசரி இதழில் இவ்வாறு எழுதுகிறார்:

எமது அரசு எம்மீது அதிகாரம் செலுத்துகிறது. எம்மை ஆளுகின்றது. இதனால் தமது வலிய கரங்களால் இந்துக்களாகிய எம்மை அடக்கி ஒடுக்குவதற்கான அதிகாரம் கொண்டதாய் உள்ளது.

... இந்த சட்ட வரைவின் வரலாற்றை பின்னோக்கிப் பார்ப்போமானால் நாம் இதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். முகமதியர்கள் தமது ஒரு கையில் வாளும் மறுகையில் குரானும் ஏந்தி இந்துக்களாகிய எம்மீது குடுமியை அறுத்தெறிந்து எம்மையெல்லாம் தாடி வைக்கும்படி பலவந்தப்படுத்தினார்கள். எமது துணிச்சல் மிக்க ஆங்கிலேயர்களோ நாம் புனித கங்கை நீரைப் பருகி மோட்சம் அடைவதற்கு பதிலாக, செந்நிற நீரை (வைன்) எமக்குப் பருக்கி எம்மை பரலோகத்தில் இருக்கும் தங்கள் தந்தையிடம் அனுப்ப



படிப்பகம்

padippakam



எண்ணுகிறார்கள். இவைகள் எல்லாம் நாம் பிறரால் கீழ்மைப்படுத்தப்பட்டுள்ளதற்கான ஆதாரங்களாகும். இந்தச் சட்டமும் இதில் ஒன்றாகும்.[14]

1896, 1897 ஆண்டுகளில் திலகர் பஞ்சம், பிளேக் நோய் ஆகியவற்றிற்கு எதிராக இயக்கங்கள் நடத்தினார். அப்போது நடைபெற்ற விக்டோரிய மகாராணியின் வைரவிழா கொண்டாட்டத்தைப் பகிஷ்கரித்தார். இது சிவாஜி விழா நடந்து பத்து நாட்களின் பின் நடைபெற்றது. இவ்வியக்கத்தின் போது ஆங்கிலேய அதிகாரி ஒருவர் சுடப்பட்டார். இதனால் பூனாவில் அடக்குமுறை மேலும் அதிகரித்தது. திலகர் இவ் அடக்குமுறையைக் கண்டித்து கேசரி பத்திரிக்கையில் கட்டுரை எழுதியதற்காக சிறை வைக்கப்பட்டார். ஒன்றரை ஆண்டு கடுங்காவல் தண்டனை. சிறையிலிருந்து விடுவிக்கப்படும்போது ஜெயராமன் உருவத்தோடு திலகரின் சித்திரம் வீடுகளிலும், கோவில்களிலும் வைத்து வழிபடப்பட்டது. இதிலிருந்துதான் லோகமான்யர் என்ற கௌரவப் பட்டம் பெற்றார்.

பிரித்தானிய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகளால் பாம்பே நகர துணி ஆலைகள் பாதிக்கப்படும்போது, அவ் ஆலை முதலாளிகளின் நலன் கருதி 1890களில் பகிஷ்கரிப்பும் நடத்தினார். இது பம்பாயில் மாத்திரம், அதுவும் கூட அரசியல் கோரிக்கையாகவல்ல ஒரு பொருளாதார கோரிக்கையாகவே அமைந்திருந்தது. பம்பாய், பூனா, ஆகிய இடங்களின் ஆலை முதலாளிகளில் ஒரு பகுதியினர், குஜராத் மார்வாடிகளும், பார்சியர்களும் ஆகும். பம்பாய் வாசிகள் எவரும் இல்லை. மீதமானவை பிரித்தானியருக்கு சொந்தமானவைகளாக இருந்தன. ஆலைத் தொழிலாளர்களுள் அநேகமானோர் மராட்டியர்கள்.

இஸ்லாமிய மன்னர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்ட மரபை, அந்த மன்னர்கள் காலம் முடிந்து ஐரோப்பிய காலம் தொடங்கிய பின்னர் முஸ்லீம் மக்களுக்கெதிரான போராட்ட மரபாக வளர்த்துவிட்டார். சென்னையில் வளர்ந்தளவிற்கு பிராமணர் பிராமணரல்லாதோர் முரண்பாடு மராட்டியத்தில் வளராததற்கு திலகரின் இந்த இஸ்லாமிய எதிர்ப்பே காரணமாய் இருந்தது. ஜோதிராவ் புலேயின் தலைமையில் பிராமணரல்லாதோர் இயக்கத்தை உருவாக்கும் முயற்சி நடந்து கொண்டிருந்தது. ராணடே, பிரம்ம சமாஜிகள் மற்றும் ஆரிய சமாஜிகள் ஆகியோரின் நட்பும் புலேயிற்கு இருந்தது. புலேயின் அம்முயற்சி வெற்றி பெற்றிருந்தால் இது இந்துசனாதன சார்பற்ற ஒரு சமூக சீர்திருத்த இயக்கமாக இருந்திருக்கும். எந்த மதமும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காத நிலை இருந்திருக்கும். ஒன்றைக்கண்டு மற்றொன்று அஞ்சாத நிலை இருந்திருக்கும். வெவ்வேறு மதங்களிடையே ஜனநாயக பூர்வமான கருத்துப் பரிமாற்றம் நடந்திருக்கும். அதாவது மதச்சார்பின்மை மராட்டியத்தில் 1880களிளேயே அமைப்பு வடிவம் பெற்றிருக்கும். அதை உடைப்பதே திலகரின் கடமையாக இருந்தது. இதற்காகவே இந்த விழாக்கள் நடந்தன. *இந்திய வரலாற்றின் புரட்சிக் குழந்தை அதன் கருவிலேயே அழிக்கப்பட்டது. ஜோதிராவ் புலேவுக்கு வீர அஞ்சலி செலுத்திக் கொள்வோம். சிசுக் கொலையில் ஈடுபட்ட திலகரை என்ன செய்வது? முற்போக்கு ஜனநாயகவாதிகள் பதில் சொல்வார்கள்.*

இவ்வித விழாக்கள், பாம்பே தொழிலாளர் தாம் தொழிலாளர் என்ற அடிப்படையிலன்றி இந்துக்கள் என்ற அடிப்படையில் ஏனையோருடனும் தமக்குள்ளும்

***தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —***

படிப்பகம்

padippakam



ஒன்று சேர்வதையும், தமது இந்து முதலாளிகளுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதையும் சாத்தியமாக்கின. 1908இல் திலகர் சிறைபிடிக்கப்பட்டபோது பம்பாய் தொழிலாளர்கள் தொடர்ச்சியான பெரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்திய நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வந்த தோழர் லெனின், இந்நிலைமையை வரவேற்று எழுதியுள்ளார். இவ்வேலை நிறுத்தம் ஓர் அரசியல் தன்மை கொண்ட வேலை நிறுத்தமேயாகும். ஆனால் இதுதான் முதலாவது என்பதல்ல. அதே ஆண்டில், பிப்ரவரி 27ஆம் தேதி, தூத்துக்குடி கோரல் ஆலைத் தொழிலாளர்கள் 200 பேர், வ.உ.சி., சுப்ரமணியசிவா ஆகியோரின் தலைமையில் வேலைநிறுத்தம் செய்தனர். இது தொழிலாளர் நலனை மாத்திரமே முன்வைத்து வெள்ளைக்கார முதலாளிக்கு எதிராக நடைபெற்ற வேலைநிறுத்தமாகும். அந்நியரின் பொருளாதார நலனுக்கு எதிராகவும், தொழிலாளரின் பொருளாதார மற்றும் அரசியல் நலனை முன்வைத்து நடைபெற்ற வர்க்கப் போராட்டமாகும். ஒன்பது நாட்கள் நீடித்த இவ்வேலை நிறுத்தம் மார்ச் 7ம் தேதி முடிவடைந்தது. கோரிக்கைகளும் வெல்லப்பட்டன. சம்பளம் 50%த்தால் அதிகரிக்கப்பட்டது. ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, இதே தொழிலாளர்கள் அதே ஆண்டு மார்ச் 14 மார்ச் முதல் 19 வரையான ஆறு நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இது வ.உ.சி., சுப்ரமணிய சிவா, பத்மநாபா ஆகியோரை கைது செய்ததற்கு எதிராக நடைபெற்ற வேலை நிறுத்தமாகும். இவ் வேலை நிறுத்தம் தனித்த தோன்றல்ல, திருநெல்வேலி, தூத்துக்குடி பிரதேசத்தில் நடைபெற்ற எழுச்சியின் ஒரு பகுதியாகவே இது அமைந்திருந்தது.

இந்திய தேசியத்தை மக்கள் மயப்படுத்த வ.உ.சி. எடுத்த முயற்சியில் இதுவும் ஒன்றாகும். ஒரு அரசியல் தலைவனுக்குரிய நேர்மையும், போர்க்குணமும், மக்கள் ஆதரவும் வ.உ.சி.க்கு இருந்துள்ளதை இது எடுத்துக் காட்டுகிறதல்லவா? ஆனால் இன்றோ?.......

திலகர் சிறைபிடிக்கப்பட்டதைக் கண்டித்து வேலை நிறுத்தம் நடைபெற்றது. 1908 ஜூலை மாதம் 23இல் இருந்து 27 வரையாகும். இந்த தகவல் லெனினுக்கும், போல்ஷ்விக் பத்திரிகைக்கும் தெரியாமல் போனது நல்லதல்லதான். ஆனால் இந்த பம்பாய் வேலை நிறுத்தத்தை ஆதரித்து எழுதிய போல்ஷ்விக் (ஜூலை 20, 1908இதழ்) திலகரை இந்திய ஜனநாயகவாதி என அடைமொழியிட்டு அழைத்தது கண்டனத்துக்குரியதே.

அதே நேரத்தில் அரவிந்தரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'வந்தேமாதரம்' இதழ் இவ்விரு தூத்துக்குடி வேலை நிறுத்தத்தையிட்டும் மிக அற்புதமான வரவேற்புச் செலுத்தியது.

திலகரோ மக்கள் நலன்கள் எதுவுமற்ற இந்துத்துவ மக்கள் இயக்கங்களையே உருவாக்கினார். அவருக்கு மக்கள் மத்தியில் நல்லதோர் வரவேற்பிருந்ததையும் காணக் கூடியதாய் இருந்தது. பின்னாளில் இவர் ஆங்கில செய்தித் தாள் ஒன்றிற்கு எதிராகக் கொடுத்த வழக்கில் தோல்வியுற்ற போது இவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் நட்டமாகிறது. அப்பணத்தை மக்களே சேர்த்துக் கொடுக்கிறார்கள். தொழிலாளர் மத்தியிலும், ஆலை முதலாளிகள் மத்தியிலும் ஒருசேர மதிப்புப் பெற்றிருந்த இத் தலைவர் மேட்டுக் குடியினரின் வளர்ப்புப் பிள்ளையாகவே இருந்துள்ளார். இதோ ஓர் தகவல் :

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam

## 43 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

அக்டோபர் 22ஆம் தேதி நடத்தப்பட்ட மாநாட்டு எதிர்ப்புக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய சார்டார் பாபா மஹாராஜ் பண்டிதர், தன் மரணத்தின் முன் 1897இல் தனது பரந்த சொத்து முழுமைக்கும் திலகரையே நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமித்தார். சிறிதர்வித்தாஸ் என்னும் பிராமண வர்த்தகர் திலகரின் கட்சிக்கு போதியவரை பணம் வழங்கினார். இவர்களைப் போன்றவர்கள்தான் திலகரின் மாநாட்டு எதிர்ப்புக்கு ஆதரவு கொடுப்பவர்களாகவும், அதற்கெதிரான மூர்க்கத்தனமான செயற்பாட்டிற்கு ஆணையிடுபவர்களாகவும் இருந்தனர். [15]

திலகர், அரவிந்தரின் மிக நெருங்கிய நண்பர். 1902ல் தான் இவர்கள் நேரில் சந்தித்துக் கொண்டார்கள். அப்போதிருந்து இருவரும் இந்திய தேசிய கட்சி என்ற ஓர் அமைப்பை உருவாக்க முயன்று வந்தனர். இதன் விளைவுதான் 1907 இல் காங்கிரஸ் பிளவாகும். வங்காளத்தில் தேசிய கட்சி என அறிமுகமாகியிருந்த இக்கட்சியை பாரதியாரே தமிழில் புதிய கட்சி என அறிமுகப்படுத்துகிறார். இருந்த போதும் அரவிந்தர் புதிய விளக்கு கட்டுரைத் தொடர் எழுதும் போது திலகர் அதை முழுமையாக ஆதரிப்பவராக இருந்தார். தேசிய இயக்கம் தொடர்பான திலகரின் நிலைப்பாடும் அரவிந்தரின் நிலைப்பாடும் ஒத்துப் போபவையாகவே இருந்துள்ளன. இன்னும் சொல்லப்போனால் ஒரு சிறந்த அமைப்பாளனான திலகரின் நடவடிக்கைகளை அரவிந்தர் தனது வந்தேமாதரம் இதழில் தத்துவார்த்த ரீதியில் நியாயப்படுத்தி வந்தார்.

ஆனால் அரவிந்தர் மக்கள் இயக்கத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. மக்கள் அமைப்புகளிலும் நாட்டங்காட்டினார். இதனால்தான் சிறந்த மக்கள் அமைப்பாளனான வ.உ.சியை அரவிந்தர் தன்வயப்படுத்த முற்பட்டார். திலகரிடம் இல்லாததோர் திறமை வ.உ.சியிடம் இருந்தது. அரவிந்தர் அதை இனங்கண்டு கொண்டார்.

மார்ச் 27, 1908 வந்தேமாதரம் இதழில் அரவிந்தரால் வ.உ.சி. பற்றி எழுதப்பட்ட பந்தியின் ஒரு பகுதியைத் தருகிறோம்.

"அரசியல் வாழ்க்கையின் சுவையான அம்சம் அதில் காணப்படும் தோழமைதான். இது, மனிதர்களை ஒன்றாகப் பிணைக்கின்றது. அனைத்து கூட்டு நடவடிக்கைகளையும் இறுக அணைத்துப் பிடிக்கும் சீமேந் சாந்தாக இருப்பதுவும் இந்தத் தோழமைதான். ஒரு அரசியல் தலைவன் தன்னைப் பின்பற்றுவோர்களின் நலன்களுக்காக தான் துன்புற தயாராக இருப்பதுவும் மக்களால் ஏற்றிப் போற்றப்பட்டு புகழின் உச்சியில் இருக்கும் ஒரு தலைவன் தனது தொண்டர்களையும் தனது சகாக்களையும் சிறைக்கு அனுப்பிவைப்பதையும் விட தான் சிறையிலேயே தனது வாழ்நாளைக் கழிக்க முன்வருவதும் இந்தியாவின் அரசியல் வாழ்க்கை உயிர்த்துடிப்புள்ளதாக ஆகிவருகின்றது என்பதற்கான குறியீடுகளல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும். சிறிமான்சிதம்பரம்பிள்ளை அவர்கள் தூத்துக்குடி போராட்டம் முழுமையினதும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத குணவியல்பை வெளிப்படுத்தியுள்ளார். இது மிக உயர்ந்த இலட்சியத்துடன் இணைந்த அவரின் துணிச்சலை எடுத்துக் காட்டுகின்றது. இவர் ஓர் உண்மையான தேசியவாதி என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றுகள் வேண்டும். தன்னுடன் இணைந்த போராடியவர்களை விடுவிக்கவில்லையானால் தானும் விடுதலை பெறத் தயாராக இல்லை என்று துணிச்சலுடன் பகர்ந்த அவரின் செயலை என்னவென்று புகழ்வது....." என் புகழ்கிறார்.

### *தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam



# தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி.

பார்ப்பன அக்கிரகாரங்கள் அவர்களின் லட்சியத்தைப் பிரதிபலிக்கிறது என்றால் தலித் சேரிகள் நமது லட்சியத்தைப் பிரதிபலிக்கட்டும். அவர்கள் வீட்டின் மாடிகளிலிருந்து (அவர்களுக்குப் பெரிய பெரிய மாளிகைகள் உண்டு) இந்தியாவை இந்து மயமாக்குங்கள் என்று குரல் கொடுத்தால் நாம், கள் இறக்கும் பனைமர உச்சிகளிலிருந்தும் வயல்களிலிருந்தும், மரக்கிளைகளிலிருந்தும் குரல் கொடுப்போம். *இந்தியாவை தலித் மயமாக்குவோம். சத்தம் போட்டுச் சொல்லுவோம்.* நாங்கள் இந்துத்துவத்தை வெறுக்கிறோம். நாங்கள் பார்ப்பனியத்தை வெறுக்கிறோம், எல்லாவற்றையும் விட அதிகமாக எங்கள் பண்பாட்டை நேசிக்கிறோம். நாங்கள் எங்களை நேசிக்கிறோம். [16] - காஞ்சா அய்லய்யா

புதியகட்சியினரான உங்கள் தேசிய நிகழ்ச்சி நிரலில் எங்கள் விவகாரங்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் பிரதிநிதிகள் விசனப்பட்டார்கள். உங்கள் என்பது பிராமணரையும், எங்கள் என்பது சூத்திரர் மற்றும் அசற்சூத்திரரையும் குறிக்கிறது. இது எவ்வளவு அவலம். இந்தியத் தேசியம் உருவாக்கப்படும்போதே இந்தியன் தொலைந்து போய் நின்றுள்ளானா? சுதந்திரக் காற்று அக்ரகாரத்துடன் நின்றுவிடக்கூடாது. அது எமது வீட்டிற்கும் வரட்டும் என நீதிக்கட்சி அமைப்பாளர் டாக்டர் நாயர் சொன்னது இதற்காகத்தானா? அல்லது இந்தியன் இன்னுமே தோன்றவில்லையா?



__ஜோதிராவ் புலே__ : சூத்திரராலும், ஆதி சூத்திரராலும் மகாத்மா என்று போற்றப்பட்ட ஜோதிராவ் புலே (1827 - 1890) என்ன சொல்கிறார்.

சில வசனங்கள் மட்டும் சொல்லவில்லை, *"பார்ப்பனப் போர்வையில் இந்திய பேரரசில் உள்ள அடிமைமுறை"* என்றோர் நூலே எழுதிவிட்டார். பார்ப்பன ஆதிக்கமுள்ள இந்தியப் பேரரசு என்று பிரகடனப்படுத்தியும் விட்டார். இவர் எவ்விதம் சனாதன தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய தேசியத்தை ஏற்றுக் கொள்வார்? இவர் காங்கிரசினுள் சீர்திருத்தத்தின் நெருக்கமான ஆதரவாளரான ராண்டே அணியைச் சேர்ந்தவர். நல்லதோர் மிதவாதி. கொடுங்கோன்மை ஆரியர்களின் அடிமைத்தனத்திலிருந்து பிரித்தானியர் இந்தியாவை வெற்றி கொண்டார்கள் எனக் கூறினார். [17]

இவர் ஒரு தனிநபரல்ல. சாதிய அடக்குமுறைக்கு எதிராக இயக்கங்கள் பல நடத்தியவர். சமூக சீர்திருத்தங்களில் பாராட்டப்படக்கூடிய பல பெறுபேறுகளைப் பெற்றவர். சத்திய சோதக் சமாஜ் என்றோர் அமைப்பையும் உருவாக்கியவர். ஆனால் இவர் புதியகட்சி காலகட்டத்திற்கு முன்னையவர்.

## புதிய கட்சி

படிப்பகம்

# 45 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

வித்தர்ராம் ஷண்டே 1906இல் தென்னிந்திய பிற்பட்ட வகுப்புச்சங்கம் உருவாக்கப்பட்டது. வித்தல்ராம் ஷண்டே என்னும் பிரம்மசமாஜியே இதை உருவாக்கினார். இவர் சிவானந்த சாஸ்திரியின் (1900களின் பிரம்ம சமாஜ தலைவர்) மாணவராவார். பாம்பே மாநிலத்தைச் சேர்ந்த இவர் அனைத்திந்திய தீண்டாமை எதிர்ப்பு மாநாட்டையும் கூட்டினர். [18]. 1906 புதியகட்சிக்கு அஸ்திவாரமிட்ட ஆண்டு என்பதைக் கவனிக்க.

## வைகுண்ட சுவாமிகள் (1809 - 1851)



இவரின் செயற்படு காலம் புதிய கட்சி காலகட்டத்திற்கு சுமார் அரை நூற்றாண்டு முந்தியதாகும். காங்கிரஸ் தோன்றியதே 1885இல் தான். ஆயினும் தீண்டப்படாத சாதிப்பிரிவில் ஒன்றான சாணார் சாதியைச் சேர்ந்த இவர் முன்னெடுத்துச் சென்ற சமூக சீர்திருத்த இயக்கமானது, சமஸ்கிருத நெறிப்படுகையை, பார்ப்பனிய சமூக மேலாண்மையை, சனாதன தர்மத்தின் அதிகார நிலையை எதிர்க்கும் தன்மை பெற்றதாகவே இருந்தது. புதிய கட்சியினர் இந்திய சமூகத்தை என்ன செய்ய நினைத்தார்களோ, அதற்கு எதிரானதையே வைகுந்த சுவாமியின் தலைமையில் சாணார்கள் 19ம் நூற்றாண்டிலேயே செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

குமரிப் பகுதியைத் தனது பிறப்பிடமாகவும், முத்துக்குட்டி என்பதை தனது இயற்பெயராகவும் கொண்டிருந்த வைகுந்த சுவாமிகள் 1833இல் இருந்து பொது வாழ்வில் ஈடுபாடு கொள்கிறார். நான்கு ஆண்டுகள் தவமிருந்தார். சுவாமி என்ற அங்கிகாரத்துடன் திருவிதாங்கூர் மஹாராஜாவையும், கிறிஸ்துவ மதபீடங்களையும், அந்நிய ஆட்சியாளரையும் ஒருங்கே எதிர்த்தார்.

அடித்தட்டு மக்களின் மீதான பொருளாதார அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடினார், தீண்டாமைக்கு எதிராகப் போராடினார். கிறிஸ்துவ மதமாற்றத்திற்கு எதிராகப் போராடினார். மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடினார். ஒடுக்கப்பட்ட சாதி மக்களின்பண்பாட்டுக் கோலங்களை நன்னெறிப்படுத்துவதற்காகப் போராடினார்.

இதற்காக இவர் *சமத்துவ சங்கம்* என்றோர் அமைப்பை உருவாக்கினார். இதில் மாதரையும் உறுப்பினர்களாகச் சேர்த்தார். வழிபாட்டுத்தலமாகவும், கல்வி நிலையமாகவும், தனது போதனைகளைப் பரப்பும் பரப்புரை மையமாகவும், நிழல் தாங்கல் என்னும் நிலையங்களை பல ஊர்களிலும் அமைத்தார். தனக்கென்று பல சீடர்களை உருவாக்கினார். துவையல் பந்தி என்ற பெயரில் முகாம்கள் அமைத்தார். குறிப்பிட்ட சில நாட்கள் இங்கு போதனைகள் நடக்கும். அந்த நாட்களில் ஒரு வகையான தவவாழ்வு நடக்கும். ஒடுக்கப்பட்ட மக்களிடையே நெருக்கத்தையும், ஒருமைப்பாட்டையும், ஏற்படுத்துவதற்காக முட்டம் பகுதியில் ஒரு சமதர்ம காலனி அமைத்தார்.

***தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —***

padippakam



அரசியல் கட்சிகளே இல்லாதிருந்த அந்த நாளில் ஒடுக்கப்பட்ட சாதியினிடையே இவ்விதமான அமைப்புகளை உருவாக்கிய வைகுந்த சுவாமிகள் தனது சங்கத்திற்கு என கொடி ஒன்றையும் அமைத்தார். காவி நிறத்தில் வெள்ளை தீபச் சுடரைத் தாங்கிய அந்தக் கொடி அன்புக் கொடி என அழைக்கப்பட்டது. தன்னைப் பின்பற்றுவோரை இவர் அன்புக் கொடி மக்கள் என அழைத்தார். (இது தான் அட்டைப்படமாகவுள்ளது)

இவரின் சமாதி சாமித்தோப்பில் உள்ளது. இவர் வழி வந்தவர்கள் இன்றும் உள்ளனர். இவர்கள் இறந்தோரை எரிப்பதில்லை. புதைக்கவே செய்கிறார்கள். அத்துடன் கருமாதி, திதி போன்ற சடங்குகளில் விருப்பமில்லாதவர்களாகவே உள்ளனர்.

நிழல் தாங்கல்களில் வழிபாடு நடந்தன. ஆனால் விக்ரகம் கிடையாது. பூசாரிகளைத் தவிர்ப்பதற்காக விக்ரமும் தவிர்க்கப்பட்டது. இதற்கான சித்தாந்த விளக்கமாக அவர் தந்தது,

மறையினிலடங்கா, இறையினிலடங்கா, வணங்கினுமடங்கா,
பலவகையிலுமடங்கா நுறையினிலடங்கா, தொல்புவியிலடங்கா,
சுருதியிலடங்கா, சகயினிலடங்கா, உறவினிலடங்கா,
மொழியிலுமடங்கா, யுகத்திலுமடங்கா, ஒரு விதத்திலுமடங்கா

"தெய்வத்தை சனாதனப்படுத்துவதற்காக சனாதன இந்துக்கள், அதற்கோர் மொழியைக் கொடுத்தார்கள். அதுதான் சமஸ்கிருதம், அதை நிராகரித்தார், 'மொழியிலுமடங்கா' என்றார்.

அதற்கு பற்பல உருவங்களைக் கொடுத்தார்கள். இடையில் பூசகர் என்னும் தரகரையும் உருவாக்கினார்கள். இதை நிராகரிக்கிறார். 'பலவகையிலுமடங்கா' என்கிறார்.

சனாதனத்தை மையமாகக் கொண்டு மனுதர்மத்தை அமுல்படுத்தி வந்தார்கள். ( சுவாமிகளின் காலத்தில் மனுதர்மம் அமுலில் இருந்தது ) இதையும் நிராகரிக்கிறார். இதனால் முறையினிலடங்கா என்கிறார்.

வேதகாலத்தை மீட்போம் என்றார்கள். சுவாமிகள் இதையும் நிராகரிக்கிறார். தொல்புவியிலுமடங்கா என்றார்.

இறுதியில் ஒரு விதத்திலுமடங்கா என்கிறார். சனாதனத்தின் சடங்குகள், மத அனுஷ்டானங்கள், வழிபாட்டு ஒழுகலாறுகள் அனைத்தையும் நிராகரித்தார்.

" காணிக்கையீடாதுங்கோ காவடி தூக்காதுங்கோ
வீணுக்குத் தேடுமுதல் விருதாவில் போடாதுங்கோ

என்கிறார்.

மூடநம்பிக்கை மட்டும் எதிர்க்கப்படவில்லை, கடவுளின் பேரால் ஒடுக்கப்பட்டோரின் செல்வம் கொள்ளை போவதும் கண்டிக்கப்படுகின்றது. தேடிய பணத்தை பயனற்று செலவு செய்யாதீர்கள் என்கிறார். *'பிராமணர்களைப் பயம் காட்ட*



படிப்பகம்

padippakam



*நாம் வருவோம்'* என்று மக்களுக்கும் *'பிராமண வேசம் போட பக்தன் மாரே நீங்கள் உண்டு'* *எனத்* தனது சீடர்களுக்கும் உரைக்கிறார்.

அது ஒரு வேடம் அதை யாரும் போடலாம் என்கிறார். இவரின் சீடர்களின் மிகப் பெரும்பான்மையோர் சாணா சாதியினரேயாகும்.

வைகுந்த சுவாமிகளின் தத்துவமும், கருத்துநிலையும் அவர் இறந்ததன் பின்னரும், முத்துக்குட்டியிசம் என அழைக்கப்பட்டது. ஆனால் இன்று அது மறக்கப்பட்டு விட்டது. பார்ப்பனிய வரலாற்றாளர்களும் அவரை மறந்து விட்டார்கள். திராவிட வரலாற்றாளர்களும் அவரை மறந்து விட்டார்கள். பிரித்தானிய அரசின் முழுமையான உதவியுடன் செயற்பட்ட ராஜாராம் மோகன் ராய் மட்டும் பெரிதுபடுத்தப்படுகிறார். பார்ப்பானியரான ராய் பார்ப்பனிய நெறியில் இருந்து விலகாமல் பார்ப்பனியரிடையேயான சமூக சீர்திருத்தத்திற்காக உழைத்தார். அவர் சான்றோர்தான். ஆனால் அவர்தான் சான்றோர் என்பதில்லை. இழிசனர் என ஒதுக்கப்பட்ட முத்துக்குட்டி போன்ற சான்றோர்களும் உள்ளார்கள்.

புதிய கட்சியின் தோற்றத்திற்கு முன்னர் சனாதன நெறிப்படுகைக்கு எதிராக பல மக்கள் இயக்கங்கள் இருந்துள்ளன. அவற்றின் பட்டறிவுதான் புதிய கட்சியின் மிக உத்வேகமான சனாதன நெறிப்படுகைக் கோட்பாடாகும்.

## திரு. அருட்பிரகாச வள்ளலார் (எ) இராமலிங்க அடிகள்.(1827-1872)



வள்ளலாரின் செயற்படு காலத்துக்கும் புதிய கட்சியின் செயல்படுகாலத்திற்கும் இடையே சுமார் கால் நூற்றாண்டுகால இடைவெளியுண்டு. அது மாத்திரமல்ல இவர் தீண்டப்படாத சமூகத்தைச் சேர்ந்தவரல்ல. இவரின் செயற்படுகளம் தீண்டப்படாத மக்களுமல்ல. ஆயினும் இவர் தமிழ்நாட்டை சனாதன நெறிப்படுத்துகைக்கு ஆட்படுத்தும் முயற்சிக்கு எதிராக நின்ற முன்னணிப் போராளியாவார். சனாதனிகளும், அவர்களின் வெள்ளாள முகவர்களான வைதீக சைவ சித்தாந்திகளும் இராமயாப் பிள்ளையின் புதல்வனான இந்த வெள்ளாளரையும் இவரின் இயக்கத்தையும் தீண்டத்தகாதவர்களாகவே கருதினார்கள். அவரின் இருத்தலே சனாதனத்தை தீட்டுப்படுத்தி விடும் என்பதற்காக கற்பூர நெருப்பில் இவரின் உடல் தீட்டு நீக்கப்பட்டது. அந்நிகழ்ச்சியைக் காணும் கண்களும், அப்புகையை முகரும் நாசிகளும் தீட்டுப்பட்டுவிடும் என்பதற்காக அவை இரகசியமாகவே நடந்தேறின.

வள்ளலார், வைகுந்த சுவாமிகள் போன்றோ, ஜோதிலால் பூலே போன்றோர் தீண்டாமைக்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. கருத்துநிலை மட்டத்திலான போராளியாகவே இருந்துள்ளார். இவரும் சிலைகள் வழிபாட்டைத்



படிப்பகம்

padippakam



தவிர்த்து ஜோதி வழிபாட்டை முன்வைத்தார். கோவிலுக்குப் பதிலாக ஞானசபை என்ற நிலையத்தை அமைத்தார். இதன் மூலம் இவர் சைவமதத்தை துறந்தார். நடராசரை மறந்தார். சனாதனத்திற்குப் பதிலாக, சமரச சன்மார்க்கம் என்னும் புதியதோர் மார்க்கத்தை முன்வைத்தார். வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மார்க்கங்களுக்கும் தனியான விளக்கம் கொடுத்தார்.

தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பவையே அந்த நான்கு மார்க்கங்களுமாகும்.

| மார்க்கம் | வேதவிளக்கம் | வள்ளலார் விளக்கம் |
|---|---|---|
| தாசமார்க்கம் | இறைவனுக்கு அடிமை | பிறரை அடிமைப்படுத்தல் |
| சற்புத்திர மார்க்கம் | இறைவனுக்கு மகனாதல் | பிறரை மகன்போல் நேசித்தல் |
| சகமார்க்கம் | இறைவனுக்கு நண்பனாதல் | பிறரை நண்பர்போல் நேசித்தல் |
| சன்மார்க்கம் | இறைவனே தானாதல் | தன்னைப்போல்பிறரை நேசித்தல். |

தன்னைப் போல் பிறரை நேசித்தல் என்பதில் 'தான்' எப்படி எந்த நிபந்தனையும் அற்றதோ, அதாவது எந்த மனிதனும் இந்த 'தானு'க்குள் தன்னை நிரப்பிக் கொள்ளலாம், அதுபோல் இந்தப் பிறரும் நிபந்தனையற்றது. மனிதன் என்ற எவனுக்கும் (பொதுப்பாலில்) பொருந்துவது. தீண்டாமை இங்கு ஒழிகிறது. இதுதான் மனிதநேயமாகும். இந்த மனித நேயத்தை முழுமைப்படுத்துவதற்காக ஜீவகாருண்யம் முன்வைக்கப்படுகிறது. உயிர்கள் அனைத்தின் மீதும் நேசம் கொள்ளல் என்பது முன்வைக்கப்படுகிறது.

மனித நேய இந்திய மரபான ஜீவகாருண்யம் புலால் உண்ணாமை என்ற மட்டத்துக்குள் குறுக்கப்பட்டது. வள்ளலாரும் இத்தவறைச் செய்தார். சனாதனிகள் இத்தவறை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி புலால் உண்பவர்களை இழிசாதி என்று வரையறுத்துவிட்டார்கள். இதுதான் சனாதன இந்திய மரபாகும். அதாவது ஜீவகாருண்யம் சமஸ்கிருத நெறிப்படுத்தப்படுகிறது. அது சாதித்துவேசம் போதிக்கின்றது. அங்கு மனிதநேயத்தின் சுடலைச் சுடரில் தீண்டாமை ஒளிர்கிறது.

ஆனால் வள்ளலாரின் ஜீவகாருண்யமானது, (அதுதான் இந்திய மக்கள் மரபு) உன்னைப் போல் எல்லோரையும் நேசி என்கிறது."

"ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாகவும், நினைக்கக் கூடாது." இது வள்ளலார் வாக்கு.

வள்ளலார் சமஸ்கிருத மொழிக்கு எதிரானவரல்ல. சன்மார்க்க சங்கத்தின் துணை அமைப்பாக சன்மார்க்க போதனா பாடசாலை அமைத்தார். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஆகிய மூன்று மொழிகளிலும் படிப்பு நடந்தது. சமஸ்கிருத மொழி



படிப்பகம்

padippakam



மேலாண்மைத் திணிப்பையே எதிர்த்தார். வள்ளலாருக்கும் சங்கராச்சாரியாருக்கும் இடையே நடந்த உரையாடலில், சங்கராச்சாரியார் சமஸ்கிருதமே மாத்ரு பாஷை என்று கூறியதை எதிர்த்து தமிழ் பித்ருபாஷை என்று கூறி அதற்கு, விளக்கமும் கொடுத்தார். இவ்விளக்கம் 'தமிழ் சிறி ராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது' என்ற மகுடமிட்டு உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை என்னும் திங்களிதளில் 1897 ஆகஸ்ட் 21இல் வெளியானது. சமஸ்கிருத நெறிப்படுத்தல் அல்லது சனாதன நெறிப்படுத்தல் என்பதன் ஓர் அங்கந்தான் சமஸ்கிருத மொழியின் மேலாண்மைத் திணிப்பாகும் என்பதை வள்ளலார் மிகச் சரியாகவே புரிந்து கொண்டிருந்தார். அது ஒரு மொழியின் மேலாண்மையில்லை, அது ஒரு பண்பாட்டின் மேலாண்மைக் கூறுகளில் ஒன்று என்பதை புரிந்திருந்த வள்ளலார் இம் மொழிபற்றி 'இடம்பரத்தையும், ஆரவாரத்தையும், பிரயோசத்தையும், பெருமறைப்பையும், போதுபோக்கையும் உண்டுபண்ணுகிற ஆரிய முதலிய பாஷைகள்' என்று கூறுகிறார்.

சனாதனம் எவ்விதம் சமஸ்கிருத மேலாண்மை மூலம் தனது மேலாண்மையைப் பேணிக் கொள்ள முயன்றதோ அதுபோல வைதீக சைவ வேளாளர்கள் தமிழை சைவத்தின் மொழியாக்கினார்கள். அதை முருகனின் மொழியாக்கினார்கள். இதன் மூலம் தமிழ் மொழி பேசும் கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் தமிழர் என்ற மனித இன குழுமத்தில் இருந்து விலக்கி வைத்தார்கள். சைவக் கோவில்களுக்கு வெளியே நிறுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதியினரையும் (பஞ்சமர்கள்) தமிழர் இல்லை என்றாக்கினார்கள். உருவாகி வந்த தமிழ் தேசியம் வைதீக சைவவெள்ளாளத் தேசியமாக இருக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் இந்த வைதீக சைவ வெள்ளாளருக்குத் கருத்துநிலைத் தலைமை தாங்கினார். இது சனாதன நெறிமுறைப்படுத்தல் என்ற சமூக செல்நெறியின் உட்பிரிவாக இருந்தது. இந்த சைவத்தமிழ் கோட்பாடு பிராமணர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மறுத்தாலும் பிராமணரின் மேலாண்மையில்லாத சனாதன நெறிமுறைப்படுத்தலை வேண்டிநின்றது.

சைவத்தமிழ் காவலரான இந்த யாழ்ப்பாண ஆறுமுக நாவலர் (1822 - 1879) தமிழகத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். ஆறு வருடம் (1864 - 1870) தொடர்ச்சியாக தமிழகத்தில் வாழ்ந்து வந்தார். தமிழகத்தில் பிராமணர் அல்லாத பல தமிழ் இலக்கிய நிறுவனங்களின் ஆதரவு இவருக்கு இருந்தது. அவர் தமிழகத்தில் இருந்த காலை வள்ளலாருக்கு எதிரான கருத்துப் போராட்டத்திலும் ஈடுபட்டார். நாவலர் வள்ளலாருக்கு எதிராக கடும் கோபம் கொண்டிருந்தார்.

வள்ளலார் நேரடியாக அரசியலில் ஈடுபடாவிட்டாலும் சனாதன தேசிய உருவாக்கத்திற்கும், சைவத்தமிழ் தேசிய உருவாக்கத்திற்கும் எதிரான ஒரு கருத்துநிலைத் தள போராளியாய் இருந்துள்ளார்.

மதங்களும் சனாதனமும் இரண்டுபட கலந்து இருந்ததனால் இவர் இந்து மதத்தினை எதிர்த்தார். ஆனால் இந்து மதத்திலிருந்து விலகவில்லை. பிறமதங்களைத் தழுவவில்லை. நாத்திகராகவும் ஆகவில்லை. சனாதன இந்து தேசியத்துக்குப் புறம்பான



படிப்பகம்

padippakam



சமூக விவகாரங்களில் முற்போக்கு ஜனநாயகத் தன்மை கொண்ட மக்கள் இயக்கங்களை ஆக்குவதிலான முன்னோடிகளில் இவரும் ஒருவர். இவரின் கருத்துநிலைத் தாக்கம் புதிய கட்சி காலகட்டத்திற்கும் தொடர்ந்தது. இதனால்தான் 1904இல் பாலசுந்தர நாயக்கர் என்பவரின் மருட்பா மறுப்பு நூலில் இதுகாலம் வரை (1904 வரை) இராமலிங்கரைக் கண்டித்து 18 நூல்கள் வெளிவந்துள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. மருட்பா மறுப்பு அவரை ஆதரித்து வந்த நூலாகும்.

சிறந்த இழிசனர் இலக்கியவாதியான வைகுந்த சுவாமியையும், சனாதனமறுப்பு இராமலிங்கனாரையும், நூற்றாண்டு கவிஞன் எனப் போற்றப்படும் பாரதியார் கண்டு கொள்ளவில்லை. சனாதனமும் இவர்களைக் கண்டு கொள்ளாதது வியப்பில்லை. ஆனால் திராவிடமும், மார்க்சியமும் கூட கண்டு கொள்ளாமல் போனது ஏன்? அவர்கள் மீதும் காவி படிந்திருந்ததா?

## நாராயணகுரு



இவர் திருவிதாங்கூர் இராச்சியத்தைச் சேர்ந்தவர். கேரளாவின் தீண்டப்படாத சாதிகள் என புறந்தள்ளப்பட்ட சாதிகளில் ஒன்றான ஈழவர் சாதியைச் சேர்ந்தவர். இவர் ஒரு இந்து. கி.பி. 1888ல் அருவிப்புறம் என்ற இடத்தில் சிவராத்திரி தினத்தன்று சிவன் பிரதிஷ்டை நடத்தினார். கேரளத்தின் சமுதாய மறுமலர்ச்சி வரலாற்றில் இது பார்ப்பனியத்துக்கு விழுந்த பெரும் தாக்குதலாகும். சிவனைத் தீண்டலாமா என்ற விவாதம் எழுந்த போது நான் ஈழவச் சிவனைத்தான் பிரதிஷ்டை செய்தேன் எனத் துணிவுடன் பதில் தந்தார். (நிர்மால்யா அக்டோபர் 2001)

இவர் மதம் மாறவில்லை, இந்துமதத்தை விட்டு ஓடிப்போய்விடவில்லை. தனது மக்களுக்கும் அதையே கூறினார். அவர் பின்வரும் வழிமுறைகளை முன்வைத்து மக்களை புரட்சிகரமாக்கினார்.

1. ஒரே மதம், ஒரே சாதி, ஒரே கடவுள்
2. என்ன மதமாக இருந்தாலும் பிரச்சனையில்லை. மனிதன் நல்லவனாக இருக்க வேண்டியதே முதன்மையானது.
3. அமைப்புரீதியாக ஒன்றுபடுவதன் மூலம் சக்தியை திரட்டிக் கொள்ளுங்கள். கல்வியின் மூலம் சுதந்திரமாக இருங்கள்.
4. திருமணத்தில் சமத்துவத்தையும், சமபந்தி போசனத்தையும், நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள்.

ஒரே மதம், ஒரே கடவுள், ஒரே சாதி என்பதில் இராமலிங்கனாரின் சன்மார்க்க சமரச நெறியின் வாசனை வருகிறது.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

இந்தியாவை சனாதனப்படுத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக எம்மதமாக இருந்தாலும் பிரச்சனையில்லை நல்ல மனிதனாக இருக்க வேண்டியதே பிரச்சனை என்கிறார். மதசார்பின்மையும். மதமேலாதிக்கமின்மையும் ஒளிர்கின்றன.

கல்வியின் மூலம் சுதந்திரமாக இருங்கள் என்று கூறுகிறார். ஏன்? கல்விக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். சாதிய மேட்டுக்குடியினரதும், கிறிஸ்தவ மிசனிரிகளினதும் ஆதிக்கத்துள் இருக்கும் கல்வியை விடுவிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். அப்போதுதான் ஒடுக்கப்பட்ட சாதியினரால் சுதந்திரமடைய முடியும் என்கிறார். சுயராஜ்யத்தை அவர் நம்பவில்லை.

சமபந்தி போசனம் கேரளாவின் தீண்டல், தொடல், சமூக நடைமுறைக்கு எதிரான வேலைத்திட்டமாகும்.

## அயோத்தி தாஸ பண்டிதர் (1845 - 1914)



தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். 1892இல் ஆதிதிராவிட மகாசபை அமைக்கிறார். (1907 - 1914) வரை 'தமிழன்' என்றோர் பத்திரிகை நடத்துகிறார். ஆரம்பத்தில் இந்து சமயத்தில் குறிப்பாக அத்வைதத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவர், பின்னர் பௌத்த சமயத்திற்கு மாறி தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கம் என்றோர் அமைப்பையும் அமைக்கிறார். இவரும் மக்கள் அமைப்புக் கட்டியவர்தான். மக்கள் இயக்கம் நடத்தியவர்தான். ஆனால் அவை இந்தியத் தேசியத்துக்கான மக்களெழுச்சிகளல்ல. அயோத்தி தாஸர் கூறுகிறார்:

இதுவரையில் மதத்துறையில் ஆதிக்கம் வகித்தவர்கள் இனிமேல் அரசியல் துறையில் முந்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள். தியோபிசிக்கல் சபை மண்டபத்தில் காங்கிரஸ் அமைப்பு சம்பந்தமாக நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் ப்ண்டிதரும் பங்கு ஆற்றினார். இது அக்கூட்டம் முடிந்து அவர் கூறிய கருத்தாகும். [19]

1907ஆம் ஆண்டின் காங்கிரஸ் பிளவு இந்திய தேசிய அரசியலுக்கு ஓர் வெற்றியென ஒரு சாரார் கருத, அந்த நிலை கண்டு பிரித்தானியர் அஞ்சி வெலவெலத்து நிற்க, அதற்கு காரணமானவர்களை கொடுஞ்சிறையில் தள்ளி இம்சிக்க, அயோத்தி தாச பண்டிதரோ இந்தப் பிளவைக் கேலி செய்கிறார்.

நேஷனல் காங்கிரஸ் என்னும் பெயர் இக்கூட்டத்தோருக்குப் பொருந்தாதனால் மிதவாதிகள் என்றும், அமிதவாதிகள் என்றும் இரு கட்சிகள் பிரிந்து கூட்டத்தைக் கலைத்து விட்டார்கள். வீணான கூட்டங்களைக் கூட்டி வன்மையான வார்த்தைகளைப் பேசி சுதேசிகளிலும் மிதவாத சுதேசிகள், அமிதவாத சுதேசிகள் எனப் பிரிந்து இரு கட்சியாருக்கும் கலகத்தைப் பெருக்கிக் கவலையில் வாழ்வதிலும் காங்கிரஸ் கூட்டமென்னும் பேச்சற்றுக் கவலையின்றி இருப்பது சுகமாகும். [20]

## தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —

படிப்பகம்

padippakam



அவர் இந்தப் பிளவை மட்டும் கண்டிக்கவில்லை. காங்கிரஸையே ஒட்டு மொத்தமாகக் கண்டிக்கிறார். காங்கிரஸ் மட்டுமல்ல, புதிய கட்சி இயக்கம் கூட பிராமணர் மேலுள்ள பயபக்தியினால் தான் உருவாகிறது என்பதே அவரினது விளக்கமாக இருந்தது. 21.09.1908 'தமிழன்' இதழில் எழுதுகிறார்.

ஒரு மனிதன் தருப்பைப் புல்லைக் கையிலேந்திக் கொண்டு வந்து நான் பிராமணன், நான் பிராமணன் என்பானாயின் அவனை சரிவர விழித்து நோக்காமலும் இவன், எம்மைப்போன்ற மனிதனா என்று பாராமலும், இவன் நமக்கேதும் வித்தைகளைக் கற்பிக்கக் கூடியவனா இன்றேல் ஏதேனும் சுகவழி காட்டக் கூடியவனா என்று உணராமலும் யாதும் விசாரணையுமின்றி அவனை சுவாமி ........................ சுவாமி என்று வணங்கிக் கும்பிடும்படியான நாம், குண்டு மருந்து ஒருபுறமும் பீரங்கி மறுபுறமும் வைத்துக் கொண்டு நீதி நெறிகளாம் செங்கோலைக் கையிலேந்தி சீருஞ்சிறப்புஞ் செய்துவரும் பிரிட்டிஷ் துரைத்தனத்தோரை எதிர்த்து நிற்பது என்பது என்ன காலக்குறையோ, யாது விபரீதமோ யாவர் தூண்டுதலோ விளங்கவில்லை. கட்டுச் சாதமும் ஒருவர் கற்பனா செயலும் நெடு நாளைக்கு இருக்கமாட்டா. சில நாளில் அழிந்துபோகும். அக்கால் துயருறும்படி நேரும். [21]

........ அமிதவாதிகள் என்னும் ஒரு கட்சியும் மிதவாதிகள் என்னும் ஓர் கட்சியும் இத்தேசத்தில் தோன்றி ரூபாய்க்கு நாலுபடி அரிசியையும் பெற முடியாமல் போராட்டத்தில் குண்டடிபட்டுச் சாவும் குடும்பத்தார், குடிக்கக் கூழுக்கும், கட்டத் துணிக்கும் அலைவதிலும் ஒரு பெரும் பலனைத் தேடி விட்டார்கள். அந்தோ! இவ்வகை வீண் வீறாப்பில் மடிந்தவர்கள் ஓர் அரசாங்க யுத்தத்தில் மடிந்திருப்பார்களாயின் தனது பெண்சாதி, பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் ஏனும் கிடைக்கும். [22]

தேசிய நோக்கில் மதிப்பீடு செய்தால் இது மிகவும் மலினமான தாக்குதல். காங்கிரஸார் மீதிருந்த வெறுப்பையே இது காட்டுகிறது. தெருவில் கிடக்கும் ஒரு அழுகிய பிணத்தைக் கண்டு அருவருப்பதுபோல் அருவருத்துப் பேசுகிறார். ஏகாதிபத்திய எதிர்ப்பு குணாம்சம் எதுவுமேயில்லாத வெறும் வீணர்களின் இயக்கம் என்று கூறுகிறார். அல்லது அதன் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குணாம்சத்தை இவர் அங்கீகரிக்கவில்லை. இதைக் கேள்வியுற்றால், புதிய கட்சி எழுச்சியை,

இந்த இயக்கத்திற்குப் பின்னால் தெய்வீக சக்தியொன்றுண்டு. இன்றைய காலகட்டம் உலக வரலாற்றின் ஓர் திருப்பு முனையாகும். இப்பயணத்தை முன் கொண்டு செல்வதற்கு அவசியமான சக்திமிக்கதோர் இயக்கத்தை கொண்டு வருவதற்காக காலக் கடவுள் துரிதமாகச் செயல்பட்டு வருகிறார். இதுதான் ஆசியாவின் பேரெழுச்சிக்கான இயக்கமாகும். இந்தியாவின் பேரெழுச்சி உலக எழுச்சியில் ஒரு பாகம் மட்டுமல்ல அதன் மையமான தேவையும் இந்தியா தான், இந்த பெரும் மாளிகையின் அஸ்திவாரக் கற்களும் பொதுவான ஆசிய அறிவு வளங்களில் பிரதான மரபு வழி அறிவாளிகளும்......, இந்தியா தான். ரிஷிகளின் பூமியில் பிறப்பெடுத்த சுதந்திரமான ஐக்கியப்பட்ட இந்தியா என்ற சிந்தனை இன்று தனது முழுநிலைக்கு உயர்த்துள்ளது. முழு உலகத்திற்கும் தேவையானதோர் மகத்தான நாகரீகம் இந்தியாவின் முதுகில் திரண்டு வருகிறது. [23]



படிப்பகம்

# 53 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

எனப்போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்த அரவிந்தரின் மனோநிலை என்னவாகியிருக்கும். இப்போராட்டத்தில் பெருமளவிற்கு தம்மை அர்ப்பணித்திருந்த பல ஆயிரக்கணக்கான தியாகிகளின் மனோநிலை என்னவாகியிருக்கும். 1918இல் 'மறுமலர்ச்சி' என்னும் தனது கட்டுரையில் பாரதியார், 'பத்து வருடங்களுக்கு முன்' என்று இரு இடங்களில் தந்துள்ளார்.

1. தமிழ் ஜாதியில், இப்பொழுது பத்து வருட காலமாக ஒரு புதிய ஜீவ வேகம் தோன்றியிருக்கிறது. உலர்ந்து போன எலும்புக் கூடுகளில் அசைவுண்டாகியிருக்கிறது. பட்டுப்போன கிளைகள் துளிர்க்கத் தொடங்கியிருக்கின்றன. ஓய்ந்துப் போன மரங்கள் மீண்டும் பழுக்க ஆரம்பித்திருக்கின்றன.

2. பத்து வருடங்களுக்கு முன் எமது நாடெங்கிலும் அரசியல் கிளர்ச்சி கிளர்ந்தெழுந்த போது நமது ஜாதியும் (தமிழன்) அரசியல் முறையில் மாறுதல் ஏற்படுத்தி விட்டால் நமது நோய் தீர்ந்துவிடும் என்று நினைத்து, அக்கிளர்ச்சியில் இறங்கிற்று. [24]

ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து, தனது பாரிஸ்டர் பட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து, இறுதிவரை மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்த வ.வே.சு ஐயர் பற்றிய ஆய்வில் பெ.சு.மணி. கூறுகிறார்.

இந்த பாரதியின் மனோநிலை என்னவாகியிருக்கும்?

வையாபுரிப் பிள்ளையவர்களின் கூற்றுப்படி மறுமலர்ச்சி என்ற சொல்லையே ரினெய்சான்ஸ் Renaissance என்ற பிரெஞ்சுப் பதத்தில் இருந்து உருவாக்கிய வ.வே.சு. ஐயர், இந்த புதிய கட்சி கால கட்டத்தைப் பற்றி மிக ஆழமாக விளக்குகிறார்.

மரங்களில் புதிய மலர்கள் பூப்பதுபோல் நமது ஜாதியிலும் புதிய வேகமும், புகழும் பிறக்கப் போகின்றன என்பதற்கு இந்த இயக்கங்கள் அறிகுறியாய் இருப்பதால், இவற்றின் தொகுதிக்கு நாம் மறுமலர்ச்சி என்ற சொல்லையே பெயரிடுகிறோம். இந்த இயக்கங்கள் என்பதற்கு பாரம்பரியமாக தொடர்ச்சி முற்றிலும் ஆறாதவாறு தோன்றிவரும், ஞானிகள், பக்தர்கள், இவர்களைப் பின்பற்றுவோர்களின் முயற்சிகள் ஆகிய இவையெல்லாம் சேர்ந்து இப்பொழுதுதான் நாம் முதலில் பேசிய ஜீவவேகத்தைத் கிளப்பிவிட்டிருக்கின்றன என்று விளக்கமளிக்கிறார். வ.வே.சு. ஐயர் முதலில் பேசிய ஜீவவேகம் என்று இவர் குறிப்பது 1908 முதல் தோன்றிய அரசியல் எழுச்சியையே ஆகும். மேலும் தொடர்ந்து விளக்குகையில், பத்து வருடங்களுக்கு முன் நாடெங்கிலும் அரசியல் கிளர்ச்சிகள் நடந்தபோது ..... அரசியல் முயற்சியோடு மாத்திரம் நில்லாமல் தனக்குள் பல்வேறுவிதமான இயக்கங்களையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறார். இவைதாம் இவர் குறிப்பிடும் இந்த இயக்கங்களாகும். இந்த இயக்கங்களுள் புதிய இலக்கிய இயக்கமும் ஒன்றாகும். [25.]

இந்த புதிய கட்சியின் காலகட்டம் ஓர் அரசியல் எழுச்சி மட்டுமல்ல. பல வகையிலுமான ஓர் எழுச்சியாகும். தமிழ்நாட்டில் பொருளாதார வழியில் இது வ.உ.சி.யாலும் பாரதியாலும் (கவிதை) வ.வே.சு. ஐயராலும் (சிறுகதை) உரைநடை வடிவில் பாரதி, வ.வே.சு. ஐயர் போன்ற பிறராலும் பிரதிநிதித்துவப்பட்டு நின்றது. அதே நூலின் வேறோர் பகுதிக்கு பெ.சு. மணி மேலும் கூறுகிறார்.

## *தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

padippakam



பாரத தேசத்தின் நவீன வரலாற்றில் கி.பி. 1906-1912 வரையுள்ள காலம் அதன் மைய ஸ்தானத்தை வகித்து விளங்கும். இந்தக் காலத்தில்தான் பாரத தேசம் தனது இழிய அடிமைநிலையை உணர்ந்து அதைத் துடைப்பதற்காகக் கொதித்தெழுந்தது. நமது தேசத்தின் இந்த உத்வேகத்தை எரிமுட்டிய மூலவர்களுள் சார்வர்கர் சகோதரர்கள் தலைமை வகித்து விளங்குகிறார்கள். [26]

பெ. சு.மணி கூறிய இந்த மூலவர்கள் தான் 1920களுக்கு பின்னர் தவறானதாக இருந்தாலும் இயல்பானதான இந்த முன்னைய இந்து மத எழுச்சியை இயல்புக்கு மாறான இந்துத்துவமாக வளர்ப்பதிலும் மூலவர்களாக இருந்துள்ளார்கள். இது அந்த புதிய கட்சி இயக்கத்துக்கிருந்து வலதுபோக்கின் பரிணாமமாகும். இடதுபோக்கின் பரிணாமமும் இருந்தது. அதுதான் பெர்லின் குழுவாகி பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்ற துணை நிற்கிறது. அந்த மூலவர்களைக் குறிப்பிட்ட பெ.சு.மணி இந்த மூலவர்களையும் குறிப்பிட்டிருக்கலாம். அவர் குறிப்பிடாமல் விட்டதற்காக புதிய கட்சியைப் பற்றிய அவரின் அடுத்துவரும் கூற்று பொய்யாகி விடாது.

இந்தியாவின் தேசிய சரித்திரத்தில் 1906ஆம் வருடமானது என்றும் மறக்க முடியாதபடி அவ்வளவு முக்கியமானது. அந்த வருடத்தில் நமது நாட்டில் பொங்கி எழுந்த தேசிய வெள்ளத்தின் பெருக்கும் அளவும் சொல்லும் தரமன்று. [27]

எவரினது அனுமதியுமின்றி தன்னைத்தானே இறக்குமதி ஆக்கிக் கொண்ட பிரித்தானிய முதலாளித்துவம் இந்திய மண்ணில் வேரூன்றிய பின்னர் நடைபெற்ற முதலாவது தேசிய எழுச்சி இதுதான். ஆயிரம் குறைபாடுகளுள்ளவர்களாக இருந்த போதிலும் இதன் தலைவர்கள்தான் இந்திய விடுதலையின் மூலவர்கள், அதன் முதல் சந்ததியினர். இந்துத்துவம், இடதுசாரி கண்ணோட்டம், மதச்சகிப்புதன்மை, பெரியாரிசம், அம்பேத்காரிசம், மதச்சார்பின்மை ஆகிய அனைத்துக்குமான வித்துக்கள் முளைவிடத் தொடங்கியது இக்காலத்திலேயே ஆகும். இவை அனைத்தும் அதன் நேரடி மற்றும் எதிர்மறை வெவ்வேறு வழித் தோன்றல்களேயாகும்.

இவ்விதமானதோர் காலகட்டத்தையும் அதற்கு காரணமாய் இருந்த கட்சியையும் இவ்விதம் எடுத்தெறிந்து விமர்சிப்பதற்கு பண்டிதருக்கு சில காரணங்கள் இருக்கத்தான் செய்தன. இதோ அவரே கூறுகிறார்:

சொற்ப முனிசபல் அதிகாரம் கொடுத்தபின் பறைச்சேரி மீதுள்ள பொறாமை விடாதவர்கள் வசம் சுயாட்சியும் கொடுத்து விட்டால் பறைச்சேரிகளும், பறையர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களும் பெயர் ஊரில் இல்லாமல் பறக்க வேண்டியதேயாகும். ஆதலின் சாதி பேதமற்ற திராவிடர்களே! அதி சீக்கிரம் உங்களது சீர்திருத்தக் கூட்டத்தை வலுவு செய்து கிராமங்கள் தோறும் வியாபாரக் கூடங்களை நிலைநாட்டுங்கள். கருணைதாங்கிய பிரித்தானிய வியாபாரக் கூடங்களை நிலைநாட்டுங்கள். கருணைதாங்கிய பிரித்தானிய துரைத்தனமே இவ்விடம் நீடித்து நிலைக்க வழி தேடுங்கள்! வழி தேடுங்கள்! [28]

சென்னை நகருள் பறைச்சேரியின் ஊடாக மயானம் ஒன்றுக்கான பாதை



படிப்பகம்

padippakam



அமைப்பதற்கான நகர சபை முடிவை எதிர்த்து பிராமணத் தலைவர்கள் (இவர்கள் காங்கிரஸ்காரர்கள்) செயற்பட்டார்கள். அதையொட்டித்தான் இவ்விதம் கூறினார். சாதிபேதமற்ற திராவிடர் என்று கூறுவதை அவதானிக்கவும்). இது ஒரு சிறு விடயமல்ல தலைவிரித்தாடிய சாதி வெறி மனோபாவத்தின் எதிர்வினையாகும்.

பச்சையப்பன் கல்லூரியில் ஒடுக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டமை, ஜி. சுப்பிரமணி ஐயரும் பாரதியாரும் தாமே நேரில் முன்னின்று உருவாக்கி செயற்படுத்திய தேசிய நிதியத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டமை ஆகிய அரசியல் உள்ளடக்கமுள்ள பெரும் சம்பவங்களும், இவற்றிற்கு எதிராக போராடி ஏமாற்றமடைந்த கசப்பான அனுபவங்களும் இவருக்கு உண்டு. அந்த அனுபவங்கள்தான் அவரை அப்படி பேச வைத்துள்ளன போலும்.

இவர் சனாதன இந்திய தேசியத்தை ஏற்றுக் கொள்ளாது விட்டது நியாயமானதுதான். தேசியம் என்பது ஒரு வர்க்கம் தனது மேலாண்மையின் கீழ் ஒரு தேசத்தைக் கொணர்வதற்கும், அம்மேலாண்மையைப் பேணுவதற்கும் அதை மறு உற்பத்தி செய்வதற்குமாக முன்வைக்கும் ஒரு சித்தாந்தமேயன்றி வேறொன்றுமல்ல. இந்திய சாதிய சமூக சூழலில் அது ஒரு சமூகத் தட்டினதும் ஒரு சாதிய அணியினரதும் மேலாண்மையே ஆகும். தரகு முதலாளிகளும், நில உடமையாளர்களும், அதிகாரத்துவவாதிகளும், இணைந்து தலைமை தாங்கும் மேட்டுக் குடியினரே அந்த சமூகத் தட்டாகும். பார்ப்பனிய சைத்திரிய கூட்டே அந்த சாதிய அணியாகும். இவர்களின் தேசியத்தை அயோத்திதாசர் நிராகரித்ததில் எந்தத் தப்பும் இருக்க முடியாது.

இதற்கு மாற்றீடான ஒரு இந்தியத் தேசியத்தை அவர் முன்வைக்கவில்லையே என்பதுதான் கேள்விக்குரியதாய் உள்ளது. இருந்த போதிலும் தமிழ் தேசியத்தின் முன்னோடிக் குரலாக இருந்துள்ளார். தமிழ்த் தேசியத்தை தலித் நெறிமுறைப்படுத்துவதற்கான கருத்தியலை முன்வைத்துள்ளார். இந்த வழியில் நோக்கும் போது புரட்சிகர தமிழ் தேசியத்தின் முன்னோடி அவர்தானா? என்ற கேள்வி எழும்புகிறது. ஏ.பி. வள்ளிநாயகம் கூறுகிறார்.

இன்று "திராவிடம்" எனும் பருண்மையாகக் காட்சியளிக்கும் தமிழக ஆட்சி அயோத்திதாசரின் கருப்பொருளான "தமிழன்" என்னும் உயிர்மூலத்தைக் கொண்டதாகும். இச்சொல்லைச் சமுதாய அளவிலும் அரசியல் அடிப்படையிலும் முதன் முதலாகப் பயன்படுத்தியவர் அயோத்திதாசரே ஆவர். அவரின் காலம் வரை முற்படுத்தப்பட்ட சைவத் தமிழர்களால் தமிழ் மொழி ஆன்மீகமாய் முதன்மைப்படுத்தப்படும் நிலையே இருந்தது. ஆனால் அயோத்திதாசர்தான் தமிழன் இம்மண்ணின் இனத்தவன் என்னும் கருத்தை முதன்முதலாக முன்னிறுத்தினார். முதன்மைப்படுத்தினார். அவ்வகையில்தான் 1881ம் ஆண்டுக் குடிமதிப்புக் கணக்கெடுப்பின் போது தாழ்த்தப்பட்ட தமிழர்களை "ஆதித்தமிழர்" "பூர்வீகத் தமிழர்" எனக் குறிக்கும்படி செய்தார்.

அயோத்திதாசப் பண்டிதர் 1883லேயே தமிழர்களுக்கு மொழி உணர்வை ஊட்டும் பொருட்டு "திராவிடப்பாண்டியன்" என்னும் இதழினை நடத்தினார். இவ்விதழுக்கு மறைத்திரு. டி. ஜான்ரத்தினம் அவர்களை ஆசிரியராக அமர்த்தினார். 1888ம் ஆண்டு ஆதித்தமிழரான - "பூர்வீகத் தமிழர்கள் இந்துக்கள் அல்லர்" என்பதற்கான வரலாற்று



படிப்பகம்

padippakam



உண்மைகளை எழுதி ஓர் அறிக்கையினை வெளியிட்டார். இவ்வறிக்கை பொதுவாக பார்ப்பனரல்லாத் தமிழர்களின் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் அரசியல் சமூக வரலாற்றில் முக்கிய ஆவணமாகும். (உரிமைப் போராளி இரட்டைமலை சீனிவாசனார் பக்கம் 39)

இது புதிய கட்சியினருக்கு எதிரான மற்றோர் நிலைப்பாடாகும். இளம் காளையாக இருந்த சனாதன இந்திய தேசியத்தின் கர்ஜனையை எதிர்கொண்ட தமிழ் தேசியத்தின் தொட்டில் குரலாக அயோத்திதாசார் இருந்தாரா? இதனால்தான் புதிய கட்சியின் அனைத்து வகையிலுமான முகவரான பாரதியார் அயோத்தி தாசரைப் புறக்கணித்தாரா? தமிழ்த் தேசியத்தை ஒளி மங்கச் செய்யும் முயற்சியை உருமறைப்புச் செய்வதற்காகத்தான் பாரதியும், வ.வே.சு. ஐயரும் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு அதிக நாட்டங்காட்டினார்களா?

இவ்வளவற்றிற்கும் திருக்குறளையும், திருவள்ளுவரையும் பிராமணியப்படுத்த முயற்சிகள் நடைபெற்றபோது அதை எதிர்த்து தன்னந்தனியாக நின்று பண்டிதர் போராடியபோது சுதேசமித்திரன் மூலம் பண்டிதருக்கு உதவிபுரிந்தது பாரதி என்னும் பார்ப்பான் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. பாரதியாரின் இரு கிளைப்பாட்டு நிலை புரிந்து கொள்ளப்படவேண்டும்.

அயோத்தி தாசப் பண்டிதர் பௌத்த மதத்தைத் தழுவியராவார். இயற்கை நியதிகளைப் பொறுத்தவரையிலான பகுத்தறிவு சிந்தனைகளைவிட சமூக நியதிகளைப் பொறுத்தவரையிலான தீவிர பகுத்தறிவு கருத்துக்களைப் பரப்பிவந்தார். பின்னால் பகுத்தறிவுவாதியான ஈ.வேரா. பெரியார், பண்டிதரை தனது முன்னோடி என்று வாயாரப் பாராட்டியிருந்தார். இவர்களின் பகுத்தறிவுவாதம் சமூகத்தில் மனிதர்கள் அனுபவிக்கும் வறுமை, அடக்குமுறை, துன்பம் ஆகியவற்றிற்கான காரணங்களை சிந்திக்கும் தூண்டுதலையும், அதற்கான வழிகாட்டலையும் தருவதாக அமைந்திருந்தது. ஜோதிலால் பூலேயும் ஒரு பகுத்தறிவுவாதியே. பிரம்ம சமாஜிகளிடையேயும் பகுத்தறிவு சிந்தனை இருந்தது. பகுத்தறிவு ஒரு சிந்தனைப் பள்ளியாக இந்தியா எங்கும் பரவியிருந்தது. அரவிந்தர் இதற்கு எதிரான நிலையே எடுத்திருந்தார். அரவிந்தர் இதை மிகத் திறமையாகக் கையாண்டார். முதலில் ஐரோப்பிய நாகரிகத்தில் நல்லதென்று சொல்ல எதுவுமேயில்லை என வாதிட்டார். பின்னர் பகுத்தறிவை ஐரோப்பிய நாகரீகத்துடன் இணைத்துக் காட்டி வாதிட்டார். இதோ அவரின் கூற்றுகளில் ஒன்று. ஜூலை 3, 1990 இல் கூறியது.

ஹிந்து மதத்தின் உண்மைகளை, ஆழ்ந்த சிந்தனையாளரின் அனுபவங்களை, பல்லாயிர வருடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தின் ஆன்மாக்களை எதிர்கொள்ளும் போதெல்லாம், பகுத்தறிவாதி மூடநம்பிக்கை என்று கூவுகிறான். வெற்றி பெற்றதாகக் கருதுகிறான். ஐரோப்பிய சரித்திரத்தில் ஒழுங்கு, வளர்ச்சி, முன்னேற்றம், பரிணாமம், தன்னிலை உணருதல் எல்லாம் இருக்கிறது. இந்தியாவின் கடந்த காலமோ பார்க்க சகிக்காத மூடநம்பிக்கையும் அறியாமையும் கொண்டது. மனித வாழ்வெனும் புத்தகத்திலிருந்து



படிப்பகம்

padippakam



# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

கிழித்தெறிய வேண்டிய பக்கங்கள் இவை. நமது எண்ணமும் ஆர்வமும் நிரம்பிய ஆயிரமாயிரம் ஆண்டுகள் மிக அற்ப முக்கியத்துவம் வாய்ந்த காலம். ஐரோப்பிய கல்விக்குப் பிறகுதான் நம் முன்னேற்றத்தின் வரலாறு தொடங்குகிறது. இவையெல்லாம் பகுத்தறிவுவாதியைப் பொறுத்தமட்டில் [29]

அரவிந்தர் இந்தியாவின் கடந்த காலம் என்று சொல்வது ஆரிய கடந்த காலத்தையேயாகும். புத்தர், வள்ளுவர், சித்தர், பக்தி இயக்கத்தினர், ராமானுஜர் இவர்கலெல்லாம் இந்தியாவின் கடந்தகாலங்களல்ல போலும்.

தீண்டப்படாதோர் அணியும் புதியகட்சி அணியும் இரு வெவ்வேறு முகாம்களாக பிரிந்து நின்றன. புதிய கட்சியினர் பகுத்தறிவு எதிர்ப்பாளர்கள். ஆரியமீட்பாளர்கள், சனாதனிய பாதுகாவலர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள், தீண்டப்படாதோர் ; அணியோ தமக்குள் அமைப்புரீதியாக ஒன்றுபட்டில்லாவிட்டாலும் பகுத்தறிவு வாதிகள், ஆரிய, பிராமணிய சனாதனிய எதிர்ப்பாளர்கள், சாதிய எதிர்ப்பாளர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் அல்லாதவர்கள்.

*சூரத் காங்கிரசிற்கான பெருமுயற்சிகள் நடந்து வந்தன. மிதவாதிகள் தீவிர கட்சியினரை சர்க்காருக்கு காட்டி பயமுறுத்தி அற்ப சலுகைகள் பெற்று திருப்தி அடைந்து வந்தார்கள். தீவிரவாதிகளுக்கு இது பிடிக்கவில்லை.*

*பொதுஜனங்களின் ஒற்றுமையின் வலிமைதான் நம் நோக்கத்தை ஈடேற்றும் என பொது ஜனங்களிடையே உழைக்கலானார்கள். சென்னை தீவிரக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சிதம்பரம் பிள்ளைக்கு இது கைகண்ட கலை. தமிழ் வியாபாரிகளை ஒன்று கூட்டி நடத்தும் தொழிலை ராஜாங்கத்தினர் பெரும்வலி கொண்டு தடுக்க அஞ்சுவதை கண்கூடாக கண்டிருக்கிறார். இனி சூரத் காங்கிரஸில் ஜனவலிமையை மேலோங்கச் செய்வதெனத் தீர்மானித்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தார். (மண்டலம் சீநிவாசாச்சாரியார் (ஆ. இரா. வெங்கடாசலபதி, "வ.உ.சியும் பாரதியும் "பக்கம் 144.)*



படிப்பகம்

padippakam



## அய்யன் காளி (1863 - 1948)



கேரளாவின் புலையர் சாதியினரின் தலைவர். தீண்டாமைக்கெதிரான உறுதிமிக்க போராளி. இவரின் நடவடிக்கைக் காலமும் புதிய கட்சியின் நடவடிக்கைக் காலமும் ஒன்றேயாகும். 1907 பிப்ரவரியில் அய்யன் காளியைத் தலைவனாகக் கொண்டு அவரின் தீவிர முயற்சியின் பயனாக சாது ஜன பரிபாலன சங்கம் என்றோர் அமைப்பு வெங்ஙானூரில் அமைக்கப்பட்டது. தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட சாதியினரின் சமுதாய, பொருளாதார, கல்வித் துறைகளின் மேம்பாடே இதன் குறிக்கோளாக இருந்தது. இது புலையர்களுக்கு மட்டும் உரித்தானதாக இருக்கவில்லை. பறையர், குறவர் போன்ற ஒடுக்கப்படாத சாதியினரும் இச்சங்கத்தில் இணைந்தனர். இச் சங்கம் ஒடுக்கப்பட்ட சாதியினரின் உரிமைக்காக போராடிய அதே நேரத்தில் அம்மக்களின் தூய்மை ஒழுக்கம் ஆகிய பண்பாட்டு கோலங்களுக்கும் முன்னுரிமை கொடுத்தது. 24 பிரிவுகளைக் கொண்டதோர் விதிமுறைப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. சமுதாய, பொருளாதார, கல்வித்துறை முன்னேற்றத்துக்குத் தேவையான திட்டங்களும் இவ்விதிமுறையில் உள்ளடங்கியிருந்தது. விவசாயத் தொழிலாளர்கள் நலன் இதன் குறிக்கோளாக இருந்தது. இது புலையர்களுக்கு மட்டும் உரித்தானதாக இருக்கவில்லை. பறையர், குறவர் போன்ற ஒடுக்கப்படாத சாதியினரும் இச்சங்கத்தில் இணைந்தனர். விவசாயத் தொழிலாளர்கள் வாரத்தின் ஏழு நாட்களும் வேலை செய்யும் முறை ஒழிக்கப்பட்டு ஞாயிற்றுக் கிழமை விடுமுறைநாளாக்கப்பட வேண்டும் என முதலாவது கூட்டமே தீர்மானித்தது. சமுதாய பிரச்சனைகளை விவாதிப்பதற்காக ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டம் கூட்டப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டது. உறுப்பினர்களிடம் மாதச் சந்தா வாங்கும் முறையும் கைக்கொள்ளப்பட்டது.

இதே ஆண்டு தான் (1907) புதிய கட்சி தனியான அமைப்பாக செயல்படத் தொடங்கியது என்பதை நினைவு படுத்திக் கொள்ள விரும்புகிறோம். புதிய கட்சியின் தலைவர்களில் பலர் ஆயுதக் கிளர்ச்சிக்கான இரகசியத் தயாரிப்புகளில் ஈடுபட்டு வந்தார்கள். இதற்காக மன்னர்களை தமது நண்பர்களாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள். இதனால் அவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயற்பாடுகள் மன்னர் ஆட்சிப் பிரதேசங்களைத் தவிர்த்தனவாகவே இருந்தன. திருவிதாங்கூர் மன்னன் புதிய கட்சியினரின் நட்பு பட்டியலுள் வரவில்லைதான்; இருந்த போதிலும் திருவிதாங்கூர் புதிய கட்சியின் செயற்படுகளமாக இருக்கவில்லை. இவ் ஆட்சிப் பிரதேசத்துள் செயற்பட்ட ஜனநாயக சமூக சீர்திருத்தவாதிகளான நாராயண குருசாமி, அய்யன் காளி ஆகியோரை இவர்கள் கண்டு கொள்ளவேயில்லை. அவர்களும் இவர்களின் தேசியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒருவேளை ஒடுக்கப்பட்ட சாதியினர் இந்துமதத்தை விட்டு விலகிப் போய் விடுவார்கள், அல்லது போகக் கூடியவர்கள் என்ற அச்சம் இதற்கு காரணமாக



படிப்பகம்

padippakam



இருக்கலாம். ஆனால் அய்யன் காளி அவ்விதமானவரல்ல அவர் இந்து வட்டத்துள் இருந்து தன்னை விலக்கிக் கொள்ளவில்லை.

தனது இளமைக் காலத்தில் இவர் தனி நபராக முன்னின்று தீண்டாமையை எதிர்த்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். எந்த நிறுவனத்தையும் சார்ந்தவரல்ல. இவர் எழுதப் படிக்கக் கூடத் தெரியாதவர். எந்தப் பாடசாலையிலும் சேராதவர். கிறிஸ்துவ மிஷனரிக் கல்வி அறிமுகம் இல்லாதவர். இவர் தனது 25வது வயதில் நாராயண குருசாமியின் சீடராக இருந்தார். குருவால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் பக்தராகவும் இருந்தார். பின்னர் 1905இல் சதானந்த சுவாமிகள் என்னும் ஆரியசமாஜியின் சீடரானார். சதானந்த சுவாமிகள், அய்யன்காளியின் தலைமையில் பிரம்ம நிஷ்ட மடத்தின் கிளையொன்றை வெங்நானூரில் அமைத்தார். இது 'சித்சபை' என்ற பெயரில் செயற்பட்டது. சுவாமியின் வழிகாட்டுதலில் அய்யன்காளியின் தலைமையில் விஜயதசமி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் நோக்கம் சிறி மூலம் திருநாள் மகாராஜா தீண்டாமைக்குட்பட்ட மக்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்துவதாகும். இது நிறைவேறியது. திருவிதாங்கூர் வரலாற்றிலேயே இதுதான் முதற் தடவையாகும். நாயர்களின் தடையை மீறி இச்சந்திப்பு நடந்தது.

பிரம்ம நிஷ்ட மடத்தால் ஆன்மீகத்தைத் தாண்டி வெளியே வர முடியவில்லை என்பதைக் காரணங்காட்டி சதானந்தரின் அனுமதியுடன் அய்யன்காளி அவ் அமைப்பை விட்டு வெளியேறுகிறார். இந்து மதத்தை விட்டல்ல என்பதை இங்கு கவனிக்க வேண்டும். அய்யன்காளிக்கும் சதானந்த சுவாமிக்கும் இடையே இருந்த நெருக்கமான உறவுக்கான காரணம் கிறிஸ்துவ மத மாற்றத்துக்கெதிரான இயக்க ஒற்றுமையேயாகும். தலித் போராளிக்கும் ஆரிய சமாஜிக்கும் இடையே ஓர் உறவு நிலை ஏற்பட்டது இதுதான் முதற்தடவையல்ல, ஜோதிலால் பூலே ஏற்கனவே முன்மாதிரியாய் இருந்துள்ளார். ஆனால் ஆரிய சமாஜிகளின் இத் தீவிர அணியினரால் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் வரமுடியாது, அவர்களின் சனாதன ஆன்மீகம் அதைஅங்கீகரிக்காது.

இவ்விதம் வெளியேறிய அய்யன் காளி நாராயண குருசாமியின் நாராயண தர்ம பரிபாலன சபையுடன் இணைந்து செயற்பட்டார். இதற்கு அடுத்த கட்டமாகவே அய்யன் காளி தனது புதிய அமைப்புக்கு வடிவம் தருகிறார்.

அய்யன்காளி இந்து சமயத்தின் சனாதன கருத்துநிலைக்கும், அதன் அனுஷ்டானங்களுக்கும், ஒழுகலாறுகளுக்கும் எதிரானவரே தவிர ஒட்டு மொத்தமான இந்து எதிரியல்ல. அதே வேளை இவர் சனாதன இந்துக்களைப் போல் கிறிஸ்துவ மதத்திற்கு எதிரானவரும் அல்ல. மதமாற்றம் செய்வதற்கு கிறிஸ்தவ மத நிறுவனங்களுக்கு உள்ள உரிமையை மறுக்கவில்லை, ஆனால் சனாதனத்திற்கு அஞ்சி மதம்மாறத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டார். இந்து மதத்துள் இருந்த வண்ணமே சனாதனத்தை எதிர்த்துப் போராடி மனிதநேயத்தை



படிப்பகம்

padippakam



நிலைநாட்ட முடியும் என்பதே அவரின் நம்பிக்கையாக இருந்தது. இதனாலேயே இவரின் சாது ஜன பரிபாலன சங்கம் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அமைப்பாக இருக்கவில்லை. "சாதுஜன பரிபாலன சபையைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அய்யன் காளி அவர்கள் திருவிதாங்கோடு சிறிமூலம் மக்கள் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்" என்ற உத்தரவு 1911, டிசம்பர் 5ல் திருவிதாங்கோடு அரசாங்க கெஜட்டில் வெளியாது. 1911ல் புலையர் சமூகப் பிரதிநிதியாக புலையர் அல்லாத பி.கே. கோவிந்தன் பிள்ளையவர்கள் சிறிமூலம் மக்கள் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் அய்யன் காளியுடன் நல்லிணக்கத்துடனேயே செயற்பட்டார். பின்னர் 1912ல் புலையர் சமூகத்தில் ஒருவரான அய்யன்காளியே நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனம் நடக்கும்போது திவானாக இருந்தது திரு.வி. ராஜகோபாலாச்சாரி யாராகும். இவரே சிறி மூலம் மக்கள் சபையின் தலைவராகவும் இருந்தார். இந்திய சிற்றரசுகளிலேயே சட்டசபையை உருவாக்கிய முதற் சிற்றரசு (1888) திருவிதாங்கூரேயாகும். இதுவே பின்னாளில் (1904) சிறிமூலம் மக்கள் சபையானது. இம்மக்கள் சபையின் தலைவரான திவான் ராஜா கோபாலாச்சாரியார் சென்னைஅரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவராகும். இவர் ஒடுக்கப்பட்ட சாதியினரின் விடயத்தில் மிகவும் மென்போக்காகவே நடந்து கொண்டார். சமூக சீர்திருத்தத்தில் நாட்டங் கொண்ட மிதவாத பிராமணர் அணியைச் (கோகலே, டாங்கே) சேர்ந்தவராக இருக்கலாம், ஆனால், புதிய கட்சியின் உத்தியோக பூர்வ குரலாக வெளிவந்த இந்தியா பத்திரிக்கையோ தனது 7.7.1906 இதழில் திருவிதாங்கூர் திவான் வேலை என்ற தலைப்பில் இவரின் நியமனத்தைக் கண்டித்து தலையங்கம் எழுதியது. சிற்றரசரின் சுயாதீனம் மீறப்பட்டு விட்டது என்று காரணங்காட்டி இவரின் நியமனம் கண்டிக்கப்பட்டிருந்தது. (பாரதி தரிசனம் சி.எஸ். சுப்ரமணியம் 1975).

சிறிமூலம் மக்கள் சபையில் உறுப்புரிமை கிடைத்த போதிலும் அய்யன்காளி தனது சாது ஜன பரிபாலன சபையை கலைத்து விடவில்லை. அதில் மிகுந்த கவனம் செலுத்திச் செயற்பட்டு வந்தார். பாராளுமன்றத்திற்குள்ளும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் என்ற போராட்ட மார்க்கத்தைக் கடைப்பிடித்து வந்தார்.

1933ல் உடல் நலக்குறைவு காரணமாக சிறிமூலம் மக்கள் சபையில் இருந்து விலகிக் கொள்கிறார். 1912 முதல் 1933 வரை தொடர்ச்சியாக 22 வருடம் உறுப்பினராக இருந்துள்ளார். தீண்டப்படாதவர்களின் சமூக வளர்ச்சிக்காக குறிப்பாக புலையர் சமூகத்தின் வளர்ச்சிக்காக அரும் பெரும் பங்காற்றினார்.

எழுதப் படிக்கத் தெரியாத அய்யன் காளி எதையும் எழுதிவைத்துவிட்டுப் போகவில்லை. ஆனால் தன் சமூகத்தினரின் கல்வி நிலையை முன்னேற்ற அரும்பெரும் பாடுபட்டார். அதில் பெரும் சாதனைகளையும் ஈட்டியிருந்தார். இதன் மூலம் எழுதக் கூடிய ஒரு பட்டாளத்தையே உருவாக்கிச் சென்றார்.

## புதிய கட்சி

படிப்பகம்

# 61 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

மிதவாத செய்தித் தாளின் தகவலின்படி பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய பட்டியல் இதோ:

| | 1914 | 1915 | 1916 | 1917 |
|---|---|---|---|---|
| நாயர் | 70752 | 81034 | 94336 | 99490 |
| ஈழவர் | 23895 | 30790 | 39224 | 45429 |
| கிறிஸ்தவர்கள் | 84161 | 96648 | 113020 | 119563 |
| இஸ்லாமியர் | 4863 | 6095 | 8569 | 9353 |
| புலையர் | 2017 | 4259 | 8494 | 10913 |
| பறையர் | 1097 | 1816 | 2652 | 4855 |

கிறிஸ்துவர்கள் என்று சொல்லப்படும் அணிக்குள்ளும் புலையர்களும் அடங்குகிறார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். சனாதன இந்து தேசியத்தில் இருந்து தீண்டப்படாத மக்கள் தம்மை தற்காத்துக் கொள்வதில் கிறிஸ்தவ நிறுவனங்கள் வழங்கிய பங்கு மிகவும் குறிப்பிடக்கூடிய தொன்றாகும்.

அய்யன் காளி சட்டமன்றத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அய்யன்காளிப் படை என்றோர் மக்கள் குடிப்படையும், (People Militia) வைத்திருந்தார். பாடசாலை அனுமதி மறுக்கப்படும் இடங்களிலும் கூட இப்படை தனது கைவரிசையைக் காண்பித்தது. அடியாத மாடு படியாதல்லவா?

எவ்விதமும் சிறிமூலம் மக்கள் சபையின் உறுப்புரிமை என்பது சமூக சீர்திருத்தத்திற்கு நிறையவே உதவியுள்ளது. 1909இல் இவ்விதமான ஓர் உறுப்புரிமையை முழு இந்தியாவுக்கும் அமுல் படுத்த வேண்டும் என்ற கோரிக்கை பிராமணர் அல்லாதோர் சங்கத்தால் மார்லி குழுவிடம் முன்வைக்கப்பட்டது. பிரித்தானியர்களால் நியமிக்கப்பட்ட இக்குழு இஸ்லாமியருக்கும் தனிபிரதிநித்துவம் என்பதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு தனிபிரதிநிதித்துவம் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. புதிய கட்சியினின் தீவிரத்துக்கு உடனடி காரணமாக இருந்தது இந்த இரு கோரிக்கைகளுந்தான். இக்கோரிக்கையையும், இக்கோரிக்கையை வலியுறுத்திப் போராடிய டாக்டர் நாயரையும் இட்டு சிறிமான் சுப்ரமணிய பாரதியார் 22.9.1906 "இந்தியா" இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் இவ்விதம் எழுதினார்.

ஸ்ரீ சங்கரன் நாயர் மேற்படி ஆலோசனையை வெளியிடும்போது மிகுந்த நல்லெண்ணங்களுடன்தான் வெளியிட்டார் என்பதில் ஆட்சேபமில்லை. ஆனால் அதிலிருந்து ஏற்படக்கூடிய சில முக்கியமான கெடுதிகளை அவர் ஆராய்ந்து பார்க்காதிருந்துவிட்டமைபற்றி விசனமடைகிறோம். மேலும், இந்தியாவில்

***தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —***

padippakam



ஆயிரம்விதமான மதங்களும், ஆயிரம்விதமான அனுஷ்டானங்களும் இருக்கின்றன. இவற்றை சீர்திருத்த வேண்டியது அவசியமானால் அந்தந்தக் கூட்டத்தார் தமக்குத் தாமே செய்து கொள்ள வேண்டுமேயல்லாமல் இதற்கு இந்தியா முழுவதும் ஒன்று சேர்ந்து பிரதிநிதிகள் நியமித்து வேலை செய்ய வேண்டுமென்பது சிறிதேனும் அவசியமில்லை. ராஜாங்க சம்பந்தமான விஷயங்கள் முதலியவற்றிலே இந்தியா முழுதும் சேர்ந்து ஒரே மனதாக உழைக்கவேண்டும் மற்ற சில்லறை விஷயங்களை அந்தந்தக் கூட்டத்தாரே கவனித்துக் கொண்டால்போதும். நம்மவர்களை அனாவசியமான மதச்சண்டைகளிலும், ஜாதிச் சண்டைகளிலும் இழுத்து விட்டுவிட்டு உண்மையான தீமைகளை மறக்கடித்துவிட வேண்டுமென்றும், கெட்ட நோக்கங் கொண்ட ஆங்கிலேயப் பத்திரிக்கைகளில் சில சங்கரன் நாயர் கொண்டு வந்திருக்கும் ஆலோசனையிலே மிகுந்த அன்பு பாராட்டுகின்றன. நமது சீர்திருத்தங்களிலே தான் இந்த புண்ணியாத்மாக்களுக்கு எத்தனை சிரத்தையிருக்கிறது. (சி.எஸ். சுப்ரமணியம், பாரதி தரிசனம் பக்கம் 123)

இதுதான் சனாதன இந்து தேசியத்தின் உண்மை உருவம். தீண்டப்படாதவர்களை மேலும் தீண்டத்தகாதோர் ஆக்கும் புதிய கட்சியினரை தீண்டப்படாதோர் ஏற்றுக் கொள்வார்களா? அவர்கள் எதற்காக இக் கட்சியைத் தீண்ட வேண்டும்? (நிரமல்யாவின் 'கேரளத்தின் முதற்போராளி அய்யன் காளி' நூலை ஆதாரமாகக் கொண்டது)

## இரட்டைமலை சீனிவாசன்



இவருக்கு அடுத்த தலைவர்தான் இரட்டைமலை சீனிவாசன். இவர் அயோத்தி தாசப் பண்டிதரின் உறவினர். ஆங்கிலக் கல்வி கற்றவர். உயர்ந்த பதவி வகித்தவர். தென் ஆப்பிரிக்காவில் காந்திக்கு தமிழ் கற்பித்துக் கொடுத்தவர். ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர். அயோத்தி தாசப் பண்டிதருக்கும் இவருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டு தனியாகப் பிரிந்து தனித்ததோர் அமைப்பை உருவாக்கியவர். ஒடுக்கப்பட்ட தீண்டாமைக்குள்ளானோர் தம்மை பறையன் எனத் துணிவுடன் இனங்காட்டிக் கொள்ள வேண்டும் என்பது இவரின் கருத்து. இதற்காகவே பறையன் என்ற இதழ் நடத்தினார். மதமாற்றத்தை எதிர்த்தார். இந்த இரண்டுமே அயோத்தி தாசப் பண்டிதருடனான முரண்பாடுகளாகும். அயோத்திதாசர் திராவிடர், மற்றும் தமிழர் என்றே தன்னையும் தன் மக்களையும் அடையாளம் காட்டிக் கொண்டவர். திராவிடர்கள் பௌத்தர்கள் என்பதே இவரினது வாதமாக இருந்தது. பிராமணரல்லாதோர் தனியான அரசியலமைப்பாக வேண்டும் என்ற கருத்தை அரசியல் அரங்கில் முதன் முதலில் முன்வைத்தது இரட்டைமலை சீனிவாசனே என்று கூறலாம். இவரும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடனான உறவைப் பொறுத்தவரையில் மிதவாதி தான்.

ஆனாலும் பிராமண மிதவாதிகளின் அமைப்பில் இவர் சேர்ந்து கொள்ள விரும்பவில்லை. பிராமணரல்லாதோர் சேர்ந்திருப்பதையும் விரும்பவில்லை. இதோ அவரே கூறுகிறார்.

### புதிய கட்சி

padippakam

## 63 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

பறையன் என்ற தனது வார இதழின் 22.9.1894 பதிப்பில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தார்.

ஐ.சி.எஸ். தேர்வுகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே நேரத்தில் நடத்தும் யோசனையை எதிர்த்து 3,412 பறையர்கள் கையெழுத்திட்ட மனு ஒன்று. தளபதி செகனி வழியாக நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மனுவைக் கருணை மிக்க ஆங்கில நாடாளுமன்றம் அன்புடன் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, ஐ.சி.எஸ். தேர்வினை இந்தியாவில் நடத்தினால் அதனால் பிராமணர் மட்டுமே தேர்வு பெற்று உயர் பதவிகளைக் பிடிக்க நேரிடும், என்ற முடிவுக்கு வந்துள்ளது...

.. நம் நாட்டவர்கள் காங்கிரசு உறுப்பினர்கள் என்ற பெயரில் பிராமணர்களின் சூழ்ச்சிக்கெல்லாம் உடந்தையாகக் குரல் எழுப்பிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? இந்து அரசர்கள் ஆண்டபொழுது, அவர்களின் அரசில் பிராமணர்கள் உயர்ந்த பதவிகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சியிலும் இந்த உயர்ந்த நிலையைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் பிராமணர்கள் இத்தகைய தந்திரங்களைக் கையாண்டு வருகிறார்கள். இதனை மற்ற சமூகத்தினர் ஏன் உணர்ந்து கொள்ளாமல் நடந்து கொள்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை...

மற்ற சமூகத்தினர் உயர் பதவிகளைப் பெறுவதற்கான தகுதிகளை அடைவதற்கு முன்னதாக ஆங்கில ஆட்சியின் கீழ் அந்த உயர் பதவிகளை எல்லாம் தங்கள் ஏகபோகமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் ஐ.சி.எஸ். தேர்வுகளை ஒரே நேரத்தில் இரு நாடுகளிலும் நடத்த வேண்டுமெனப் பிராமணர்கள் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். [30]

மிதவாத காங்கிரஸின் தேசிய நலன் என்பதெல்லாம் அதிக உத்தியோகங்களுக்கான முயற்சியேயாகும். இதனால் அதே முயற்சியை தனித்து மேற்கொள்ளச் சொல்லி பிராமணரல்லாதோர்க்கும் ஆலோசனை வழங்குகிறார். அதற்காக அவர்களுடன் சேர்ந்துழைத்தார். அதே நேரம் தனது மக்களுக்காக பறையர் மகாஜன சபை என்றோர் அமைப்பையும் அமைத்தார். அதனது இதழே பறையன் ஆகும். இவரும் சில மிதவாதிகள் போல் பிரித்தானியரிடம் கௌரவப்பட்டம் பெற்றவர்தான். இப்பட்டத்தை வழங்குவதில் பிரித்தானியர் சாதிபேதம் பார்க்கவில்லை.

சீனிவாசனாரின் இந்தத் தேசிய மிதவாத நிலைப்பாட்டை ஏ.பி. வள்ளிநாயகம் இவ்விதம் கூறி அமைதிப்படுத்த முற்படுகிறார்.

1882 இல் நீலமலை உதகமண்டலத்தில் பணிக்கு வந்த இரட்டைமலை சீனிவாசனாருக்கு அரசியல் கருத்தாக்கமும் காரிய வீரியமும் ஏற்பட்ட காலகட்டமும் இங்கே தான் தொடங்கியது. நமது போராட்டம் யாரை எதிர்த்து? என்ற கேள்வி இரட்டை மலை சீனிவாசனாருக்கு எழுந்தது. பார்ப்பனிய ஆதிக்க சமூக அமைப்பிலிருந்து, சொந்த சமூகத்திற்காகப் போராடும் போது, பார்ப்பனர்களிடம், அவர்களையடுத்த ஆதிக்கச் சாதிகளிடம் அங்கீகாரம் இல்லாத போது, நடைமுறை சமூக அமைப்பை எதிர்க்கும் போது, மற்றவரைத்தான் கூட்டாளியாக்க முடியும். இந்த சூழலில் தங்களை மனிதப்பிறவிகளாக மதிக்காத நிலைக்கு, எதிராக எழ வேண்டிய

padippakam



மனித உரிமைப் போராட்டந் தான் இரட்டைமலை சீனிவாசனாருக்கு முதன்மையாகப்பட்டது. இந்த அடிப்படையில் அவர் ஆங்கிலேயர்களை நேச சக்தியாகவே உணர்ந்தார். ஏற்கனவே அவர்களின் முன்னோர்கள் கிழக்கிந்திய கம்பெனியிடம் தொடர்பு கொண்டிருந்தனர்.

நல்லதுதான், ஆங்கிலேயர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதை நியாயப்படுத்த பார்ப்பனிய மிதவாதிகள் இஸ்லாமிய ஆக்கிரமிப்பையே காரணங்காட்டினார்கள். புதிய கட்சியின் வரலாற்றுக் கால கட்டத்தில் அதாவது இந்தியாவின் முதலாவது 'தேசிய எழுச்சியின்' போது பார்ப்பனியத்தலைவர்களின் நடவடிக்கைகளை மட்டுமல்ல, அனைத்து வரலாற்று முகவர்களின் நடவடிக்கைகளையும் மீழ் ஆய்வுக்கு உள்ளாக்க வேண்டும். இவர்களில் அனேகர் இருகிளைப்பாட்டுத் தன்மை பெற்றவர்களாகவே இருந்துள்ளனர். இதில் சரியான பக்கங்கள் சுவிகரித்துக் கொள்ளப்படவும், அப்பங்களிப்புகளுக்காக அத் தலைவர்களை முன்னோடிகளாக ஏற்றுக் கொள்ளவும் வேண்டும், விமர்சனத்துடன், துதிபாடலுடனல்ல.

## பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கார்.



இவர் காலத்தால் பிந்தியவர். நாம் 1907இல் இருக்கிறோம். ஆனாலும் அம்பேத்கார் 1920இல் கூறியதைக் கேட்போம். இது 1907இன் எமது கட்டுரைத் தலைப்புடன் தொடர்புபட்டது தான்.

1920லேயே மூக் நாயக் (பேச்சற்றவர்களின் தலைவன்) என்ற மாதமிருமுறை பத்திரிக்கையை வெளியிட்டதன் மூலம் ஒரு பத்திரிக்கை ஆசிரியராகவும், பத்திரிக்கையாளராகவும், வெளிப்பட்ட போர்க்குணம் கொண்ட அம்பேத்கார் முதல் இதழிலேயே இந்து சமூகத்தை, ஏணியோ, நுழைவாயிலோ இல்லாத பல அடுக்குகளைக் கொண்ட ஒரு கோபுரத்துடன் ஒப்பிட்டுள்ளார். ஒருவர் எந்த அடுக்கில் பிறந்தாரோ அதே அடுக்கில்தான் இறக்க வேண்டும் என்ற நிலையே உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இதே அம்பேத்கார் இன்னொரு கட்டுரையில், இந்தியா ஒரு சுதந்திர நாடாக இருந்தால் மட்டும் போதாது, எல்லா வர்க்கத்தினருக்கும், சம அந்தஸ்த்தை உறுதிப்படுத்துவதே இந்திய சுதந்திரத்துக்கு பொருள் தரும் என்றும், வாழ்க்கைத் தர வரிசையில் உயர ஒவ்வொரு மனிதனுக்கும் வாய்ப்பு தந்து, அவனுடைய முன்னேற்றத்துக்கான சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கித் தருவது, சுதந்திரத்தின் கடமை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை உரிமைகளை உறுதி செய்யாத சுயராஜ்யம் அந்த மக்களுடைய சுயராஜ்யமாக இருக்காது என்று அவர் சொல்லியுள்ளார். உண்மையில் அவர்களுக்கு அது ஒரு புது அடிமைத்தனமாகத்தான் இருக்கும். பிரிட்டிஷ் அரசின் நியாயமற்ற அதிகாரத்தை பிராமணர்கள் எதிர்ப்பது நியாயமென்றால் அதிகார மாற்றம் ஏற்படும் பட்சத்தில் பிராமணர்களின் ஆட்சியை ஒடுக்கப்பட்ட இனங்கள்



படிப்பகம்

எதிர்ப்பது அதைவிட நூறு மடங்கு நியாயமானது என்ற கூற்றை எதிர்க்கும் இழிவான மனிதர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று அவர் வலியுறுத்தி கூறியுள்ளார். 1927 ஜூலை 29ஆம் தேதியிட்ட பகிஸிகிறிர் பாரத் என்ற பத்திரிக்கையின் தலையங்கத்தில், தீண்டப்படாதவர்களின் மத்தியில் திலகர் பிறந்திருந்தால், சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்ற கோஷத்தை எழுப்பியிருக்க மாட்டார், மாறாக, தீண்டாமை ஒழிப்பே என்னுடைய பிறப்புரிமை என்று முழங்கியிருப்பார் என எழுதினார். [31]

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை உரிமைகளை உறுதி செய்யாத சுயராஜ்யம் அந்த மக்களுடைய சுயராஜ்யமாக இருக்காது என்று சொல்வதன் மூலம் அரவிந்தரினதும், புதிய கட்சியினரதும், தேசிய விடுதலை வேலைத் திட்டத்தின் கீழ் மக்கள் இயக்கங்கள் சாத்தியப்படாது போனமைக்கான காரணத்தை விளக்குகிறார். பண்டிதர், பூலே ஆகியோர் எடுத்த நிலைப்பாடு சரியானதுதான் என்று கூறியுள்ளார்.

## நீதிக்கட்சி

*பார்ப்பனியத்துக்குப் பலியாகாதே,*
*மத்தியிலே அவன் தரகு வேண்டாம்*
*கல்வியில் அவன் போதனை வேண்டாம்*
*சமுதாயத்தில் அவன் உயர்வுக்கு உழைக்காதே*
*உன் நாட்டை உனதாக்கு*[32]

தியாகராயர்

1916 நவம்பர் 20ம் நாளன்று சர்.பி. தியாகராயர் தலைமையில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரில் நீதிக்கட்சி தோன்றியது. அதன் கொள்கை, குறிக்கோள்கள் வெளியிடப்பட்டன. அவற்றில் ஒன்று;

"பிரிட்டிஷ் வல்லரசின் பாதுகாப்பின் கீழ் இந்தியா முழுத் தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு தனி நாடாகக் திகழப் பாடுபடுதல், இந்த நிலையை அமைதியான முறையிலும், நேர்மையான வழியிலும், சட்ட திட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்ட வகையிலும் எவ்வளவு விரைவாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக ஏற்படுத்துதல். காங்கிரஸ் மிதவாதிகள் குரல் அப்படியே எதிரொலிக்கிறது. பிராமண ஆதிக்கத்தை எதிர்க்கிறோம் என்ற பெயரால், பிரித்தானிய ஆதிக்கத்திற்கு துணை போகும் இக்குரல் நியாயப்படுத்தப்படுகின்றது.

1919 ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாவது பிராமணரல்லாதோர் மாநாடு நடைபெற்றது. அதற்கு தலைமை தாங்கிய பனகல்ராஜா, "பிராமணரே இந்திய நேஷன் என்றும் பிராமணர் ஷேமமே இந்தியர் ஷேமமென்றும்" சாதனை புரிகிறார்கள் என்று ஆரம்பிக்கிறார். சென்னை பிராமணர் அல்லாதோர் அமைப்பின் 1916ம் ஆண்டு டிசம்பர் மாத அறிக்கையின் சில பகுதிகள்:

............ சென்னை மக்கள் தொகை 4 கோடி 75 இலட்சம், இதில் 75 இலட்சம் பிராமணர்கள். இவர்கள் அரசியலிலும் பொதுவாழ்விலும் முன்னணியில் இருந்து வந்தாலும் அத்துடன்

padippakam



திருப்தி அடையாமல் சுயராஜ்யம் வேண்டும் என்று தீவிரக் கிளர்ச்சி செய்யக் கிளம்பியிருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் எமது அதிருப்தியைத் தெரிவிக்காவிட்டால் இந்தியர்கள் எல்லாம் சுயராஜ்யம் பெறத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என ஏற்பட்டு விடும். ... பிரிட்டிஷ் அதிகாரிகள் செல்வாக்கையும் அதிகாரங்களையும் குறைக்கும் எந்தத் திட்டத்தையும் நம்மால் ஆதரிக்க முடியாது. தற்கால நிலையில் எல்லா வகுப்பாருக்கும் சமபந்தி வழங்கவும், தேச ஒற்றுமையை உண்டுபண்ணவும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத்தான் சக்தியுண்டு, .. தேச நிர்வாகம் நடத்த மக்கள் தகுதி பெறுமுன் ... ஜாதியையும் ஜாதி ஆட்சியையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்திய ஷேமத்தை முன்னிட்டு, எல்லோருக்கும் சமநீதியும் சம சந்தர்ப்பங்களும் வழங்கும் பிரிட்டிஷ் ஆட்சியே மேலும் வேண்டும். பொதுவாகப் பார்த்தால் பிரிட்டிஷ் ஆட்சியே ... நீதியானது. ஜாதிக் கொடுமைகளும் வகுப்புணர்ச்சியும் ஒழியும் போது சுயராஜ்யத்துக்கு நாடு தன்படியே ஆயத்தமாகும். [34]

முன்சொன்ன 1916ம் ஆண்டு அறிக்கையும், இத்தலைமையுரையும் எதைச் சுட்டி நிற்கின்றன? பிராமணர் தலைமையில் முன்வைக்கப்பட்ட இந்திய தேசியத்தை தாம் ஏற்க மாட்டோம் என்றுதானே தோன்றுகிறது. அப்படியல்ல, ஏனெனில் பிராமணரல்லாத தலைவர்கள், சென்னை மாகாணத்தில் மட்டுமல்ல பிற இடங்களில் உள்ளவர்களும் கூட, தேசிய மிதவாதிகளுடன் நன்கு இணைந்தே இருந்தனர். சென்னை மாகாண பிராமணரல்லாதோர் தலைவர் டாக்டர் நாயர் இலண்டனில் மிதவாத தலைவர் தாதாபாய் நவ்ரோஜிக்கு தேர்தல் வேலை செய்தவரே. நாயரின் அரசியல் நிலைப்பாடு எவ்விதம் இருந்தது என்பதை நோக்குவோம்.

## டாக்டர் டி.எம். நாயர்



சசெக்ஸ் பல்கலைக் கழக வைத்திய பட்டதாரியாகும். தமிழ்நாட்டிலும், லண்டனிலும் வைத்தியராகத் தொழில் புரிந்தவர். இந்திய தேசிய காங்கிரசின் லண்டன் மாநகர கிளைச் செயலாளராகச் செயல்பட்டவர். காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தாதாபாய் நௌரஜியே இக்கிளையின் தலைவராவார். இருவரும் இணைந்தே செயற்பட்டார்கள். 1897இல் காங்கிரஸில் சேர்ந்தார். 1915 வரை காங்கிரஸிற்காக உழைத்தார். 1905 பகிஷ்கரிப்பியக்கத்தில் ஈடுபட்டவர். 1905இல் சென்னையில் இது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் இவரே பிரதான பேச்சாளராவார். 1907இல் காங்கிரஸ் பிளவிற்கு முன்னர் அதே ஆண்டில் வட ஆற்காட்டில் நடைபெற்ற காங்கிரஸ் மாநில மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். 24.7.1915 இல் ஈரோட்டில் நடைபெற்ற கோவை காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். 1904 - 1916 வரை சென்னை மாநகர கவுன்சிலராக இருந்தார். 1914 ஐரோப்பிய யுத்தத்தின் போது பிரித்தானியா சென்று யுத்தசேவை செய்து 'கெய்சர் ஐ ஹண்ட்' என்னும் தங்கப் பதக்கம் பெற்றார். 1907 சூரத் பிளவை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. வர்க்கநிலையிலும் அரசியலிலும் மட்டுமல்ல,



படிப்பகம்

padippakam

# 67 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

சாதிநிலையிலும் நாயர் பிராமணியர்களுக்கு சற்றே தான் குறைந்தவர். நாயர் என்பதே சாதிப்பெயர் தான். நாயர் சாதிபற்றிய சில குறிப்புகள்.

11ம் மற்றும் 12ம் நூற்றாண்டு அளவில் திருவாங்கூர் சமுதாயம் பிரபுத்துவமுறை சமுதாயமாக மாறிவிட்டது. பெரும்பாலும் நிலச்சுவான்தார்களான நாயர்கள், இந்த அமைப்பில் அதிகார வர்க்கமாக அமைந்தனர். அவர்கள் செல்வந்த விவசாயிகளாகவும், வர்த்தகர்களாகவும், கைவினைஞர்களாகவும் இருந்தனர். அவர்கள் படை வீரர்களாகவும், காவலர்களாகவும் பணியாற்றினர். போர் முறையிலும் ஆட்சியிலும் பயிற்சி பெற்ற அவர்கள் ஆளும் வகுப்பினராக அரசு அலுவலகங்களில் முக்கியப் பதவிகளை வகித்து வந்தனர் அவசியம் நேரும் பொழுது அரசர்களுக்கு படைகளை கொடுத்து உதவினர். இதனால் அரசர்கள் அவர்களுக்கு அஞ்சி வாழ்ந்தனர். பிராமணர்களுடனான உறவு அவர்களுக்கு அதிகாரத்தையும், செல்வாக்கையும் கொடுத்தது. தெற்கில் அவர்களே அடிமைகளின் முக்கிய சொந்தக்காரர்களாக இருந்தனர். தமது அடிமைகளை விற்கவும் கொல்லவும் உரிமை பெற்றிருந்த இந்த நிலச்சுவான்தாரர்களின் முன் தாழ்ந்த சாதியினர் அச்சத்தினால் நடுங்கி, ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் பாதி வளைந்து, திறந்த மார்புகளுடன் கையினால் வாயை மூடி, அடிமைத்தனத்தின் கீழ் நிலையைப் பிரதிபலிப்பதைப் போல் நின்றிருந்தனர். இதுதான் திருவாங்கூரில் மனிதன் மனிதனுக்குக் கொடுத்த மதிப்பு [35]

டாக்டர் நாயரின் நாயர் சாதிப் பிரிவினரின் சாதிய சமூக அந்தஸ்தைப் பற்றிக் கூறியது டாக்டர் நாயரினதோ அல்லது அவர் போன்றோரினதோ பிராமணிய எதிர்ப்புத் தன்மையை கணக்கில் எடுக்கக் கூடாது என்பதற்காகவல்ல. கேரளத்தில் மட்டுமே உள்ள நாயர்கள்தான் கேரள சூத்திரர்களாகும். ஆனால் அவர்கள் தமிழ்நாட்டு சூத்திரர்களான வெள்ளாளரைப் போல் அவர்ணர்களல்ல. பிராமணர்கள், சைத்திரியர்கள், வைசீயர்களே ஆகிய மூவரும் ஸவர்ணர்கள் என்றும் சூத்திரர்கள் அவர்ணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். கேரளாவில் வைசியர்கள் இல்லாததன் காரணத்தாலோ என்னவோ சூத்திரரான நாயர்கள் ஸவர்ணர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இந்த மூவருமே கேரளத்தின் பிற சாதியினரை அடக்குபவர்களாக இருந்தார்கள். பிராமணர்களுக்கும் சைத்திரியர்களுக்கும் இடையேயான முரண்பாடோ, பிராமணர்களுக்கும் நாயர்களுக்கும் இடையேயான முரண்பாடோ, அல்லது தாம்தான் உயர்சாதி என்று கூறிக் கொள்ளும் சூத்திரர்களான சைவ வெள்ளாளர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையேயான முரண்பாடோ சாதிய நிராகரணத் தன்மை பெற்றதோ அல்லது தீண்டாமை ஒழிப்புத் தன்மை பெற்றதோவல்ல. அவை சாதியத்தின் உயர் அடுக்கில் தம்மையும் இணைத்துக் கொள்வதற்கான போராட்டங்களேயாகும். மகாபாரத காலத்தில் இருந்து இந்த முரண்பாடுகள் செயற்பட்டுத்தான் வருகின்றன. ஆனால் சாதியம் தகர்ந்த பாடில்லை. தீண்டாமை ஒழிந்தபாடில்லை. இந்த முரண்பாடுகள் இந்திய சமூக அமைப்பின் முன்னோக்கிய நகர்வுக்கு உந்து சக்திகள்தான் சந்தேகம் இல்லை. ஆனால் ஒரு நிபந்தனை, இந்த முரண்பாடுகளின் விளைவுகளை தீண்டப்படாதவர்கள் தீண்டாமைக்கு எதிரான தமது போராட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும்போதே இது சாத்தியப்படும்.

நீதிக்கட்சியினரின் ஆரம்பகால வரலாறும், அதன் ஸ்தாபகர்களின்



படிப்பகம்

padippakam



நடவடிக்கைகளும் சாதிய சமத்துவத் தன்மை பெற்றிருந்ததையும் விட விதேசியத் தன்மை பெற்றிருந்ததே அதிகமாகும். இதற்கான காரணம் இத் தலைவர்கள் தம்மை சாதி நீக்கம் செய்து கொள்ளவில்லை. இந்தியாவின் சாதிய சமூக சூழலில் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் முற்போக்கு ஜனநாயக வாதியாக இருக்க வேண்டுமானால் தன்னை சாதி நீக்கம் செய்து கொள்ள வேண்டும். டாக்டர் நாயரோ அல்லது பிற நீதிக்கட்சி தலைமை நிறுவனர்களோ இவ்விதம் நடந்து கொள்ளவில்லை.

ஆனால் நாயர் சாதியைச் சேர்ந்தவராகக் கருதப்படும் சதானந்த சுவாமிகளோ 1905இல் கேரளாவில் புலையர், ஈழவர் ஆகியோருடன் இணைந்து நாயர்களின் சாதிய அடக்கு முறைக்கு எதிராக களம் இறங்கிப் போராடினார். இவர் ஒரு ஆரியசாமஜி என்பது கவனிக்கப்பட வேண்டும். ஆன்மீகத்துடன் ஒட்டி நின்று புலையர்கள், பறையர்கள், குறவர்கள் ஆகியோரை அவர்கள் மீதான தீண்டல், தொடில் வகை ஒடுக்குமுறைக் கெதிராகப் போராட அணி திரட்டினார். (புதிய கட்சியின் நொண்டித் தேசியம் என்ற தலைப்பிலான நூல்வரிசை இரண்டு இவர் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளது.)

## பிட்டி தியாகராஜர்

இன்னோர் தலைவரான பிட்டி தியாகராஜர் காங்கிரசுடன் அது மிதவாதிகளின் தலைமையில் இருக்கும் வரை நெருங்கி ஒத்துழைத்தவரேயாவார்.

மரபு வழி பணக்காரரும், தொழில்துறை முதலாளியுமான வெள்ளுடைவேந்தர் தியாகராஜர் என அழைக்கப்பட்ட பிட்டி தியாகராஜர் தேவாங்கர்கள் என்னும் குலத்தைச் சேர்ந்தவர். இக்குலம் நெசவுத் தொழிலை தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டதாகும். இவர்கள் மராட்டி, கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசுவோர்களாவர். பெரும்பான்மையோர் கன்னடமும், தெலுங்கும் பேசுவார்கள். இந்தத் தெலுங்கு குலத்தில் பிட்டிவாரு என்பது ஓர் குலப்பிரிவாகும். இக்குலப்பிரிவில் உள்ள நிலமும், செல்வமும் பெற்றிருந்த ஒரு செல்வக் குடியில் தியாகராயர் தோன்றினார். இதனாலேயே பிட்டி தியாகராயர் என அழைக்கப்பட்டார். அவரும் தன்னை அப்பெயராலேயே அழைத்துக் கொண்டார். இவர் சென்னை பல்கலைக் கழகத்தின் கணிதப் பட்டதாரியாவார். தமது குலத் தொழிலாகிய நெசவுத் தொழிலைச் செய்து வந்தார். வீட்டிலேயே நெசவாலை இருந்தது. அத்துடன் தோல் பதனிடும் தொழிலையும், தோல் ஏற்றுமதியையும் நடத்தினார். இவர் ஒரு தொழில் துறை முதலாளி. சென்னை மாநகராட்சியில் மாநகராட்சி மன்ற உறுப்பினராக நாற்பதாண்டுகள் பணிபுரிந்தவர். 1919ம் ஆண்டில் அம்மன்றத் தலைவரானார். நான்காண்டுகள் அப்பதவி வகித்தார். 1910 - 1912 வரை சென்னை மாநகராட்சி பிரதிநிதியாக சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பல பொது நிறுவனங்களிலும் சமூக நல அமைப்புகளிலும் பங்கேற்றவர்.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

1916இல் தென்னிந்திய நலன்புரிச் சங்கத்தைத் தோற்றுவித்தார்.

பிரித்தானிய அரசு இவரின் சேவையைப் பாராட்டி 1909இல் இராவ் பகதூர் பட்டமும், 1919இல் திவான் பகதூர் பட்டமும், 1920இல் சர் பட்டமும் வழங்கிக் கௌரவித்தது. ஆனால் நவ இந்துத்துவவாதிகளோ (அன்னிபெசண்ட் தொண்டர்கள்) இந்து வைதீகராக இருந்த தியாகராஜா செட்டியாரை, மயிலாப்பூர் கோவில் கும்பாபிஷேக விழாவுக்கு இவர் ரூ. 10,000 நன்கொடை கொடுத்திருந்துங்கூட, விழாக்கூட்டத்தில் மேடைக்கு கீழே உட்கார வைத்தனர். அன்று அவ்விதம் செய்தவர்கள். இன்று இந்திய தேசிய வரலாற்று மேடைக்கு அடியில் அமுக்கி வைத்துவிட்டார்கள்.

காங்கிரசின் முன்னோடியான சென்னை மாகாண சபையை நிறுவியவர்களில் இவரும் ஒருவர். இது 1884ம் ஆண்டு நிறுவப்பட்டது. இதை நிறுவியோர்களில் பிராமணர் அல்லாதோரே அதிகம். ஜி. சுப்பிரமணிய ஐயரும், எம். வீரராகவாச்சாரியாருமே பிராமணர்கள். 1912 வரை தியாகராயர் இச்சபை உறுப்பினராக இருந்து செயலாற்றியுள்ளார். காங்கிரஸ் முழுத் தேசத்துக்கானதாக இருக்க இதுவோ சென்னைக்கானதாக இருந்தது. புதிய கட்சி பிளவின் போதும் இவர் இதில் உறுப்பினராக இருந்துள்ளார் என்பது கவனிக்கப்படவேண்டும். காங்கிரஸ் தொடங்கப் பெற்ற காலத்தில் இருந்து (1885 - 1917) ஏறக்குறைய முப்பத்திரண்டாண்டுகள் காங்கிரஸ் உறுப்பினராக இருந்தவர். மிதவாதத்தைப் பின்பற்றுவதில், பிராமணர் பிராமணரல்லாதோர் என்ற வேறுபாடு இருக்கவில்லை. பிராமணர் அல்லாதோர் கட்சியின் தலைவர்கள் காங்கிரஸிற்கு எதிரானவர்கள் என்றும் அவர்கள் தேசிய போராட்டத்தில் பங்கு பற்றாதவர்கள் என்றும் கூறுவது தவறாகும். அவர்களும் மிதவாதிகளே. அவர்களும் (வி) தேசியர்களே.

இவ்விதமாக, புதிய கட்சியினரின் தோற்றத்திற்கு முன்னர் இந்திய தேசிய இயக்கம் பிரிந்தும் இணைந்தும் இருந்தது. ஆனால் அரசியல் பகைமையானதாகவும் இரு வெவ்வேறு அரசியல் முகாம்களாகவும் இருக்கவில்லை. ஒரே தேசிய அரசியல்முகாமிற்குள் முரண்பாடுகள் நிலவின. ஆனால், புதிய கட்சி இயக்கத்தின் தோற்றத்துடன் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற தீவிர சனாதன இந்து தேசிய தேசியவாதத்தின் செயற்பாட்டின் பின்தான் இவை இரு பகை அரசியல் முகாம்களாயின. அரவிந்தரினதும், புதிய கட்சியினரனதுமான மக்கள் அமைப்புகளும், மக்கள் இயக்கங்களும், இந்திய மக்களில் சிறுபான்மையினரின் (எண்ணிக்கையில்) இயக்கமாக மாறியது, தனிமைப்படுத்தப்பட்டது. தனிமைப்பட்டும் போனது.

அதே நேரம் இந்து சனாதனிகள் எல்லோரும் புதிய கட்சியினரை ஆதரித்தார்கள் என்றோ அல்லது அதனுடன் ஒத்து நின்றார்கள் என்றோ அர்த்தமாகாது. 1907ல் இந்து வகுப்பினர் அனைவரின் நலன்களையும் ஆர்வத்துடனும் விழிப்புடனும் பாதுகாக்கும் பணியை



படிப்பகம்

padippakam



பஞ்சாப் இந்து மகாசபை மேற்கொண்டது. ஆங்கிலேய காலனியாதிக்க அரசாங்கத்திற்கு ஆதரவாக 'இந்து' அவ்வப்போது குரல் எழுப்பியது. ஜூலை 6, 1909ல் இந்துக்களின் பிரதிநிதிகள், மின்டோ பிரபுவுக்கு ஒரு தாழ்மையான விண்ணப்பத்தை அனுப்பினார்கள். அதில் அவர்கள் இந்துக்களின் விசுவாச பாரம்பரியத்தைப் பற்றிப் பேசவே தேவையில்லை. ஆனால் இந்தியாவின் பல பகுதிகளில் அராஜக திட்டங்கள் காணப் பெறுவதால், இந்த திட்டங்களை பஞ்சாபிலிலுள்ள இந்து வகுப்பினர் மிகுந்த அருவருப்புடன் நோக்கி வருகிறார்கள் என்று கனம் பொருந்திய தங்களுக்கு உறுதிகூற வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அராஜகமும் சட்டமின்மையும் எந்த ரூபத்தில் வந்தாலும் அவற்றுக்கு முடிவு கட்ட இந்துக்கள் என்றும் தயாராக இருப்பார்கள் எனக் கூறினார்கள்.

காலனியாதிக்கர்களாலும் அவர்களுடைய கூட்டாளிகளாலும் அழிக்க முடியாத இந்திய மக்களின் காலனியாதிக்க எதிர்ப்பு போராட்டத்தைத்தான் இந்த விண்ணப்பம் அராஜகம் என்றும் சட்டமின்மை என்றும் வர்ணித்தது. 1909ல் அகில இந்திய இந்து ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன் தலைவர்கள், ஒரு இந்து நம்பிக்கை கொண்டிருந்தால் மட்டும் போதாது, தன்னுடைய வேலையிலும், தன்னுடைய வாழ்க்கையிலும், தன்னுடைய நடத்தையிலும், நான் முதலில் இந்து என்பதையும், பிறகுதான் இந்தியன் என்பதையும் ஒரு கட்டாய அம்சமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். [36]

இந்தியன் என்பதெல்லாம் இரண்டாம் பட்சமானது. இந்துவே முதன்மையானது. மக்கள் அமைப்பு எப்படிச் சாத்தியமாகும்?.

*தலித் அரசியலின் இரண்டு (சாதிய, வர்க்க) பரிமாணங்களையும் கணக்கில் கொண்டு பார்க்கும்போது தலித் அரசியலின் எதிரி இலக்குகளாக ஏகாதிபத்தியம், முதலாளியம், அரை நிலப்பிரபுத்துவம், பார்ப்பனியம், சாதிய ஆதிக்க மனோபாவம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றோம். இந்த விதத்தில் தலித் அரசியல், புதிய சனநாயக அரசியலின் ஒரு கூறாகவும் உள்ளது. தலித்துகளின் ஒருங்கிணைவுக்கு அடுத்த நிலையில் தலித்துகள் மற்றும் தலித் அல்லாத மக்களில், சனநாயக மற்றும் புரட்சிகர சக்திகள் ஆகியோரின் வலுவான அச்சு இதற்குத் தேவைப்படுகின்றது.*

*(முனைவர் கோ. கேசவன், "தலித் அரசியல்" பக்கம் 87)*



படிப்பகம்

# 71 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

## ஒதுங்கி நில் ! ஹியுமின் ஆணை. (* பின்னிணைப்பாக உள்ளது.)

> மேல்சாதி ஆதிக்கத்தில் இவர்கள் (பார்ப்பனிய ... பனியாக்கள்) இருப்பது தான் தனது நலனுக்கு உகந்தது என ஆங்கில அரசும் தெரிந்து கொண்டது. எனவே இந்நிலையை அவர்கள் ஊக்குவித்தனர். .... ஆங்கிலேயர் விரும்பியிருந்தால் பார்ப்பனியத்துக்கு எதிரானதோர் சமூக அமைப்பை இங்கே எளிதில் உருவாக்கியிருக்கலாம். ஆனாலும் பார்ப்பன பத்ரவோக்குகளும் ஆங்கிலேயர்களும் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளவே விரும்பினார்கள். அறிந்தோ அறியாமலோ ஆங்கிலேயர்கள் பார்ப்பனிய தகுதி, திறமைக் கோட்பாட்டிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து, விடுதலை இந்தியாவில் பார்ப்பனர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு வித்திட்டார்கள். [37]

முனைவர் காஞ்சா அய்லய்யா

குருதியின் மேன்மையும், நிறபேதமும் (வர்ணவேறுபாடு) ஐரோப்பியரின் மேன்மையான கோட்பாடுகளாகும். ஆசியர்களும் நீக்ரோக்களும் அடிமைகள் என்பதை நியாயப்படுத்தியது இக்கோட்பாடுகள்தான். இவர்களின் இக்குணாம்சங்கள் இந்தியாவின் ஆட்சியமைப்பில் தம்மைக் குறைவின்றி வெளிப்படுத்தி நின்றன. சமூக சீர்திருத்தத்திற்காக ஒருபுறத்தில் பிரித்தானிய நிர்வாகம் பாராட்டுதல்களும் பட்டங்களும் வழங்கினாலும் மறுபுறத்தில் இந்திய சாதியத்தை நவீனப்படுத்துவதிலும் ஈடுபட்டு வந்தது.

பிரித்தானியர்கள் இந்திய சாதி அமைப்பை நன்றாகவே புரிந்து வைத்திருந்தார்கள் சமூக சீர்திருத்தம் தொடர்பாக அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் அவர்களின் விவேகமான நடவடிக்கையே தவிர அறியாமையல்ல.

1899 - 1906 வரை ஆளுநராக இருந்த அம்பில்ஸ் பிரபு 'மோனிங் போஸ்ட்' இதழில் கூறியதை இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.

1. சாதியமும் இந்து சமயமும் பிரிக்க முடியாதவை, உண்மையிலேயே சாதிய சிந்தனைதான் இந்து சமயத்தின் உடலும் உயிருமாகும்.

2. எந்த ஒரு இந்தியனும், சாதிய சிந்தனையின் செல்வாக்கில் இருந்து தப்பிக்க முடியாதது.

3. சாதிய உணர்வுகளின் இருத்தலானது, சட்டத்தின் முன்னால் சகலரும் சமமானவர்கள் என்ற ஜனநாயக சிந்தனையைப் புறந்தள்ளியே வைக்கின்றது.

பார்ப்பனர் தங்களைப் பற்றி வைத்திருந்த உயர் மனப்பான்மை நீக்க முடியாதது. மிக அழுத்தமானது. இவர்கள் ஏழையோ, பணம் படைத்தவரோ, வாய்ப்புள்ளவரோ, வாய்ப்பற்றவரோ, இதைப்பற்றி கவலையின்றி எல்லோரும் பின்பற்றிய கொள்கை ஒன்றே தான் அக்கொள்கையின்படி உலகில் படைக்கப்பட்ட உயிர்களிலேயே தாங்கள் மட்டுமே புனிதமானவர், ஒழுக்கமானவர் என்றும் மற்ற எவ்வுயிரும் அவர்களுக்கு கீழானவர்களே என்றும் தங்களுடைய பழக்க வழக்கங்களுக்கும், நம்பிக்கைக்கும் மேலானது உலகில் எதுவுமே இல்லை என்றும் எண்ணி நடந்தனர். [38]

1885இல் காங்கிரஸ் அமைப்பாளரான ஹியூம் சீர்திருத்த நாட்டமுள்ள பம்பாய்

padippakam



பிரமுகர் பி.எம். மலபாரிக்கு எழுதிய கடித வாசகம்.

தாங்கள் கட்டுக் கோப்பில்லாத ஓர் அறப் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறீர்கள். புனித பூமியைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக நம்பிக்கையுள்ளவர்களைக் கொண்ட சக்திவாய்ந்த ஒரு குழுவை ஒழிப்பதாகவே இது அமையும். தற்காலிக வெற்றி கிடைத்தாலும், அது சக்தி விரயமே. நிலைபேறான பயனேற்படாது. மலையும் அது வழங்கும் நீரோடையும் இன்னமும் எதிரிகள் வசமேயுள்ளன. [39]

இத்தனைக்கும் இந்த மலபாரியின் அதிக கவனம் குழந்தை மணம், விதவை மறுமணம் ஆகியவையாகவே இருந்தது.

வெள்ளையரான இந்த ஹியும்தான் காங்கிரசைத் தோற்றுவித்தவர் என்பதுவும், முதல் 15 வருடத்திற்கும் இவர்தான் காங்கிரஸ் செயலாளராக இருந்தார் என்பதுவும் அனைவரும் அறிந்ததே. இந்த ஹியூம் 1893ஆம் ஆண்டு சென்னை வந்தார். அப்போது அவர் சென்னை இந்து ஆசார சீர்திருத்த சங்கத்தின் அமைப்பாளர் ஜீ. சுப்பிரமணிய ஐயரைச் சந்தித்து உரையாடினார். அப்போது, அரசியல் சீர்திருத்தவாதிகள் சமூக சீர்திருத்தத்தில் போதிய பரிவு காட்டுவதில்லை என்பதை ஐயர் சுட்டிக் காட்டினார்.

ஹியும் : அரசியல் சீர்திருத்தத்திற்கு சற்று முன்னிடம் அளித்து சமூக சீர்திருத்தம் வழிவிட வேண்டும் என்பது எனது கருத்தாகும். சான்றாக, இங்கிலாந்தில் வாக்குரிமை சீர்திருத்தம் பெற்றதன் பயனாக சமூக முன்னேற்றத்தில் வியக்கத்தக்க மாறுதல் நடந்தது. [40]

இதுவே ஹியுமிற்கு ஆலோசனைகள் வழங்கிவரும் கவர்னர் ஜெனரல் டப்ரினின் கருத்தாகவும் இருந்தது. தாதா நபோஜியின் தலைமை உரையில் காங்கிரஸ் சபையும் சமூக சீர்திருத்தமும் என்ற பகுதியும் இருந்தது. அதில் இந்த ஜன சபை ஆசாரத் திருத்தங்களைப் பற்றிய விஷயங்களையும் கவனிக்க வேண்டுமென்றும், அவ்விதம் செய்யாதிருத்தல் பழியென்றும் தூற்றுகிறார்கள். ஆசாரத் திருத்தம் அவசியம் என்பதை நான் மிகவும் நன்கறிவேன். ஆனாலும் கனவான்களே ஒவ்வொரு விவாதத்திற்கும் தகுந்த காலம், தகுந்த இடம், தகுந்த சந்தர்ப்பம், தகுந்த மனிதர் இவையெல்லாம் தனித் தனியாகவுண்டு. நாம் ராஜ்யக் கூட்டத்தார். நமது ராஜ்ய ஆசைகளை ஆள்வோரிடம் தெரிவிக்கும் பொருட்டு நாம் கூடினோம். ஆசார திருத்தங்களை விவாதம் செய்ய நாம் கூடவில்லை. [41]

பெரும் சமூக சீர்திருத்தவாதி எனப் புகழப்பட்ட பிரம்ம சமாஜ தலைவர் ராம் மோகன்ராயையும் அவரின் சாமஜத்தையும் ஆதரித்த பிரித்தானியர், கிறிஸ்துவ மதபீடங்களின் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்புக் கொடுக்காவிட்டாலும், உடனுழைப்பு வழங்காவிட்டாலும், ஓரளவு ஒத்துழைப்புக் கொடுத்த பிரித்தானியர், மன்னராட்சிப் பிரதேசங்களில் சமூக சீர்திருத்தங்களுக்கு ஓரளவு ஆதரவு தெரிவித்துவந்த பிரித்தானியர் காங்கிரஸையிட்டு மட்டும் வேறோர் நிலைப்பாட்டைக் கையாண்டது ஏன்? காங்கிரஸ் ஒரு அமைப்பென்ற முறையில் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுத்து வந்தது ஏன்?

பல காரணங்கள் இங்கு செயல்பட்டன. முதலாவது 1857 சிப்பாய் கிளர்ச்சிக்குப்



படிப்பகம்

padippakam



# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

பின்னர் பிரித்தானியர் தமது முன்னைய நடைமுறையை மாற்றிக் கொண்டார்கள். இந்தியப் பழமையுடன் ஒரு சிநேகபூர்வமான உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இரண்டாவது, பிரித்தானிய ஏகாதிபத்தியமும் குருதிவழி இன மேன்நிலைக்கோட்பாட்டு அரசியல்வாதிகள் தான். இந்தக் கருத்தியல் தான் பிரித்தானிய சாம்ராஜ்யத்தை நியாயப்படுத்த துணைபுரிந்தது. வெள்ளையரல்லாத பிற நிறத்தவர் அனைவருமே தாழ்ந்த இனத்தவர் என்பதே இவர்களின் கோட்பாடாகும். இந்திய பெரும் நிலப்பரப்பையும், தமது சாம்ராஜ்யத்தில் 50 விழுக்காட்டிற்கும், அதிகமான இவ் இந்திய மக்களையும் கட்டுப்படுத்துவதற்கும், அடக்கியாள்வதற்கும், தமது மிக நம்பகரமான கருத்தியலாக இந்திய குருதிஇன மேன்நிலைக் கோட்பாடான வர்ணாசிரம கோட்பாட்டை இனங்கண்டார்கள். இதனால் இந்திய சாதிய அமைப்பையும், அந்த சாதியமைப்பின் பாதுகாவலர்களான பார்ப்பானிய சத்திரிய கூட்டையும் பிரித்தானியர் வரவேற்றனர். அதனுடன் இணங்கிப் போக விரும்பினர். இந்திய அரசியலதிகாரம் இந்த சாதியத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்பதை விரும்பினர். ஆனால், இது சாதாரண ஆனாலல்ல, மிகப் பெரிய ஆனால், இந்திய பார்ப்பனிய சத்திரிய கூட்டு தமக்குக் கீழ்ப்பட்டு, தமது மேலாண்மையை ஏற்றுக் கொண்டு தம்முடன் இணைந்து கீழ்ப்படிந்து செயற்பட வேண்டும் என விரும்பினர். கோகலே அணி, அதாவது காங்கிரஸ் அணி, பிரித்தானியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பார்ப்பானிய, சத்திரியக் கூட்டாக இருக்க, அரவிந்தரின் புதிய கட்சியணியோ இம் மேலாண்மைக்கு எதிராக கிளர்ச்சி செய்த பார்ப்பானிய சத்திரிய கூட்டாக இருந்தது. இதனால் முன்னையதை அணைத்து பின்னயைதை அடக்கினர்.

இந்தியாவை ஆளுவதற்கான தமது கருவியாகப் பயன்படுத்தும் நோக்குடன் தம்மால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்படும் காங்கிரஸ் அணி மதநீக்கம் செய்யப்படுவதையோ, சாதிநீக்கம் செய்யப்படுவதையோ பிரித்தானியர் எக்காரணத்தைக் கொண்டும் விரும்பவில்லை. முதலாளித்துவ புரட்சியின் போது குறிப்பாக பிரான்சில் முதலாளித்துவ அரசியல் அதிகாரமும், அரசாங்கமும் மதநீக்கம் செய்யப்பட்டன. பின்னாளில் இது முதலாளித்துவ சுரண்டலுக்கும் ஆட்சி அதிகாரத்துக்கும் எவ்வளவு தூரத்திற்கு பாதிப்பானது என்பதை முதலாளித்துவவாதிகள் பின்னர்தான் உணர்ந்து கொண்டார்கள். இதனால் பிரித்தானியர் தமது காலனியில் நாடுகளில் மதவாத அரசுகளை நிறுவுவதையே தனது இலக்காக கொண்டிருந்தனர். இன்றுள்ள மதவாத அரசுகள் சகலதும் இக்காலனியல்வாதிகளால் உருவாக்கப்பட்டவைகளேயாகும். இந்தியாவிலும் மதவாத அரசே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. நாட்டில் மதமோதல்களும் இருக்க வேண்டும், அதேவேளை மதவாத அரசும் இருக்க வேண்டும். இதுதான் அவர்களின் அவாவாகும். தமது சொந்தநாட்டில் ஐரிஷ் மக்களை அடக்குவதற்கு துணையாக நிற்பது மதவாதங்கள்தான். சகல ஐரோப்பிய முதலாளித்துவ அரசுகளும் குருதியின மேலாண்மைக் குணாம்சங் கொண்டதாக இருக்க, பிரித்தானிய அரசோ அதனுடன் சேர்த்து மதவாத மேலாண்மைக் குணம் கொண்டதாகவும் உள்ளது. அது தனது சாயலிலேயே இந்திய அரசையும் வடிவமைத்து வந்தது.

உலகின் வேறு எங்கும் காணப்படாத ஓர் இந்திய மகிமை (ஆரிய மொழியில்) என்னவென்றால், இந்து மதமும் குருதியின மேலாண்மைக் கோட்பாடும் (சாதியமும்) இரண்டறக்கலந்திருப்பதாகும். இதுதான் இந்தியத்திற்கும் ஆரியத்திற்கும் பெருமை



படிப்பகம்

padippakam



சேர்க்கும் மகத்தான இந்திய நாகரீகமாகும். பல இந்துக் கோபுரங்களைக் கொண்ட இந்த இந்திய நாகரீகம் இந்திய சமுதாயத்தையே ஒரு கோபுரமாக வடிவமைத்துள்ளது. சுமார் இரண்டாயிரம் வருடங்களாக அந்தக்கோபுரத்தின் உச்சியாகத் திகழ்வது பார்ப்பானிய சத்திரிய கூட்டேயாகும். ஆகவே இந்து மதவாத அரசு உருவாக்கத்தின் தவிர்க்க முடியாத விளைவுதான் பார்பானிய சத்திரிய அரசின் வளர்ச்சியாகும். இந்நிலையில் காங்கிரஸ் சமூக சீர்திருத்தத்தில் ஈடுபட முடியுமா?

மூன்றாவது காரணம் ; சமூக சீர்திருத்தம் என்றால் யாருக்காக அதாவது சமூகத்தின் எந்தப் பிரிவினருக்காக அல்லது எதற்காக? இதற்கென கடைப்பிடிக்கப்படும் மார்க்கங்கள் என்ன? என்பது தொடர்பான விவகாரங்களாகும். அவை பெரும்பான்மையான உழைக்கும் வர்க்கத்துக்காகவா? அந்த வர்க்கத்தின் நலனுக்கானதா அல்லது சுரண்டும் வர்க்க நலனுக்காகவானதா? பிரித்தானியரால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமூக சீர்திருத்தங்கள் யாருக்கானதாக இருக்கும்? அவை ஏகாதிபத்திய நலனுக்கானவையே. ஆம் அவர்கள் இந்திய சமூகத்தை காலனியமயப்படுத்துவற்கு அவசியமான சமூக சீர்திருத்தங்களையே செய்தார்கள். கிறிஸ்துவ மிஷனரிகளும், பிரம்ம சமாஜமும் இதுவிடயத்தில் அவர்களுடன் ஒத்துழைத்தனர். பிரித்தானியரும் இவ் அமைப்புகளைத் தமது கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பிரித்தானியரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட அல்லது அவர்களால் ஊக்குவிக்கப்பட்ட சமூக சீர்திருத்தங்களாக அன்று கருதப்பட்டவை விதவா விவாகம், குழந்தை மணத்தடுப்பு, உடன்கட்டை ஏறுதல் நிறுத்தம், பிரித்தானிய பாடத்திட்டத்தின் கீழான நவீன ஆங்கில கல்விப் போதனை, பிறநாடுகளுக்கான பயணம் ஆகியவையும், ஒடுக்கப்பட்ட சாதியினர் சுதந்திரக் கூலிகளாகச் செல்வத்தை தடுத்து வந்த சில தடைகளை அகற்றுதலுமேயாகும். அடிமைகளாக வாங்கவும் விற்கவும் பட இருந்த நிலையை ஒழித்தலும், மிகச் சிறு அளவினருக்கு ஆங்கிலக் கல்வி கற்கும் வாய்ப்புகளை உருவாக்கியதும் இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

பிரம்மசமாஜ நிறுவனர் ராஜாராம் மோகன்ராயின் வர்க்க, அரசியல் நிலைப்பாடு. இதைத் தெளிவுப்படுத்துகின்றது.

இந்திய நவீன மயத்தின் தந்தையான ராசாராம் மோகன்ராய் (1772 1833) ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்து வணிக நிறுவன அதிகாரிகளுக்குக் கடன் கொடுக்கும் தனி வங்கியாளராக உயர்ந்து (Private Banker) வணிக நிறுவன அதிகாரியாகவும் இருந்தவர். இவர் ஜமீன்தாரி முறையை ஆதரித்தார். இதை இந்திய தேசம் முழுவதும் விரிவுபடுத்தினால் இதனால் பயன்பெறும் மக்கள் அரசாங்கத்தை எந்தவொரு ஆபத்தில் இருந்தும் பாதுகாப்பார்கள் என்றும் உறுதி தருகிறார், 17.12.1883இல் கல்கத்தாவில் ஒரு கூட்டத்தைக் கூட்டி பிரிட்டன் தொழில் நுட்பம், மூலதனம் ஆகியனவற்றை இங்கு பயன்படுத்துவதற்கும் பிரிட்டன் மக்கள் இங்கு குடியேறுவதற்கும் உள்ள சட்ட ரீதியான தடைகள் அகற்றப்பட வேண்டும் எனப் பிரிட்டன் பாராளுமன்றத்துக்கு மனு அனுப்பினார் (B.N. கங்குலி மேற்கோள் காட்டப்பட்டது, கோ. கேசவன் இந்திய தேசியத்தின் தோற்றம்)

முதல்வகை சீர்திருத்தங்கள் உயர் சாதியினர்க்கானது. குருகுலக் கல்வியால்



படிப்பகம்

# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

முதலாளித்துவ கல்வியாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும், வக்கீல்களையும், கணக்காளர்களையும், உருவாக்க முடியாது. ஆகவே பார்ப்பானியர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் புதிய அச்சில் வார்த்தெடுப்பதற்கு அது அவசியப்பட்டது. பெண் அடிமை நிலை உயர்ந்தளவிற்கு நிலவியது பார்ப்பானியர்களிடையேயும் அவர்களுடன் இணைந்து நின்றோர்கள் இடையேயுந்தான். சாதிய தூய்மையைப் பாதுகாப்பதற்காகவும் (உள்மண முறைமூலம்) தனிச்சொத்து முறையை இறுக்கமாக கட்டிக்காப்பதற்காகவும் உயர்சாதி இந்துக்களே பெண்களை அதிகம் அடிமைத்தனம் செய்பவர்களாக இருந்தார்கள். தமது பெண்களையும் ஒடுக்கப்பட்ட சாதியினரையும் அடிமைகளாகவே நடத்தினர். இந்த உயர்சாதியினரின் பண்பாடு உற்பத்தி சாராதோர் பண்பாடாகவே இருந்தது. இதனால் இவ்வித அடிமைப்படுத்தல் சாத்தியமானதாகவும்இருந்தது. ஆனால் இந்திய உழைக்கும் மக்களின் (சாதிரீதியாகப் பார்த்தால் ஒடுக்கப்பட்ட சாதியினர்) பண்பாடோ உற்பத்தி சார்ந்ததாக இருந்தது. அங்கு பெண்களும் உழைப்பில் பங்கு கொண்டார்கள். ஆண்களுடன் சமதையாக இருக்கும் பொருளாதார தகுதியும், சமூக தகுதியும் அவர்களிடம் இருந்தன. விவாகரத்தோ, விதவாமணமோ அங்கு ஓர் பிரச்சனையாக இருக்கவில்லை. அது பெருமளவிற்கு எதிர்ப்பில்லாததோர் நடைமுறையாகவே இருந்தது. உடன்கட்டை ஏறுதல் என்பதுவும் இம் மக்களுக்கு ஓர் அன்னியப்பண்பாடாகவே இருந்தது. குடும்பம் என்ற மட்டத்திலான ஆணாதிக்கம் மிகக் குறைந்ததாகவோ அல்லது பலவீனமானதாகவோ தான் இருந்தது.

இக்காரணங்களினால் முதலாவது வகை சமூக சீர்த்தங்கள் முழு இந்திய மக்களையும், தனது குறிப்பொருளாகக் கொண்டதல்ல. உயர்சாதி இந்துக்களை நல காலனிய மேட்டுக் குடியினராக மாற்றுவதற்கான பயிற்றுவித்தல்களே இவைகளாகும். இந்த சீர்திருத்தங்கள் இந்த மக்களை இந்திய தேசியவாதிகளாகவோ, சுதந்திரமான இந்து சனாதன தேசியவாதிகளாகவோ மாற்றிவிடக்கூடாதே என்பதில் பிரித்தானியர் மிக விழிப்பாக இருந்தனர். இதனால்தான் காங்கிரஸ் ஒதுங்கி நிற்பதை உறுதிப்படுத்தினர். இரண்டாவது வகைச் சமூக சீர்திருத்தம் நிலமானியமுறை அடிமைகளாக இருந்த ஒடுக்கப்பட்ட சாதியினரை நல காலனிய முறை அடிமைகளாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது. பிரித்தானியரால் உலகெங்கும் நடத்தப்பட்டுவரும் பெருந் தோட்டங்களுக்கும், இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் நிர்மாணம் செய்யப்பட்டுவரும் வீதிகளுக்கும், இருப்புப் பாதைகளுக்கும், கப்பல் கட்டுமானத்துக்கும் இத்தியாதிகளுக்கும் பெருமளவிலான தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். இந்திய கிராமங்களில் இந்திய பார்ப்பானிய, சத்திரிய கூட்டு அதிகாரத்தின் கீழ் அடைபட்டிருந்த இந்த பண்ணை அடிமைகளை மீட்டெடுத்து அவர்களை நவீன அடிமைகளாக்கினார்கள். பிரித்தானிய பெருந்தோட்டங்களில் கொத்தடிமைகளான இந்த முன்னாள் பண்ணை அடிமைகள் என்னவிதமான இன்னல்களை அனுபவித்தார்கள் என்பது பலராலும் அறியப்பட்டதொன்றேயாகும். இரண்டாவதாக, பண்ணையடிமையாக இருந்த போது இந்தத் தொழிலாளி தான் செய்யும் வேலைக்குரிய வேலைத் திறன் மட்டுமே கொண்ட ஒரு பயிற்றப்படாத தொழிலாளியாகவே இருந்தான். ஏன் எனில் அவனின் வேலை நிலத்துடனும், கால்நடைகளுடனும், மரத்துடனும், மலத்துடனும், இறந்த மனித, மிருக உடல்களுடனும் தொடர்பு கொண்ட மரபு வழி உழைப்பாகவே இருந்தது. ஆனால்

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

padippakam



பிரித்தானியர்களுக்கோ பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் தொடர்ச்சியான தேவை இருந்தது. கப்பல் கட்டுமானத் தொழில், பிரித்தானிய இராணுவம், (சிப்பாய்கள்) போன்றவை இதற்கான எடுத்துக்காட்டுகளாகும். இதனால் பண்ணை அடிமைகளை விடுவிக்கவும், அவர்களுக்கு சாதாரண மட்ட கல்வி போதிக்கவும் வேண்டியது அவசியமாகின்றது. அது மாத்திரமல்ல இவ் ஒடுக்கப்பட்ட சாதியினரிடமிருந்து தமது மேலாண்மையை ஏற்றுக் கொண்ட தலைவர்களை உருவாக்குவதும், அவசியப்பட்டது. இதனால்தான் ஒடுக்கப்பட்ட சாதியினரிடையில் கல்வியைக் கொண்டு போவதிலும், பிரித்தானியர் ஓர் எல்லைக்குட்பட்டு உழைத்தார்கள். இவ்வித சமூக சீர்திருத்தங்களுடன் ஒத்துழைத்த ஒடுக்கப்பட்ட சமூக தலைவர்களுக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

ஆகவே இந்த இரண்டாவது வகைச் சீர்திருத்தம் சாதிய அமைப்பில் எந்தப் புரட்சிகர மாறுதலையும் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டதல்ல. அதை பிரித்தானியர்கள் விரும்பவேயில்லை. பிரித்தானியரின் முயற்சி மனுவகைப்பட்ட அடிமை முறைக்குப் பதிலாக ஆப்ரகாம் லிங்கன் வகைப்பட்ட அடிமை முறையைக் கொணர்வதை நோக்கமாகக் கொண்டதாகும். ஒரு மார்ட்டின் லூதர்கிங் வருவதைக்கூட அவர்கள் விரும்பவில்லை. லிங்கன் வகை அடக்குமுறையில் சாதியம் கலக்கவில்லை. ஆனால் இந்தியாவில் சாதியம் கலந்திருந்தது. இதனால் சாதிய சமூக சீர்திருத்தத்தையும் காங்கிரஸின் பொறுப்பில் விட பிரித்தானியர்கள் தயக்கம் காட்டினார்கள். திலகரைப் போல் இவ்விடயத்தில் காங்கிரஸ் பழமையைப் பேணும் பக்கத்திற்குப் போய்விடவும் கூடாது, ஆரம்பகால பாரதியைப் போல் முற்போக்கு ஜனநாயகத்தின் பக்கத்திற்கும் போய்விடக் கூடாது என்பதில் பிரித்தானியர் மிக விழிப்புடன் இருந்தார்கள். இதனால் சமூக சீர்திருத்த விடயங்களில் காங்கிரஸ் ஒதுங்கி இருப்பதுவே இவர்களின் விருப்பமாக இருந்தது. புதிய கட்சியின் பின்னடைவுடன் திலகரும் பாரதியும் இறுதியில் காங்கிரஸ் கூட்டிற்குள் அடைக்கப்பட்டார்கள். அவர்களுடைய நேரடி ஆட்சி நிலவியதுவரை பிராமணியக் கருத்தியல் அடிப்படையிலான சாதியம், பிரித்தானிய ஆட்சிமுறைக்கு ஏற்புடைய்தாயிருந்தது. உச்சிமுனையிலுள்ள பிராமணர்களுக்குக் கீழே கூம்பக வடிவில் விரிவடைந்து படி முறை இறக்கத்தில் சென்று அடிதட்டில் பரந்த தளத்தல் உழைக்கும் மக்கள், ஒவ்வொரு தட்டிலும் கீழ்நோக்கி விரிடைந்து செல்லச் செல்ல உழைப்பு கடினப்பட்டுச் செல்லும், உரிமைகளும் வாய்ப்புகளும் குறைவடையும்.

> *....... மேம்போக்காக உற்பத்தி உறவில் ஒன்று கூடி வாழ்கிற மக்கள் சாதி ரீதியாகப் பிரிந்து இருக்கும் போது ஒடுக்குமுறை வடிவங்கள் வெளிப்படையான வன்முறையைப் பெற வேண்டியிருக்கவில்லை. ஒவ்வொரு சாதியும் தனக்கேயான புனிதத்தையும், தீட்டையும் கொண்டிருக்கின்றன. ஆதலால் அடுத்த சாதியினருடன் முழுமையான கலத்தலுக்கு முடியாமற் போகும். கீழ் இறங்கி வரும் சாதி அடுக்குகளின் புனிதத் தன்மை குறைந்து தீட்டு அடையாளங்கள் வலுப்படுவனவாயினும் அடிநிலை சாதிகளும் தமக்கேயுரியதாயுடைய புனிதத்தின்பேரால் தனித்தே இயங்கும். அதிகாரஆட்சி முறைக்கு இவ்வளவு பலமான கருவி இதை விட வேறெதுவும் இருக்க முடியாது என்பதால் அவர்கள் அச்சமின்றி இந்துமத ஒருமைப்பாட்டை அங்கீகரித்தார்கள்.* [42]

---

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



## ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள்

(1. மூர்க்க சுபாவ இந்து சனாதன தேசியம்.
2. வெறிகொண்ட மாறா மரபியல்வாத இஸ்லாமிய தேசியம்)

(பின்னிணைப்பு 2ஐப் பார்க்கவும்)

*... இந்தப் போட்டி என்பது, இருவேறு இனத்தவர்களுக்கிடையில் நடக்கும் ஆயுதப் போர் போலவே காணப்படுகிறது.*

*இந்துக்கள் தங்களுக்கென பனாரஸ் பல்கலைக்கழகம் அமைத்துக் கொண்டால் அதை எதிர்க்கும் வகையில் முகமதியர்கள் அலிகர் பல்கலைக்கழகம் நிறுவுகின்றனர். இந்துக்கள் சுத்தி இயக்கம் ஏற்படுத்தினால், முகமதியர்கள் அதை தாபாரிக் அமைப்பால் சந்திக்கின்றனர். இந்துக்கள் சங்கத்தன் அமைத்தால் முகமதியர்கள் அதை தன்ஜிம் கொண்டு முறியடிக்கின்றனர். இந்துக்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை உருவாக்கினால், அதை வீழ்த்த காக்சர் அமைப்பை முஸ்லீம்கள் கையில் எடுக்கின்றனர்.*

*இவ்வாறு இருவேறு இன மக்கள்போல் ஒரு போர்ப்பாதையிலேயே இந்துக்களும், முகமதியர்களும், பயணிக்கின்றனர். ..போர் முனையில் இருக்கும் எதிர் எதிர் படையினர் போல் ஆயத்தமாதல், கண்காணித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர்.* [43]

அம்பேத்கர்.

இந்தியத் தேசியம் இரு சோடி இருமைகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. முதலாவது சோடி, பார்ப்பனியர்கள் - பார்ப்பனியர்கள் அல்லாதோர் என்ற சமூக அரசியல் இயக்கப் போக்காகும். இரண்டாவது சோடி, இந்து சனாதன இந்துக்கள் - அவ்விதம் அல்லாதோர் என்ற இயக்கப் போக்காகும். இது தனக்குள் பல தேசியங்களைக் கொண்ட ஒரு சமூக அரசியல் போக்காகும். இவ் இரண்டினது அடித்தளமும் சாதியமைப்பும் அதைப் பேணிப் பாதுகாக்கும் சனாதன தர்மமும் தான். ஆனால் முன்னையது சாதிய முரண்பாடுகளாகவே வளர்ச்சி பெற பின்னையது வெவ்வேறு மதங்களுக்கிடையேயான மத முரண்பாடுகளாக வளர்ச்சி பெற்றது.

இந்து சனாதன இந்துக்கள், அவ்விதம் அல்லாதோர் என்ற இரண்டாவது சோடி இருமையே இவ்விடத்தில் எமது ஆய்வுப் பொருளாகும். இந்துத்துவத்தால் ஏற்படுத்தப்பட்ட இந்த அவலத்திற்கு இந்துக்கள் அனைவரும் பொறுப்பாளிகளல்லர். அனைத்து மதங்களும் தத்தமது வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் மிகக் கொடூரமான, மிகப் பிற்போக்குத் தனமான சமுதாய பாத்திரங்கள் வகித்திருக்கின்றன என்பது உண்மையே. இன்று சிற்சில அங்கங்களில் ஜனநாயகத்தன்மை பெற்றுள்ள கிறிஸ்துவமதம் முதலாளித்துவ புரட்சிக்கு முன்னர் ஐரோப்பிய பார்ப்பனியமாக இருந்ததும், 1930களின் இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிசத்தின் தோற்றத்திற்கு கருத்தியல் சேவை புரிந்ததுவும், வரலாற்றில் மறக்க முடியாத உண்மைகள். அதே போல் தனது ஆரம்பகாலத்தில் ஜனநாயகத்தன்மை பெற்றிருந்த இஸ்லாமிய மதம் மாறாமரபியல்வாத கருத்தாதிக்கத்திற்கு உள்ளாகி குலகோத்திரத் தலைவர்களின் யுத்த வெறிக்கு சேவை செய்ததையும், இன்றும் பல நாடுகளில் அது தொடர்வதையும் மறுக்க முடியாது. ஆரிய ஆதிக்கத்திற்கு எதிராகத் தோன்றிய பௌத்த மதம் இன்று



படிப்பகம்

padippakam



சிறிலங்காவில் திராவிட எதிர்ப்புக் கொண்டு இந்து சனாதனத்திற்கு சற்றும் சளைக்காமல் ஆரிய பௌத்த சிங்கள காட்டுமிராண்டித் தனங்களில் ஈடுபடுவது உலகமறிந்த சமகால வரலாறல்லவா?

இதற்காக இலங்கையின் பௌத்தர்கள் அல்லாதவர்கள் பௌத்தத்தை தமது எதிரியாகக் கொள்ளவில்லை. மாறாக சிங்கள பௌத்த பேரினவாதிகளையே தமது எதிரிகளாகக் கொண்டுள்ளார்கள். அதேபோல்தான் பிரெஞ்சுப்புரட்சியில் கிறிஸ்துவ மக்களும் பங்கு கொண்டார்கள். அது கிறிஸ்தவர்களுக்கு எதிரான புரட்சியாக இருக்கவில்லை. ஆனால் கிறிஸ்துவ மதபீடங்களும் அப்புரட்சியின் இலக்காக இருந்தன என்பதே உண்மை. அதேபோன்றுதான் இஸ்லாமிய மாறா மரபியல்வாதிகளுக்கு எதிரான போராட்டம் இஸ்லாத்திற்கு எதிரான போராட்டமாக இருக்கவில்லை. இஸ்லாமிய மக்களே அதற்கெதிராகப் போராடி வருகிறார்கள். பல நாடுகளில் வெற்றியும் பெற்றுள்ளார்கள். அல்ஜீரியா, துருக்கி, எகிப்து, ஈரான், ஈராக் போன்ற நாடுகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அங்கு இஸ்லாமிய மாறாமரபியல் வாதம் தோற்கடிக்கப் பட்டுவிட்டது. ஆனால் இஸ்லாம் தோற்கடிக்கப்படவில்லை. அது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்ட ஆயுதமாக ஒளி வீசுகிறது. அவை இன்னும் கூட இஸ்லாமிய நாடுகளேயாகும். இதனால்தான் வல்லரசுகள் சிகப்பு மற்றும் காவி அணுகுண்டிற்கு அஞ்சுவதை விட பச்சை அணுகுண்டிற்கே அதிகம் அஞ்சுகிறார்கள். இந்து - முஸ்லீம் விவகாரத்தில் அரவிந்தரின் நிலையை மட்டும் நோக்குவோம்;

பழமையில் ஊறிய இந்து மதத்தினரின் மாபெரும் மக்கட் தொகை, கடந்த நூற்றாண்டு முழுவதும் அரசியலில் உறங்கிக் கொண்டிருந்த மாபெரும் இஸ்லாம் மக்கட் தொகையினர், ....... தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஹிந்து நாகரிகத்துக்கு அப்பால் வாழும் காட்டுவாசிகள், இவர்களில் ஒருவரையும் தேசியம் புறக்கணிக்கவோ தவிர்க்கவோ கூடாது. [44]

இந்திய தேசியம் அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என 1907ஆம் ஆண்டு டிசம்பர் 17இல் கூறும் அரவிந்தர், மேலும் தொடர்கிறார். 1914 இல் சொல்வது. "எவ்வளவு வெறுப்பையும் மடமையையும் சேகரித்து, அலங்கரித்து, மதம் என்று பெயரிடுவதில் மனிதன் வெற்றி பெறுகிறான். மதப்பிரிவுகளின் சச்சரவுகள் எல்லாம் அமரத்துவ அமிழ்தத்தை தனக்குள் மட்டுமே வைத்திருக்க வேண்டுமென்று பானைகள் சண்டையிட்டதைப் போன்றன. சண்டை நடக்கட்டும், ஆனால், நமக்கு முக்கியமானது, ஏதாவதொரு பானையில் இருக்கும் அமிழ்தத்தை அடைந்து, அமரத்துவம் பெறுவதே."[45]

யார் இது அரவிந்தரா? சனாதன தர்மத்தை வளர்க்கும்படி தன்னை நாராயணன் அனுப்பி வைத்தான் என்று கூறிய அரவிந்தரா? ஏதாவதொரு பானையில் இருக்கும் அமிழ்தத்தை அடைந்து அமரத்துவம் பெற அழைக்கிறார். உலகத்துக்கே ஒளிகாட்டும் ஒரே மதம் இந்துமதந்தான் என்று தொடர்ந்து கூறினாரே அது பொய்யா? 1917இல் மேலும் கூறுகிறார்.

ஒவ்வொரு மதமும் மனித இனத்திற்கு உதவியுள்ளது. பேகனிஸம் அழகின் ஒளியையும், வாழ்க்கையின் உயர்வையும், பலமுக முழுமையில் அவனின் நாட்டத்தையும் அதிகரித்தது. புனிதமான அன்பு மற்றும் தானத்தைப் பற்றியதோர் கண்ணோட்டத்தை



படிப்பகம்

padippakam



கிறித்துவ மதம் தந்தது. புத்தமதம், மனிதன் ஞானியாக, மிருதுவாக, தூய்மையாக வாழ ஒரு உன்னத வழியைக் காட்டியது, ஜீடாயிஸம் மற்றும் இஸ்லாம், மத நம்பிக்கையுடன் செயலாற்றவும், கடவுளிடம் நிலையான பக்தி செலுத்தவும் கற்றுத் தந்தன. ஹிந்துமதம் மிக உன்னதமான, சத்தியமான ஆன்மீக வழிமுறைகளை அளித்தது. இவ்வனைத்து இறையியல்களும் தழுவி, ஒன்றோடொன்று இணைந்தால் அற்புதமாக இருக்கும். ஆனால் அறிவார்ந்த கோட்பாடும் இன அகங்காரமும் குறுக்கே நிற்கின்றன. [46]

அரவிந்தர் ஒரு இந்துசனாதனவாதியே அல்ல, அவர் ஓர் சன்மார்க்க சமயவாதி என்றே எண்ணத் தோன்றுகிறது. அவர் பற்றிய எமது கணிப்பீடுகள் தவறு என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அப்படியல்ல. பாரதியார் உட்பட அனைத்து இந்து சனாதன இந்திய தேசியவாதிகளும் இவ்விதமானவர்கள்தான். இந்திய தேசிய நலனுக்கும் இந்திய உழைக்கும் மக்கள் திரளினருக்கும் என்ன தேவை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். எது சரியானது என்பதுவும் அவர்களுக்கு நன்கு தெரியும். தமது உண்மையான இலக்குகளை எய்துவதற்காக பரந்த அணியினர் அணி திரட்டப்பட வேண்டும் என்பதுவும் இவர்களுக்குத் தெரியும். அந்த மக்களை அணிதிரட்டுவதற்காக இவர்கள் இவ்வித முற்போக்கு முழக்கங்களைச் செய்வது வழமையாகும். அந்த மக்களுடன் சில சமரசங்களுக்கும் வருவதுவும் கூட உண்டு. ஆனாலும் தமது இந்து சனாதன இந்திய தேசியம் என்ற இலட்சியத்தில் குறிதவறமாட்டார்கள்.

பொத்தம் பொதுவாகப் பேசும்போது முற்போக்கு பேசினாலும் குறிப்பான நிகழ்வுகளைப் பற்றிக் கூறும்போதுதான் தமது உண்மை நிலையை வெளிப்படுத்தினார்கள். டிசம்பர் 6, 1907இல் முகமதியர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பற்றி அரவிந்தர் கூறுவதாவது.

வெகு காலத்திற்கு முன்பிருந்தே ஆங்கிலேயர்கள், இந்திய சமூகத்தின் மத வேற்றுமைகளைக் தங்களுக்குச் சாதகமாக்க முயன்று வந்தனர். சமீபத்தில் முகமதியர்களை ஹிந்துக்களுக்கு எதிரிகளாக நிறுத்தும் கொள்கை பகிரங்கமாகவே கடைபிடிக்கப்படுகிறது. புதிய மக்களவைகளில் முகமதியர்கள் பிரதிநிதிகளாக இருப்பது, அவர்கள் மண்ணின் மைந்தர்கள், ஒரே இந்திய மக்களின் பிணைக்கப்பட்ட பகுதியினர் என்பதால் அல்ல, அரசியல் ரீதியாக, தனித்துவமும் பகைமையும் கொண்டு, ஹிந்துக்களைத் தாழ்த்தவோ அல்லது அழிக்கவோ கூடிய ஓர் அமைப்பு என்ற எதிர்பார்ப்பில்தான் ஹிந்துக்கள் சுய உணர்வு கொண்டவர்களாகி விட்டார்கள். மரணத்திலிருந்து எழுந்து வாழ்ந்து என்னைப் பின்தொடர்ந்து வா என்னும் குரலைக் கேட்டு விட்டார்கள். உணர்ச்சி மிகுந்த பலம் பொருந்திய ஒரு அரசியல் சக்தியாக அவர்கள் வளர்ந்து வருகிறார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சமீபத்திய புத்திசாலித்தனமான சூழ்ச்சி என்னவென்றால், இந்திய அரசியலின் அங்க கூறுகளைக் களைத்து, அவற்றைச் சமயம் மட்டுமில்லாமல் ஜாதி அடிப்படையிலும் பிரிக்க வேண்டும் என்பதேயாகும். ஜாதி என்பதற்கு எவ்வித அரசியல் அர்த்தமும் இருந்ததில்லை. இருக்கவும் விடக்கூடாது. [47]

இந்து முஸ்லீம் மோதல் பிரித்தானியரின் சமீபத்திய சூழ்ச்சி என்பது உண்மைதான். பிரித்தானியர்களின் செல்லப்பிள்ளையாய் இருந்தது இஸ்லாமிய மாறாமரபியல்வாதிகள் மட்டுமல்ல, இந்து சனாதனவாதிகளுமேயாகும். இவர்களே



படிப்பகம்

padippakam



பிரித்தானியர்களிடம் அதிக செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தார்கள். (இந்நூல் வரிசையின் 'ஞானப்பாலூட்டும் பிரித்தானியர்' என்ற பகுதியில் இதுமேலும் விளக்கப்பட்டுள்ளது.)

ஆங்கில கல்வியால் கிடைத்த அனைத்து வரப்பிரசாதங்களையும் பிராமணர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் கைப்பற்றிக் கொண்டதன் விளைவுதான் உத்திரப்பிரதேசத்தில் (வங்காளத்தில்) அலிகார் பல்கலைக்கழகத்தின் தோற்றமும், சென்னையில் பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் தோற்றமுமாகும். சென்னையில் இந்துக்களின் கல்வியில் நாட்டங்காட்டிய இந்துக்களுக்கென பெனாசிர் பல்கலைகழகத்தை நிறுவிய ஐரோப்பிய மாது அன்னிபெசண்ட் இந்தியாவில் இருதேசியம் இருக்க முடியாது, இந்து தேசியம் மட்டுந்தான் இருக்க முடியும் எனப் பகிரங்கமாகக் கூறினார். இதை முன்மாதிரியாகக் கொண்டு தான் சேர் சயத் அகமத் கானால் ஆரம்பிக்கப்பட்ட அலிகார் பல்கலைக்கழக (Anglo - Mohammedon Orientel college) அதிபரான பேக் தியோட்டர் என்னும் வெள்ளையன் இந்துக்களை எதிர்க்க இஸ்லாமியர்கள் பிரித்தானியருடன் இணைந்து இரத்தஞ்சிந்தத் தயாராய் இருக்க வேண்டும் எனப் பகிரங்கமாகக் கூறினான். ஆகவே இந்து முஸ்லீம் முரண்பாட்டை இந்திய தேசியத்திற்கு எதிராக பிரித்தானியர் பயன்படுத்தியதற்கான பிரதான பொறுப்பு பாப்பனியன - பனியாக்கள் இந்திய பொருளாதாரத்தின் அனைத்து வளங்களையும் தமது கைகளுக்குள் வைத்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகளேயாகும். இதற்குத் துணையாக இந்து சனாதன தேசிய வாதம் பயன்படுத்தப்பட்டது.

'ஹிந்துக்களைத் தாழ்த்தவோ அல்லது அழிக்கவோ கூடிய ஒரு அமைப்பு என்ற எதிர்பார்ப்பில்தான் ஹிந்துக்கள் சுய உணர்வு கொண்டவர்களாகி விட்டார்கள்'. என்றும் ஏன் கூற வேண்டும். இஸ்லாமியரின் மேலான ஓர் அச்சத்தையும் இஸ்லாமியர்களுக்கு எதிரான ஹிந்து எழுச்சியையும் தூண்டுவது தானே இங்கு நோக்கம்.

காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்த தேசியகட்சி (புதிய கட்சி) தனது முதலாவது தேசிய மாநாட்டை 1907 டிசம்பர் 27ஆம் திகதியன்று கூட்டியது. அதே ஆண்டு, அதே மாதம் ஆனால் இருநாட்கள் கழித்து (டிசம்பர் 29) முஸ்லீம் லீக்கின் முதலாவது மாநாடு கராச்சியில் நடைபெற்றது. இந்திய மாதா ஒரே சூலில் இரு குழந்தைகள் பெற்றாள் இருநாள் இடைவெளியில் பிறந்த இரண்டுமே மதவாத துஷ்டக் குழந்தைகள்தான். மூத்த குழந்தை 1909இல் அரவிந்தரின் குரலில் பேசுகிறது. .... தேசியம் என்பது ஒரு மதம், ஒரு நம்பிக்கை என்று நான் இனிக் கூறமாட்டேன். சனாதன தர்மமே நமக்குத் தேசியம். இந்த செய்தியைத்தான் நான் உங்களுடன் பேச வேண்டும்.[46] இது 1909 மே 30 இல் அவர் நடத்திய புகழ் பெற்ற உத்தாபாரா உரையின் போது கூறியதாகும். இன்னும் சிறைபடாமல் இருக்கும் புதிய கட்சியின் தேசியத்தலைவர் என்ற முறையில் தனது கட்சியினருக்கு ஆற்றிய உரை. தனது ஒருவருட கடுஞ்சிறைக்குப் பின்னர் ஆற்றிய உரை. அதே வருடம் ஜூன் மாதம் இவ்விதம் கூறுகிறார்.

முகமதியரின் எதிர்ப்பைக் கண்டு நமக்கு அச்சமில்லை. (பிரிட்டிஷ் ஆதிக்கமான) ஷில்லாங், சிம்லாவிலிருந்து உருவாக்கப்படாமல், உண்மையான சுதேசத் தன்மையுடையது



படிப்பகம்

padippakam



என்றால் அதை வாழ்க்கை மற்றும் முன்னேற்றத்தின் அறிகுறியாக வரவேற்கிறோம். இந்தியாவில் இஸ்லாமின் எழுச்சியை நாங்கள் ஒதுக்கவில்லை. வரவேற்கிறோம். அதன் முதல் முயற்சிகள் எங்களுக்கு எதிராக இருந்தாலுங்கூட; ஏனெனில் எல்லாவலிமையும், சக்தியும், செயலும் தேசத்தை உருவாக்கும் இயந்திரத்துக்கு வெறும் அரைதானியமே ஆகும். முசல்மானுடன் அவன் விரும்பியபடியே சகோதரனாக உறுதியாக கைப்பிடிக்கவோ அல்லது மல்யுத்தனாக பிடி இறுக்கவோ நாங்கள் தயாராக இருக்கிறோம். [(49)].

எந்தத் தயக்கமும் இன்றி இந்துக்களின் தலைவராக நின்று இஸ்லாமியர்களுடன் சவால் விடுகிறார். முகமதியர்களின் எதிர்ப்பானது அவர்களது சொந்த நலனைச் சார்ந்ததல்ல, அது பிரித்தானியர்களின் சூழ்ச்சி என்கிறார். அதாவது அது எல்லைக்கப்பால் இருந்து எய்யப்பட்ட அம்பு என்கிறார். இதற்காகத்தான் இந்தியாவின் ஆங்கிலேய ஆட்சியின் மையங்களான ஷில்லாங்கையும், சிம்லாவையும், உவமானத்துக்கு எடுக்கின்றார். இந்து புத்துயிர்ப்பின் ஒரு பிரிவாகிய புதிய கட்சியின் நடவடிக்கைகள் ஷில்லாங், சிம்லாவில் இருந்து உருவாக்கப்பட்டனவல்ல. அவை விதேசியத்தன்மை பெற்றவைதான், அதில் சந்தேகமில்லை, ஆகவே 1909இல் அரவிந்தரின் இந்தக் கோபம் நியாயமானதுதான். பிரித்தானியர்களின் பிரித்தாளும் தந்திரம் அவரை சினம் கொள்ள வைத்துவிட்டது. என கருதி அவரை ஏற்றுக் கொள்ளலாம். இந்து புத்துயிர்ப்பின் மற்றோர் பகுதி இந்துசனாதனமும் (இதுதான் அதிக சக்திவாய்ந்த பகுதி) தேசியத் தன்மை பெற்றதல்ல என்பதையும் ஒத்துக் கொண்டு அதற்கெதிராகவும் சவால் விட்டிருந்தால். மாக்ஸ் முல்லரும், அன்னிபெசண்டும், ஒல்கொட்டும் இந்தியர்களா?

அவர் கூறும் இந்த முகமதியரின் எதிர்ப்பு என்பது பிரித்தானியரால் 1909இல் அறிமுகப்படுத்தப்பட்ட மார்லே மிண்டோ சீர்திருத்தத்தின் போது முகமதியர்கள் தனியான பிரதிநிதித்துவம் கேட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளையே ஆகும். மிதவாத காங்கிரஸ் இது விடயமாக முஸ்லீம்களுடன் ஒரு சமரசத்தை ஏற்படுத்த முற்பட்ட வேளையில் அரவிந்தர் அணி இதைக் கடுமையாக எதிர்த்தது. முன்னர் குறிப்பிட்ட அதே உரையில் அரவிந்தர் கூறுகிறார்.

அரசியல் கேள்வியாக இந்து முஸ்லீம் பிரச்சனை எங்களைக் கவரவில்லை. தேசிய பிரச்சனையாக இது மிக முக்கியம் வாய்ந்ததாகும். [50]

முஸ்லீம் மக்களுக்கு தனியான பிரதிநிதித்துவம் என்பது இந்து தேசியத்தையே அழித்துவிடும் என்கிறார். இச்சீர்திருத்தத்தின் இப் பகுதியை மிக மலினமாகத் தாக்குகிறார். உதாரணத்திற்கு "பல முகமதியர்களால் ஆட்சேபிக்கப்படும் ஒவ்வொரு செயலும் இப்போது தடை செய்யப்படலாம், ஏனெனில் அமைதிக்குப் பங்கம் நேரிடும் என்று. இதே காரணத்தால் ஹிந்து கோவில்களின் வழிபாடும் கூட தடையாகும் நாள் வந்துவிடுமோ என்று மெல்ல யோசிக்க ஆரம்பிக்கின்றோம்." [51]



படிப்பகம்

padippakam



இது 1909 செப்டம்பர் 4இல் கூறிய கூற்றாகும். அப்போது அரவிந்தர் புதிய கட்சியின் தேசியத் தலைவராக இருக்கிறார். அவரின் உரைகளில் பல பாரதியாரால் மொழி பெயர்க்கப்பட்டு 'இந்தியா' இதழில் பிரசுரமாகி வந்தன. இந்தப் பேச்சு முஸ்லீம்களுக்கு எதிராக இந்துக்களைத் தூண்டிவிடும் நோக்கங் கொண்டதாகும். அதே ஆண்டு நவம்பர் 20இல் மேலும் சொல்கிறார்.

இத்திட்டம் (மார்லே மிண்டோ சீர்திருத்தங்கள்) தேசத்தை வெறுப்பு மிகுந்த இரு கூறுகளாக்கி, இந்தியாவின் ஒற்றுமையைத் தடுக்கும் பலமான கருவியாகிவிடும். இத்திட்டத்தால் நமக்கு அணுவளவு சுயாட்சி கூடக் கிடைக்காது. முன்பு இந்தியாவில் உயர்ந்த ஐரோப்பியன் தாழ்ந்த இந்தியன் என்ற இரண்டே வகுப்புகள் இருந்தன. இப்போது, உயர்ந்த ஐரோப்பியன், உயர்ந்த முகமதியன், தாழ்ந்த இந்து என்று மூன்றாகிவிடும். இது முதல் நட்டம். இந்த நட்டம் சிறியதல்ல. [52]

எவ்வளவு வகுப்புவாத நஞ்சுகலந்த கூற்று. மார்லே மிண்டோ சீர்திருத்தத்திற்கு முன்னால் உயர்ந்த ஐரோப்பியனும் தாழ்ந்த இந்தியனும் என்ற இரண்டே வகுப்பு மாத்திரமும் தான் இருந்ததாம். அதாவது இந்தியர்களுக்கிடையில் எந்தப் பேதமும் இருக்கவில்லை, எல்லோரும் சமமாகத் தான் இருந்தார்களாம். மாதத்திற்கு ஒரு தடவை அரிசிச் சோறு சாப்பிடுவதையே பெரும் பாடாகக் கொண்ட தலித் மக்களும், பலவிதமான குழம்புகள், பொரியல்களுடன் நெய்யில் மூழ்கி உயர்ரக அரிசிச் சோறு சாப்பிட்டு தொந்தி பெருத்திருப்பதை ஒரு நாகரீகமாகக் கொண்ட பார்ப்பானிய - பனியாக்களும் ஒரே வகையைச் சேர்ந்த இந்தியர்களாம். கல்வி, முதலீடு, அரசியல், நிதி நிறுவனங்கள் ஆகிய அனைத்து வாய்ப்புகளுமே இந்திய ஜனத் தொகையில் மிகச் சிறுபான்மையினரான பார்ப்பனர்கள், பனியாக்கள், பார்சியர்கள் இவர்களைச் சார்ந்தவர்களின் கைகளில் குவிந்துள்ளதே என்பதுதான் 1900களின் முதல் பத்தாண்டுகளின் பிரச்சனையாக இருந்தது. இதன் விளைவாகத்தான் பிராமணரல்லாதோரும், முஸ்லீம்களும் மார்லே மிண்டோ சீர்திருத்தத்தில் தனியான பிரதிநிதித்துவம் கேட்டுப் புகார் செய்தார்கள். இந்த உண்மையை அரவிந்தரும் அவரின் சகாக்களும் மூடிமறைக்கின்றனர். முஸ்லீம்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதன் மூலம் முஸ்லீம்களும் ஆளும் இனமாக, ஐரோப்பியர்களுக்கு சமதையானவர்களாக வந்துவிடுவார்கள் என்ற கருத்தைப் பிரச்சாரம் செய்தார்கள். இதன் மூலம் முஸ்லீம்களுக்கு எதிராக இந்துக்களை தூண்டிவிடவும், தனது இஸ்லாமிய எதிர்ப்பு நிலைப்பாட்டை நியாயப்படுத்தவும் முயற்சிக்கிறார்.

பார்ப்பனர்கள் ஆதிக்கம் எவ்விதம் இருந்தது என்பதைக் காட்ட ஒரு சிறு புள்ளிவிபரம் தருகிறோம். தாழ்த்தபட்டவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக 1927ம் ஆண்டு சைமன் கமிஷனிடம் டாக்டர் அம்பேத்கர் அளித்த கோரிக்கை மனுவில் காணப்பட்ட இந்த அட்டவணை நிலமையைப் புரிய வைக்க பெரிதும் உதவும்.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

பள்ளிக் கல்வியில் இவர்களின் நிலை (1881 - 82)

| மாணவர்கள் | நடுநிலைப்பள்ளி பயனாளி | | உயர்நிலைப்பள்ளி பயனாளி | |
|---|---|---|---|---|
| கிறித்துவர்கள் | 1.429 | 12.06 | 111 | 2.26 |
| பார்ப்பனர்கள் | 3.639 | 30.70 | 1987 | 40.29 |
| விவசாயிகள் | 624 | 5.26 | 140 | 2.85 |
| தாழ்த்தப்பட்டவர்கள் | 17 | 0.14 | 0 | 0 |
| பிற்படுத்தப்பட்டவர்கள் | 3823 | 32.25 | 1573 | 32.04 |
| முகமதியர்கள் | 687 | 5.80 | 100 | 2.04 |
| பார்சியர்கள் | 1526 | 12.87 | 965 | 19.66 |
| மலைவாழ்மக்கள் | 6 | 0.05 | 0 | 0 |
| ஜீக்கள் | 103 | 0.87 | 92 | 0.86 |

இதோ அதே காலப்பகுதியில் முஸ்லீம் கல்வி தொடர்பாக ஹண்டர் கமிஷனுக்கு முன் வைக்கப்பட்ட மனுவின் சில புள்ளி விவரங்கள்.

மனுதாரர்களாகிய நாம் உயர்கல்வி தொடர்பாக இந்த மாகாண அரசில் பம்பாய் முஸ்லீம்களின் அவல நிலையை நோக்கி தங்கள் கவனத்தை திருப்புவதற்காக பொதுத் துறை வழிகாட்டும் ஆணையக அறிக்கை 1880 - 1881 இருந்து எடுக்கப்பட்ட பின்வரும் வியப்பும் வேதனையும் மிக்க இப்புள்ளி விபரங்களை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

| காலேஜ் | மொத்த மாணவர்கள் | இஸ்லாமிய மாணவர்கள் |
|---|---|---|
| டக்கன் காலேஜ் | 175 | 00 |
| எல்பின்ஸான் காலேஜ் | 175 | 05 |
| அகமதாபாத் காலேஜ் | 35 | 00 |
| சேவியர் | 71 | 01 |
| ஈஅரசு சட்டக் கல்லூரி | 152 | 03 |
| கிராண்ட் மெடிக்கல் காலேஜ் | 282 | 03 |
| பூனா என்ஜினியரிங் | 159 | 05 |
| ஈபூனா ஹை ஸ்கூல் | 574 | 12 |
| சோலாபூர் ஹை ஸ்கூல் | 110 | 02 |
| நட்னா நகர் ஹை ஸ்கூல் | 179 | 10 |
| எல்பின்ஸ்டன் ஹை ஸ்கூல் | 795 | 17 |
| சேவியர் காலேஜ் | 675 | 19 |

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam



இரண்டாம் நிலைக்கல்வி

| | மொத்தம் | முஸ்லீம்கள் |
|---|---|---|
| பம்பாய் நகரத்தில் | | |
| ஆங்கிலம் கற்போர் | 6,375 | 220 |
| மத்திய டிவிஷன் | 9,568 | 307 |
| நோர்த் டிவிஷன் | 777 | 39 |
| நோர்தன் டிவிசன் | 4,459 | 182 |
| சதற்ன் டிவிஷன் | 2,801 | 62 |
| சிந்த் டிவிஷன் | 19,965 | 795 |

ஆரம்பகல்வி — தாய்மொழிக்கல்வி

| மொத்தம் | இந்து | இஸ்லாம் |
|---|---|---|
| 2,75,000 | 2,39,077 | 33,563 |

12 விழுக்காட்டினரே இஸ்லாமிய மாணவர்கள்

அன்றைய பொழுதில் தாழ்த்தப்பட்டவர்களின் ஜனத்தொகை 16%. ஆனால் பார்ப்பனர்களின் ஜனத்தொகையோ வெறுமனே 3% மாத்திரமே. 3 விழுக்காட்டினர் உயர்கல்வியில் 40.29 விழுக்காட்டினராக இருக்க 16 விழுக்காட்டினர் 0 விழுக்காட்டினராக உள்ளனர். அதேபோல் சுமார் 20 விழுக்காட்டினரான முகமதியர்கள் 2.04 விழுக்காட்டினராக உள்ளனர். எல்லா இந்தியர்களும் சமமா? அல்லது முகமதியர்கள் ஐரோப்பியர்களுக்கு சமதையானவர்களா? இரண்டுமே இல்லை.

1910களின் முன்பே இந்தியத் தேசியம் மத அடிப்படையில் இருமையாகி விட்டது. ஆனால் அதை துரிதப்படுத்திய அரவிந்தர், திலகர் மற்றும் நிவேதிதா ஆகிய புதிய கட்சியின் தலைவர்கள் தாம் இந்திய தேசியவாதிகள் என இடைஇடையே கூறிக் கொள்வதில் தயக்கங்காட்டவில்லை. ஆனால் இவ்விதம் கூறும்போது இந்துசனாதனிகள் அல்லாத பிற பிரிவினரின் தன்மான உணர்வை புண்படுத்தத் தவறுவதில்லை. 1909இல் சீர்திருத்தப்பட்ட மக்கள் சபைகளுக்காகத் தனிப்பட்ட வாக்காளத் தொகுதிகளை இந்திய முஸ்லீம்களுக்கு வழங்கிய மார்லே மிண்டோ சீர்திருத்தத் திட்டத்தை நிராகரித்துப் பேசிய போது அரவிந்தர் கூறிய விடயம் இதற்கோர் எடுத்துக் காட்டாகும்.

பிறப்பாலும், இரத்தத்தாலும் ஒன்றாக இருந்தாலுங் கூட, நம்முடன் இல்லாமல் மாபெரும் முஸ்லீம் நாடுகளுடன் சேர்ந்து விடுவதால்தான், தங்களை முதல்பட்சம் இந்தியர்களாகவும், இரண்டாம் பட்சம் முகமதியர்களாகவும் கருதாமல் தனித்துவத்தை விழைகிறார்கள் முகமதியர்கள். ஹிந்துக்களுக்கு இத்தகைய வழி எதுவுமில்லை. நல்லதோ கெட்டதோ அவர்கள் இந்த மண்ணுக்கு மட்டுமே கட்டுண்டிருக்கிறார்கள். அவர்களால் தங்களது தாயை மறுக்கவும் முடியாது. அவளைக் கூறுபோடவும் முடியாது.. ..... ஆதலால் உணர்விலும் பழக்கவழக்கத்திலும், பெரும்பான்மை ஹிந்துத்துவம் நிரம்பிய, அதே சமயத்தில் முஸ்லீம் அவனது கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களையும் சேர்த்து, தன்னுடன் ஈர்த்துக் கொள்ளுமளவு பரந்த ஒரு இந்திய தேசியந்தான் நமது இலட்சியம் [54].

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam

## 85 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

இவையெல்லாம் அரவிந்தர் அரசியலில் தீவிரவாதியாக, உண்மைத் தேசியவாதியாக இருக்கும்போது நடந்தவை. ரிஷியாகப் போன பின்னர், யோகநித்திரையில் ஞானம் பெற்ற பின்னர், மனப்பக்குவம் அடைந்திருக்கலாம் என்று எவரும் எதிர்பார்ப்பது நியாயம் தான். ஆனால் அது அப்படி நடக்கவில்லை. அவரின் இந்து சனாதன தீவரவாதம் இன்னும் அதிகரித்தது. இஸ்லாமியர்களுக்கு எதிரான சத்திரிய தளபதிகளுக்கான அவரின் ஆணை என்ன என்று இதோ அவரே சொல்கிறார். 1923 ஏப்ரல் 28இல் தனதுசீடருக்கு கூறியது.

..... என்றாவது ஒரு நாள் ஹிந்துக்கள் முகமதியருடன் போராட வேண்டியிருக்கும். அதற்கு அவர்கள் தயாராக வேண்டும். ஹிந்து முகமதியர் ஒற்றுமை, ஹிந்துக்களின் அடிமைத்தனம் என்று பொருள் ஆகக் கூடாது. ஒவ்வொரு முறையும் இந்துக்களின் அடக்கம் விட்டுக் கொடுத்துள்ளது. ஹிந்துக்களை அவர்கள் வழியில் விட்டுவிடுவதுதான் மிகச் சிற்நத தீர்வாகும். பின்னர் ஹிந்து முகமதியர் ஒற்றுமை தானே வந்துவிடும். பிரச்சனையும் தீர்ந்துவிடும். [55]

பொறுமையை கொள்கையாகக் கொண்ட ஒரு மதத்துடன் நீங்கள் ஒற்றுமையாக வாழலாம். ஆனால், நான் உன்னை சகித்துக் கொள்ளமாட்டேன் என்ற கொள்கையுடைய மதத்துடன் எப்படி அமைதியாக வாழ முடியும், இந்த மக்களுடன் எப்படி ஒற்றுமையாக வாழப் போகிறீர்கள்? முகமதியர்கள் ஹிந்துக்களை மதமாற்றம் செய்து கொண்டேயிருப்பார்கள். ஹிந்துக்கள் எந்த முகமதியரையும் மதமாற்றம் செய்யமாட்டார்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையை அடையமுடியாது என்பது நிச்சயம். அத்தகைய அடிப்படையில் நீங்கள் ஒற்றுமையை அடைய முடியாது. முகமதியர்கள் அவர்களது மதத்தில் கொண்டிருக்கும் அதி தீவிர வெறியை விட்டுவிடச் செய்வதே, அவர்களை தீமையற்றவர்களாக்கும் ஒரே வழி [56].

இந்து சனாதன தேசியத்தின் ஒழிவுமறைவற்ற குரல், வெறும் குரலல்ல, இது போர்முழக்கம், கிருஷ்ணனின் சங்கநாதம். இஸ்லாமியர்களுக்கெதிரான வன்முறைப் பிரயோகத்திற்கான அறைகூவல். சுதந்திரம் பெறுவதற்கு 24 வருடங்கள் இருக்கும்போதே ஓங்கி ஒலித்த ஹிந்து சனாதன முரசு. புதிய கட்சியின் அடிப்படைக் கருத்து படிப்படியாக விஸ்வருபமெடுக்கின்றது.

எதற்காக இந்தக் கோபம். இஸ்லாமியர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் இருந்து ஒதுங்கியா நின்றார்கள் என்பதற்காகவா? அவர்கள் ஒதுங்கியா நின்றார்கள்?

இல்லை, இல்லவேயில்லை என்பதை வரலாறு முரசறைக்கின்றது. இந்திய தேசிய ஒருமைப்பாடு என்பது ஒரு புறநிலை யதார்த்தமாக இருந்தது என்பதை பெருமையுடன் எடுத்தியம்புகிறது.

முதலில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம்பிள்ளையின் சமாச்சாரத்தை எடுத்துக் கொள்வோம். சிதம்பரம்பிள்ளையின் இந்த முயற்சியை தமிழன் முயற்சி என திராவிட கட்சியினரும், வெள்ளாளர் முயற்சி என வெள்ளாளர் சாதியினரும் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வதில் தவறில்லைத்தான். ஆனால் இம் முயற்சியில் பிறரின்



படிப்பகம்

padippakam



பங்கு என்ன என்பதுவும் மதிக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றை மூடி மறைக்க இந்த புகழ்ச்சிகள் பயன்படுத்தப்படக்கூடாது

## கப்பல் கம்பெனி

தேசிய இயக்கத்தின் எழுச்சியுடன் பிரித்தானிய கடல் வர்த்தக நலன்களுக்கு சவால் விடுத்து பல சுதேசிய கப்பல் கம்பெனிகள் உருவாகின. அவற்றில் இரண்டாவது தான் சி.வ. கம்பனி (சிவபுரம் ஜமீன்தாரைக் குறிக்கும்) எனப் பெயரிடப்பட்ட சுயதேசி ஸ்ரீம் நெவிகேஷன் கம்பெனியாகும். இது ஆரம்பிக்கப்பட்டது 1906லேயாகும். அவ்விதமானால் முதலாவது கம்பனி எது? யார் அந்த வெள்ளையர் எதிர்ப்பு போராளி? திலகரோ, அரவிந்தரோ இல்லை.

இந்தியாவை தமது தேசமென மதிக்காதவர்கள் என ஒரு சாராரால் தூற்றப்படும் இஸ்லாமியர்களே அந்தப் பெருமைக்குரியவர்களாகும். 1905ஆம் ஆண்டு ஜுலை மாதம் பெங்காள் ஸ்ரீம் நெவிகேசன் கம்பனி என்றோர் கம்பனி ஒரு லட்சம் ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டது. இஸ்லாமிய வர்த்தகர்களும் ஜமீன்தார்களும் இணைந்தே இக் கம்பெனியை அமைத்தார்கள். இவ்விரண்டு கம்பனிகளுமே இப்போட்டியில் நின்று பிடிக்க முடியாமல் வீழ்ந்து போயின. ஆனால் 1905க்கும் 1930க்கும் இடைப்பட்ட காலத்தில் சுதேசிய 30 கம்பெனிகள் உருவாக்கப்பட்டன. இவற்றின் மொத்த முதலீடு 10 கோடியாகும். முதல் கப்பலோட்டியவன் என்ற பெருமை யாரைச் சேரும்?

வ.உ.சியின் முன்முயற்சியில் அமைக்கப்பட்ட சி.வி. கம்பனி பலரைப் பங்குதாரர்களாகக் கொண்டதாகும். அதை நிர்வகிக்க ஒரு சபையும் அமைக்கப்பட்டது. இது 15 இயக்குனர்களைக் கொண்டதாக இருந்தது. இதன் செயலாளர் திருவாளர்கள் எச்.ஏ.ஆர். ஹாஜி பாகீர் முகமத் செயிட் & சன்ஸ் ஆகும். 1906 நவம்பரில் இவர் விலத்தின் கொள்கிறார்.

## வங்காள பிரிவினைக் கெதிரான இயக்கம்

வங்காளத்தை கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிப்பது என 1905ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20ந் தேதி அறிவிக்கப்பட்டது. 1906ஆம் ஆண்டு அக்டோபர் 9ம் தேதி அது அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டது. கிழக்கு வங்கம் இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகவும் மேற்கு வங்கம் இந்துக்களை பெரும்பான்மையாகவும் கொண்ட பகுதியாகும். மதம் வேறாக இருந்தாலும் மொழிவழிப் பண்பாடு ஒன்றேயாகும்.

பௌத்த மன்னர்களின் ஆட்சியில் இருந்த வங்கம் ஆரிய பார்ப்பனர்களின் படையெடுப்பால் சிதைவுற்றது. ஆரிய பார்ப்பனிய மேலாண்மை கொண்ட, வர்ணாசிரம ஆட்சி நிறுவப்பட்டது. அப்போது இவ் ஆட்சியதிகாரம் குவிக்கப்பட்டிருந்த மேற்குப் பகுதியைவிட்டு பலவீனப்பட்டிருந்த கிழக்கு நோக்கி நகர்ந்த அவர்ணாக்களும்,



படிப்பகம்

padippakam



பஞ்சமர்களுமே பின்னாளில் இஸ்லாமிய ஆட்சியின் போது இஸ்லாமியர்களாக மாறியவர்களாகும்.

நிலைமை இவ்விதம் இருந்தும், வங்கப் பிரிவினைக்கு எதிரான இயக்கத்தில், அது ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் என்ற முறையில் இஸ்லாமியர்களும் பங்கு பற்றினார்கள். வங்கப் பிரிவினை எதிர்ப்பியக்கந்தான் புதிய கட்சியினரின் விளைநிலம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அரவிந்தரையும், விபின் சந்திரபாலரையும் தேசியத் தலைவர்கள் என்ற நிலைக்கு முன்தள்ளிவிட்ட இந்த வங்கப்பிரிவினை இயக்கம் அரவிந்தர் போலவே இரு கிளைப்படுநிலை கொண்டதாகும். ஒன்று அகன்ற வங்க அபிலாசை, கிழக்கு வங்கம் மேற்கின் நவ காலனியாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு; இரண்டாவது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் இந்தியா பலவீனப்பட்டுவிடக் கூடாது என்ற நிலைப்பாடு; முன்னையது மேலாதிக்க வெறி, பின்னையது ஏகாதிபத்திய எதிர்ப்பு போர்க்குணம். இதை கிழக்கு வங்காள இஸ்லாமியர்கள் நன்றாகவே புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களும் இரு கிளைப்படுநிலை கொண்டவர்களாகவே இருந்தனர். ஒரு புறம் அகன்ற வங்கத்திற்கு எதிரான தன்மை, மற்றையது ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை. இதனால் ஒருபுறத்தில் ஆரிய வங்க பார்ப்பனியத்திற்கு எதிராகவும், மறுபுறம் அதே பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய தேசியத்துடன் உடன்பாடாகவும் இருக்க வேண்டிய நிலை. வங்கப் பிரிவினைக்கெதிரான இயக்கத்தின் போது அவர்கள் தமது இந்நிலைப்பாட்டை வெவ்வேறு முகாம்களின் ஊடாக வெளிப்படுத்திக் கொண்டார்கள். “இப்போராட்டத்தில் ஒரு சாரார் பங்கு பற்றவில்லை, இன்னோர் சாரார் மிக ஆர்வமாகப் பற்றினர். முக்கியமான முஸ்லீம் தலைவர்களும் கூட பங்கு பற்றினர். ” [57]

வங்கப் பிரிவினை அமுலுக்கு வந்த அக்டோபர் 16ஆம் நாளை வங்காளிகள் தமது மத வேறுபாட்டை புறந்தள்ளி வைத்து ஒற்றுமை நாளாகக் கொண்டாடினர்.

ராகி பௌர்ணமி நாளன்று ராகி கயிற்றை தமது நண்பர்களின் மணிக்கட்டில் அணிவிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்தனர். அக்டோபர் 16 ராகி பௌர்ணமி நாளாகும். இது ஒற்றுமையை எடுத்தியம்பும் குறியீடு. அந்த நாளில் சமைத்த உணவை உண்ணக் கூடாது என்ற சடங்கினையும் பின்பற்றினர். இந்துக்கள் முஸ்லீம்கள் என்ற பேதமின்றி இச்சடங்குகள் எல்லோராலும் பின்பற்றப்பட்டன. பல முஸ்லீம் தலைவர்கள், பிரிவினைக்கு எதிராக நேரடியாகவே முன்னின்று செயற்பட்டனர். பாரிஸ்டரான அப்துல் ரசுல், முதலாளியான கந்நவி, சிறந்த மேடைப் பேச்சாளரான லியாகத் ஹீசைன் ஆகியோரும் இதில் அடங்குவர். முஸ்லீம் கவிஞரும், நாவலசிரியருமான மீர் மொஷாராப் ஹீசைனின் (1848 - 1912) சிறந்த படைப்புகள் வெளிவந்தது. இக்காலத்திலேயே. [58]

இது முஸ்லீம்களின் இரு கிளைப்படு நிலையின் ஒரு பக்கம். அடுத்த பக்கத்தைப் பார்ப்போம். அதேசமயம் வகுப்பு வாதத்தில் நம்பிக்கை கொண்டிருந்த முஸ்லீம் தலைவர்கள் வங்கப் பிரிவினையை வரவேற்றனர். புதிய மாநிலத்தில் தமக்கு செல்வாக்கும் ஆதிக்கமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணம். ஆனால்



படிப்பகம்

padippakam



தேசிய இயக்கத்தின் தீவிரமும் அடக்குமுறையின் மிருகத்தனமும் அவர்களைத் திடுக்கிடச் செய்தன. முசல்மான் என்ற பத்திரிக்கை இதை நன்கு புலப்படுத்தியது. 1905இல் முஜிபர் ரஹ்மானால் நிறுவப்பட்டது. இப்பத்தரிக்கை. 1906 டிசம்பரில் நடைபெற்ற கல்வி மாநாட்டின்போது டாக்கா நவாப்பின் தலைமையில் முக்கியமான முஸ்லீம் தலைவர்கள் பிரிவினையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றினர். [59]

ஆனால் இஸ்லாமிய சாதாரண மக்கள் இவர்களில் மிகப் பெரும்பான்மையினர் பண்ணை அடிமைகளேயாவர்.

பிரிவினையை ஆதரித்தோர், எதிர்த்தோர் ஆகிய இரு சாராரைப் பற்றியுமே முஸ்லீம் பொதுமக்கள் கவலைப்படவில்லை. வங்கப் பிரிவினை ரத்து செய்யப்பட்டுவிட்டதாக 1911 டிசம்பர் 12ஆம் தேதி தனது டெல்லி தர்பாரின் போது ஐந்தாம் ஜார்ஜ் அறிவிப்பு செய்தபோது முஸ்லீம் பொதுமக்கள் அதை எதிர்த்து ஆரவாரம் எதிலும் ஈடுபடாதது இந்த உண்மையை நன்கு காண்பித்தது. [60]

வங்கப் பிரிவினைக்கு ஆதரவானதாகவும் எதிர்பானதாகவும் இயக்கம் முஸ்லீம்களிடையே நடைபெற்றுக் கொண்டிருந்த காலையில்தான் 1908இல் முஸ்லீம் லீக் உருவானது. 1907இல் சிலவிடங்களில் வகுப்புக் கலவரங்களும் நடைபெற்றன. இதற்கான காரணம் வங்கப் பிரிவினை தொடர்பாக எழுந்த பேதங்களல்ல. முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி வேண்டுமென்ற கோரிக்கையே இதற்கான காரணமாகும்.

கல்வி அல்லது சொத்தின் அடிப்படையில் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படும்போது மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையில் முஸ்லீம்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கும் என்றும், பொதுத் தொகுதிகளில் இந்துக்களே வெற்றி பெறுவார்களென்றும், எனவே முஸ்லீம்களுக்குத் தனித் தொகுதிகள் தரப்பட வேண்டுமென்று ஆகாகான் போன்ற கல்வி மாநாட்டுத் தலைவர்கள் வாதிட்டனர். [61]

1909ஆம் ஆண்டு வெளியான மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் முஸ்லீம்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் தனித் தொகுதிகள் பற்றிய அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. ஆனால், மிதவாத இந்திய (வி) தேசியவாதிகள் தமது வெறுப்பையும், எதிர்ப்பையும், கோபத்தையும் ஆலகண்ட நஞ்சுண்ட சிவன் போல் முழுங்கிக் கொண்டார்கள். சந்தோசத்துடனல்ல வேண்டா வெறுப்பாக, வேண்டும்போது கக்குவதற்காக. இவ்விதம் விழுங்கியது இந்திய நன்மைக்காகவல்ல மேன்மைதாங்கிய ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் நன்மைக்காக. அவர் நாமத்துக்கு நமஸ்தே.

அதே நேரத்தில் திலகர், அரவிந்தர், பாரதி போன்ற தீவிர தேசியவாதிகளோ இச்சீர்த்திருத்தத்தை மூர்க்கமாக எதிர்த்தார்கள். இந்திய மக்களின் நன்மைக்காகவல்ல, காளி, பவானி, நாராயணன் ஆகியோரை அடியொற்றிய சனாதன இந்து தேசிய நன்மைக்காக.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



# புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

அந்த இக்கட்டான வேளையில் இஸ்லாமியர்கள் இவ்விதமானதோர் நிலைப்பாட்டை எடுத்ததற்கான காரணத்தை ஓர் அறிஞன் இவ்விதம் கூறுகிறார். சுதேசி இயக்கமானது கிழக்கு வங்காளத்தில் பெரும்பான்மை மக்களாயிருந்த முஸ்லீம் குடியானவர்களை ஈர்ப்பதற்குத் தவறி விட்டது என்பதை ஒளிவுமறைவின்றி இவர் ஒப்புக் கொண்டார். 1908 பிப்ரவரியில் பப்னாவில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நிகழ்த்திய தனது தலைமையுரையில் இதை ஒப்புக் கொண்ட இவர், இதற்குக் காரணம் இந்து பத்ரலோக் வகுப்பினரே என்றும் சுட்டிக் காட்டினார். இந்த இந்து நிலப்பிரபுக்கள் தமது முஸ்லீம் குடியானவர்களை மட்டுமின்றி, இந்துப் பொதுமக்களைப் பற்றியும் சிறிதும் கவலைப்படுவதில்லை என்று அவர் எடுத்துக் காட்டினார். [62]

இவ்விதம் கூறியது இன்றல்ல. இது 1908இல் கூறப்பட்ட கூற்றாகும். அதே ஆண்டில் மேலும் கூறுகிறார்.

சுதேசி கிளர்ச்சியைப் பற்றி அவர் கீழ்வருமாறு எழுதினார். இந்த நாட்டில் அடித்தளத்தில் கிடக்கும் மக்களது விருப்பங்களையும் நலன்களையும் நாம் இதுவரை லட்சியம் செய்ததே கிடையாது. முஸ்லீம் குடியானவர்களையும் இக்கிளர்ச்சியின் பால் தம்மால் ஈர்க்க முடியாமற்போனதைக் கண்டு மைமன்சிங் போன்றவிடங்களில் நமது சொற்பொழிவாளர்கள் ஆத்திரமுற்றார்கள். நாம் என்ன நல்லது செய்யப் போகிறோம் என்பதைப் பற்றி முஸ்லீம்கள் மட்டுமல்ல, நம் நாட்டுப் பாமர மக்கள் அனைவருமே நம்பிக்கை கொள்ளும் வகையில் நாம் எதுவுமே செய்யவில்லை என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதற்கு நம் பேச்சாளர்கள் தவறிவிட்டார்கள்... இந்த நிலையில், திடீரென்று நாம் சகோதரத்துவம் பேசுவது அவர்களுக்கு விந்தையாகத் தோன்றியிருக்க வேண்டும்... பிறந்த பூமியைத் தாயாக வருணித்து ஆரவாரமான சொற்பொழிவுகளை நாம் நிகழ்த்தி வருகிறோம்..... ஆனால் அந்தத் தாயை இந்த நாட்டில் அவர்கள் காணுமாறு நாம் செய்யவில்லையே (சரியான பாதை). [63]

புதிய கட்சியினரைப் பற்றிய ஓர் ஆழமான விமர்சனமல்லவா? இவர் முஸ்லீமா? கம்யூனிஸ்டா? நாஸ்திகரா? இல்லை இந்துதான். மேலும் தொடர்கிறார்.

சுதேச சமுதாயமானது அந்நிய அரசாங்கத்தோடு ஒத்துழைக்கக் கூடாது என்ற கருத்து முற்போக்கானது என்பதில் ஐயமில்லை. ஆனால் இங்கு சமாஜம் என்று கூறப்படுவது சமய வேறுபாடுகளில்லாமல் அனைத்து மக்களும் சேர்ந்த ஒரு ஐக்கியம் என்றால் அதை நாம் வரவேற்கலாம். அதற்கு மாறாக சமயத்தையும் பழைய பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு வகுப்பினை அது குறிக்குமென்றால், பின்னோக்கிச் சென்று இந்து தேசியவாதம் பேசுவதற்கு அது ஒப்பாகும். வரலாற்று ரீதியாக இதற்குக் காரணங்கள் இருந்திருக்கலாம் ஆயினும் எதிர்காலத்தில் இது தீமையே பயக்கும். [64]

மேற் சொன்னது 1904இல் கூறப்பட்டதாகும். இவர்தான் இந்து தேசியவாதத்தை எதிர்க்கும் ஓர் உண்மையான இந்திய தேசியவாதி. சனாதன இந்துத்துவத்தை



படிப்பகம்

padippakam



எதிர்க்கிறோம் என்று கூறிக்கொண்டு வாக்குவேட்டைக்காகவோ, அல்லது பிறமத நிறுவனங்களின் சலுகைகளைப் பெறுவதற்காகவோ ஏதோ ஒரு மதத்தைச் சார்ந்து நின்று வேசமிட்டுக் கொண்டு ஜனநாயகவாதியாக இந்து மதத்திற்கே எதிராகப் பேராட்டம் தொடுக்கும் ஒரு சந்தர்ப்பவாத நச்சுச் செடியல்ல. சனாதனவாதிகளின் கைகளில் இருந்து இந்து சமயத்தை மீட்கும் போராளியாக குரல் கொடுக்கிறார்.

நமது சமூக நடவடிக்கைகள் கூட ஆங்கிலேயச் சட்டங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டவையாக ஆகிவிட்டன. நான்கு பிரதான சமயங்களை அடிப்படையாகக் கொண்ட நான்கு பெரிய வகுப்புகள் உலகில் உள்ளன. இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோர் இந்தியாவில் ஒருவரையொருவர் கொன்று குவித்துக் கொள்ள மாட்டார்கள். இங்கு ஒருவித இணக்கத்தோடு அவர்கள் வாழ்வர். அந்த இணக்கம் இந்து சமயத்துக்கு மாறானதாக இருக்காது சிறந்த இந்துத் தன்மை கொண்டதாகவே அது இருக்கும். [65]

இந்தியவரலாறு என்பது எந்த ஒரு மத, சாதிய பிரிவுக்கும் சொந்தமானதல்ல என்பதை விளக்கும் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

நாம் கடந்த காலத்தில் இந்திய வரலாறு தீடிரென்று ஒரு இடத்தில் நின்று போயிற்றா? இந்திய வரலாறு என்பது இந்துக்களின் வரலாறு மட்டுமே என்று ஆண்டவன் அறிவித்துள்ளாரா?. [66]

இவ்வளவற்றையும் கூறியதோடு நில்லாமல் இறுதியாக இந்தியாவின் முகட்டில் ஏறி நின்று கொண்டு கீழ்க்கண்டவாறு மார்தட்டும் ரவீந்திரநாத் தாகூரின் கூற்றை நாமும் கேட்போம்.

இன்று எல்லாவற்றுக்கும் மேலாக நான் ஒரு இந்தியனாகி விட்டேன். இந்து, முஸ்லீம், கிறிஸ்தவன் ஆகிய வகுப்புப் பூசல்கள் என்னுள் இப்பொழுது இல்லை. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சாதியும் இன்று என்சாதி, ஒவ்வொருவரது உணவும் என் உணவு — பொய் வண்ணங்களில் என் நாட்டை அலங்கரிக்கும் வீணான முயற்சிகள் அனைத்திலிருந்தும் கடைசியில் நான் தப்பித்துக் கொண்டேன். [67]

இக்கூற்றின் மனிதநேய ஆழத்தையும் அரசியல் முற்போக்கு உள்ளடக்கத்தையும் பிறக்ஞைபூர்வமாகப் புரிந்துக் கொள்ளக் கூடிய பண்பு நம்மிடம் உள்ளதா என்பது சந்தேகமே.

தேசியம் என்பது ஒரு மதம், தேசியம் என்பது இந்து சனாதனம் என்று முழங்கிய அரவிந்தருக்கும், அவரின் அரசியல் சகாவான திலகருக்கும், வேதாந்த மாணவனான பாரதிக்கும் இப்பண்புகள் இருக்கவில்லை என்பது நிச்சயமானது. அதேபோல் குறுக்கு வளியை நாடிய முஸ்லீம் லீகின் முன்னோடி அமைப்பான கல்வி மாநாட்டின் தலைவர் டாக்கா நவாப்பிற்கும் அவரின் வழித் தோன்றல்களாகிய அகா கான் போன்றவர்களுக்கும்,



படிப்பகம்

padippakam



கூட இதைப் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவ நிலை இருந்திருக்காது. ஒடுக்கப்பட்ட பிரிவினரின் மாறாமரபியல் வாதம் (அடிப்படை வாதம்) தற்காப்பு நோக்கங் கொண்டது என்பது உண்மைதான். ஆனால் அது முற்போக்கானதல்ல.

நரகவாதிகளை துரத்திவிட்டு சைத்தானைக் குடியிருத்துவதா? சாத்தானைக் குடியிருத்துவதா என்பதல்ல பிரச்சனை. தேவர்களும், கிறிஸ்துகளும், நபிகளும் இன்னும் பிறரும் ஒன்றாக சமத்துவமாக குடியிருக்கும் சொர்க்கபுரியை (மதசார்பின்மை) உருவாக்குவது என்பதே பிரச்சனை.

## 19ஆம் நூற்றாண்டு இஸ்லாமிய ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள்

1857 இல் சிப்பாய் கிளர்ச்சியாக வெளிப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சியில் இஸ்லாமியர்கள் பெருமளவில் பங்குபற்றினார்கள். இஸ்லாமியர்களுக்கு எதிராக மிகப்பெரும் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. பல இஸ்லாமிய தலைவர்களுக்கு ஆயுட்கால தண்டனையும், மரணதண்டனையும் வழங்கப்பட்டன. இஸ்லாமியர்களும் இந்துக்களும் குறிப்பாக வங்காள பிராமணர்களும் சகோதரர்களாக கைகோர்த்து நின்று போராடினார்கள், தியாகஞ் செய்தார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். "சிப்பாய்க் கலகத்தின் காரணங்கள்" எனும் தலைப்பில் ஒரு உருதுமொழி நூல் வெளிவந்ததையும், அதை எழுதியவர் சையத் அகமத் என்பவர் என்பதையும், நினைவில் கொள்வோம். இது இந்தியர்கள் பக்கம் நின்று கொண்டு பிரித்தானியருக்கு எதிராக எழுதப்பட்ட நூலாகும்.

இதே சையத் அகமதுகான் காங்கிரஸ் உருவானபோது அதற்குப் போட்டியாக நாட்டுப் பற்றுச் சங்கம் (Patniotic Association) அமைக்கிறார். இவரே 1874இல் அலிகர் கல்லூரியை அமைத்தவராகும். 1867இல் "இந்துமேளா" ஆரம்பமானது. இந்த வருடாந்த மேளாக்கள், சுமார் 10 வருடங்களாக கல்கத்தா நகரில் பெரும் ஆர்ப்பாட்டமாக கொண்டாடப்பட்டு வந்தன. இது இந்திய தேசியத்தின் விளைநிலமாக இருந்தது. தேசபக்திப் பாடல்கள் நிறைய எழுதப்பட்டன. இதில் மட்டுமின்றி பங்கிம் சந்தரின் நூல்கள் உட்பட அன்றைய இலக்கியம் முழுவதிலுமே இந்துமேளா முத்திரையின் செல்வாக்கினைத் தெளிவாகப் பார்க்கலாம்.[68]

ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் இந்து வைதீகத்திற்கு ஒரு வீரமிக்க பங்கு இருப்பதுபோல் முகம்மதிய வைதீகத்திற்கும் ஒரு பங்கு உண்டு. அதுதான் வகாபி இயக்கமாகும். இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமாக ஐரோப்பாவில் தோன்றிய வகாபிசம் அரசியலிலும் முகதியரது கிளர்ச்சி இயக்கமாக உருவெடுத்தது ஆரிய சமாஜத்தைப் போல். ஆரிய சமாஜத்தில் ஒரு முற்போக்கு அம்சத்தையும் காணும் வரலாற்றாய்வாளர்களும், அரசியல்வாதிகளும் வகாபிசத்தில் அதைக் காணத் தவறுவது ஏன்? ராம்மோகன் காலத்தில் இவ்வியக்கம் இந்தியாவுக்கும் அறிமுகமானது. பட்னா நகரம் இவ்வியக்கத்தின் முக்கிய மையமாக இருந்தது. வங்காளத்தின் ஏழை முஸ்லீம்களிடையேயும் இதற்கு ஆதரவு இருந்தது. விவசாயக் கிளர்ச்சியான அவுரிக் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியது ஒரு வகாபியே. அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத்



படிப்பகம்

padippakam



தூண்டிவிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அவரது மகன் அமீருதீன் நாடுகடத்தப்பட்டார். பிரித்தானியரால் நாடுகடத்தப்பட்ட முதல் அரசியல் கைதிகள் வகாபிகளேயாகும். 1871 செப்டம்பர் 20ஆம் தேதி கல்கத்தா தலைமை நீதிபதி கொலை செய்யப்பட்டார். இக்கொலைக்காக அப்துல்லா என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அவரது உடலைப் புதைப்பதற்கு அஞ்சிய வெள்ளையர் அரசாங்கம் அவரது உடலை எரித்தது.

இவ்விதமான நிகழ்வுகள் பற்பல.

1919இல் அரவிந்தர் கூறுகிறார். ஹிந்து மதம் பிடிவாதக் கொள்கையற்ற ஒன்று அது இஸ்லாமிய கிறிஸ்துவ மக்களையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டிருக்கும், அவர்கள் அதைப் பொறுத்துக் கொண்டிருந்தால்.[69] -- அரவிந்தர் மே 1919

அரவிந்தர் இவ்விதம் கூற, புதிய கட்சியினர் பலரும் அதற்கு ஆமாம் போட அம்பேத்கர் இப்பிரச்சினையை இவர்களுக்கு எதிராக நோக்குகிறார்.

இந்துமதக் கருத்தியல் என்பது, பிற மதத்தினரின் கருத்துக்களைத் தூக்கி எறிவதாகவும், பிற மனிதர்களின் வளர்ச்சியை, மகிழ்ச்சியை காணச் சகியாத ஒன்றாகவும் நடைமுறையில் அமைந்துள்ளது. மற்றவர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வகையில் அடிப்படைக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இந்து மதம், இந்தக் கருத்துக்களை ஆதரிக்கும் அமைப்புகள், அரசுகள் இருக்கும் வரை அமைதி என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கும்.[70]

புதிய கட்சியின் எழுச்சியானது, ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஆக்கபூர்வமான பல பங்களிப்புகள் வழங்கியிருந்தாலும், இந்து மதத்தைக் கடைந்து அதில் இருந்து சனாதனவாதம் என்னும் கடும் விசத்தையும் திரட்டி எடுத்தது. இந்த சனாதனவாதம் ஒரு புறத்தில் தீவிர இந்துத்துவ தேசியவாதத்தையும், மறுபுறத்தில் தீவிர இந்துமத எதிர்ப்பு சித்தாந்தங்களையும் தோற்றுவித்தது. இதனால் காலனிய எதிர்ப்புப் போராட்டம் பின்னடைவுக்குள்ளானது. புதிய கட்சியினர் தமது தலைகளில் தாமே மண்ணை வாரிக் கொட்டிக் கொண்டவர்களானார்கள்.

*இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே உள்ள பிளவோடு ஒப்பிடும் போது இந்து - முஸ்லீம் பிளவு, இந்து - சீக்கியர் பிளவு, இந்து - கிறித்துவர் பிளவு ஆகியவை பிளவே இல்லை எனத் தாழ்த்தப்பட்டவர்கள் வாதிட்டார்கள். இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையிலான பிளவு மத ரீதியானது. சமூக ரீதியானது அல்ல. இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே உள்ள பிளவு சமூக ரீதியானதும் மத ரீதியானதும் ஆகும். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலான உறவு எசமான் - அடிமை உறவு இல்லை. ஆனால் மறுபுறத்திலோ இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையிலான பிளவு தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியல் அழிவைத் தருவதாகவே இருக்கும். காரணம் இவர்கள் இருவருக்கும் இடையில் உள்ள உறவு எசமான் அடிமை உறவாகவே இருந்து வருகிறது.* (அண்ணல் அம்பேத்கார், தாழ்த்தப்பட்டவர்கள் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் பக்கம் 23)

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



## புதிய கட்சியும் - கிறிஸ்துவ மத நிறுவனங்களும்

புதிய கட்சியும் - சிறுபான்மைக் கிறிஸ்தவர்களும் எனத் தலைப்பிட்டால் என்ன? இல்லை, அது தப்பான தலைப்பாகிவிடும். யார் சிறுபான்மையினர்? கிறிஸ்தவர்களா? இஸ்லாமியர்களா? சீக்கியர்களா? சைவர்களா? சமணர்களா? பௌத்தர்களா? குல தெய்வ வழிபாடுள்ள ஆதி மக்களா? இந்துக்களா? இந்திய குடிசனக்கணக்கெடுப்பின் எண்ணிக்கையளவில் இவர்களில் யாருமே பெரும்பான்மையினரல்ல. அதாவது எந்தவொரு தனி மதப்பிரிவும் 50 விழுக்காட்டிற்கு அதிகமானவர்களல்ல. அரசியல் காரணுங்களுக்காக மிக துல்லியமாகவும், தனித்துவமாகவும், அனைத்துலக மட்டத்தில் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்களுமான கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் தவிர்த்து மீதமுள்ளவர்கள் எல்லோரையும் ஒரே கூடையில் போட்டு அரசியல் சந்தையில் இந்துக்கள் என்று வியாபாரம் செய்யலாம், பேரம் பேசலாம். அது அரசியல். ஆனால் மதம் என்பதற்குரிய வரைவு இலக்கணப்படி பார்த்தால் அக்கூடை அறுபட்டால் அவர்கள் சிதறுண்ட நெல்லிக்கனிபோல் திக்குத்திக்காக சிதறும் நிலையிலேயே உள்ளார்கள். ஆகவே மதம் என்ற முறையில் பகுப்பதானால் எந்த மதமும் பெரும்பான்மை மதமல்ல. தனித்தனியாக எடுத்தால் ஒவ்வொன்றும் 50 விழுக்காட்டிற்கு உட்பட்டவைதான். பெரும்பான்மை இல்லாவிட்டால் சிறுபான்மை ஏது? ஆகவே அவ்வார்த்தையைத் தவிர்ப்போம். பொருத்தமில்லாதது என்பதற்காகவல்ல, தவறானது என்பதற்காக.

தனது இறுதி காலத்தில் சாதிகளுக்கும், மதங்களுக்கும் அப்பாற்பட்ட மனிதராக வாழ்ந்து, ஏக மதம் என்ற தனது இலட்சியத்திற்காகப் போராடிய நாராயண குரு தனது ஏகமத கோட்பாட்டை ஆதரித்து முன்வைத்த தர்க்கத்தை இவ்விடத்தில் நோக்குவது அதிக பயனளிக்கும்.

இந்து மதமென்ற ஒரு மதமே இல்லையல்லவா. இந்துஸ்தானத்தில் வாழ்பவர்களை இந்துக்கள் என்று வெளிநாட்டவர்கள் கூறுகின்றனர். இந்துஸ்தானத்தில் வாழ்பவர்களின் மதம் இந்து மதம் என்றால், இந்துஸ்தானத்தில் இப்பொழுது வாழ்கின்ற கிறித்தவர்கள், முஸ்லீம்களுடைய மதங்களும் இந்தமதம்தான். அவ்வாறு எவரும் சொல்வதுமில்லை, சம்மதிப்பதுமில்லை. இப்பொழுது இந்து மதம் என்பது கிறித்தவ மதம், முஸ்லிம் மதம் முதலிய இந்துஸ்தானத்திற்கு வெளியிலிருந்து வந்த மதங்களைத் தவிர இந்துஸ்தானத்திலேயே தோன்றிய மதங்களுக்குரிய பொதுப் பெயராகும். அதனாலேயே புத்த மதம், சமண மதம் முதலியவற்றையும் இந்து மதம்தான் என்று சிலர் கூறுகின்றனர். வைதீக மதம், பவுராணிக மதம், சாங்கிய மதம், வைசேஷிக மதம், விசிஷ்டாத்வைத மதம், சைவ மதம், சாக்தேய மதம், வைணவ மதம் என தோற்றத்தில் முரண்பாடாக இருக்கின்ற பல மதங்களையும் சேர்த்து இந்து மதம் என்று சொல்வது விவேகமானதென்றால் மனித சாதி அனைத்துக்கும் அந்தந்த நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு ஆச்சாரியார்கள் முரண்பாடாக உபதேசம் செய்துள்ள எல்லா மதங்களையும் சேர்த்து ஒரே லட்சியத்துடன் ஏக மதம் (ஒரு மதம்) என்று சொல்வதை எதற்காக விவேகமின்மை என்று அய்யமுறுகின்றீர்கள்? [71]

புதிய கட்சியும் கிறிஸ்தவர்களும் என்று சொல்வதற்குப் பதிலாக எதற்காக புதிய



படிப்பகம்

padippakam



கட்சியும் கிறிஸ்தவ நிறுவனங்களும் என்று கூற வேண்டும்? இது அடுத்த கேள்வி. ஒரு மதத்தைப் பின்பற்றும் மக்கள் தமது மத நம்பிக்கைகளையும் மத, சடங்குகளையும், வெளிப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் தம்மை ஓர் அமைப்பாக மாற்றிக் கொள்வது இயல்பானது. இவ்விதம் இயல்பாகவே உருவாகும் மதநிறுவனங்கள் சமூகத்தின் அரசியல் அதிகார அமைப்புகளில் ஒன்றாக மாறும் வரை அவை வெறுமனே மத நிறுவனங்கள் மாத்திரமேயாகும். தோற்றத்தில் மாத்திரமல்ல உண்மையிலுமே அவை மத நிறுவனங்களே. அவ்விதமான ஒரு நிலையில் மத நிறுவனங்கள் என்று கூறுவதைவிட மதத்தவர்கள் என்று கூறுவதே பொருத்தமானது ஏன் எனில் அவ்வித மத நிறுவனங்கள் மக்களின் ஆளுமைக்குட்பட்ட தொன்றாகவே இருக்கும். மக்களின் முடிவுகள்தான் அம்மத நிறுவனங்களின் முடிவுகளாகவும் இருக்கும்.

ஆனால் மத நிறுவனங்கள் சமுதாயத்தின் அதிகார அடுக்குகளில் ஒன்றாக ஆகும்போது அவை மேட்டுக் குடியினரின் கைக் கருவிகளாகின்றன. இவை இரண்டும் படிப்படியாக ஒன்றை ஒன்று சார்ந்து நடை பெறுகின்றன,ஒன்று முந்தியும் மற்றையது பிந்தியும் என நடைபெறுவதில்லை. இவ்வித மத நிறுவனங்கள் மதத்துடன் கலந்த அரசியல் நிறுவனங்களாகி விடுகின்றன. அவை நிலமையைப் பொறுத்து நேரடி அரசியலிலும் ஈடுபடுகின்றன, மறைமுக அரசியலிலும் ஈடுபடுகின்றன. புதிய கட்சியின் தோற்றத்திற்கு காரணமாக இருந்த இந்துமத நிறுவனங்களான பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம், தியோபிசிக்கல் சங்கம், இராமகிருஷ்ண மிஷன், வைதீக சங்காரசாரிகள் மடம் ஆகியன அரசியல் ஈடுபாடுடையனவேயாகும். இவை சமூகத்தின் அதிகார அடுக்குகளில் தம்மையும் இருத்திக் கொண்டன. சில வர்க்கங்களின் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான போட்டியில் இம்மதநிறுவனங்களால் தமது எல்லைகளைக் கடக்க முடியாத நிலை உருவாகும் போது அதன் நீட்சியாக உருவாகியது தான் புதிய கட்சியாகும். அதாவது தீவிர இந்துசனாதன தேசியவாதமாகும். அடுத்த பக்கத்தில் கிறிஸ்தவ மத நிறுவனங்களும் அதே போன்று காலனியல் இந்தியாவின் அதிகார மையங்களில் ஒன்றாகவே இருந்தன. காலனியல் இந்தியாவின் அதிகார மையங்களில் ஒன்றான ஐரோப்பிய சார்பு மிதவாத (வி) தேசியத்தை ஊக்கப்படுத்துவதில் கிறிஸ்தவ மதநிறுனங்களும் பிரதான பங்கு வகித்தன. முன்கூறப்பட்ட இந்துமத நிறுவனங்களின் நீட்சியாக புதிய கட்சி இருந்தது போல் கிறிஸ்தவ மத நிறுவனங்களின் நீட்சியாக மிதவாத (வி) தேசியம் இருக்கவில்லை. ஆனால் இவர்களின் மேல் கிறிஸ்தவ மத நிறுவனங்களின் செல்வாக்கு மிகக் கணிசமானளவுக்கு இருந்தது. இதனால் இந்து தேசிய தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே இருந்த பகைமை, இந்து தேசிய தீவிரவாதிகளுக்கும் கிறிஸ்தவ மத நிறுவனங்களுக்கும் இடையேயான பகைமையாகவும் செயற்பட்டது. இந்திய சமூக அமைப்பில் இந்து சனாதன பண்பாடு பிற பண்பாடுகள் மீதான தனது மேலாண்மைக்காகப் போராடிக் கொண்டிருந்தது. உலக அரங்கிலோ பிரித்தானிய காலனிய பண்பாடு தனது மேலாதிக்கத்திற்காக இந்தியா உட்பட உலகெங்கும் பண்பாட்டுத் திணிப்புகளை மேற்கொண்டுவந்தது. இதனால் இவ்விரு பண்பாடுகளுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலை நிலவி வந்தது. இப் பண்பாட்டு மேலாதிக்கப் பேணுகை கிறிஸ்துவ நிறுவனங்களின் ஊடாகவும் நடைபெற்றது. இதனால், சனாதன பண்பாட்டுத் தேசியத்தையே தமது தேசியத்தின்



படிப்பகம்

padippakam

 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

மூலக் கூறுகளாகக் கொண்ட புதிய கட்சிக்கும், கிறிஸ்தவ மத நிறுவனங்களுக்கும் இடையே ஒரு முறுகல் போக்கு நிலவியதில் ஆச்சரியம் எதுவும் இருக்க முடியாது.

அப்போது நிலவிய முறுகல் நிலையை அக்கால தலைவர்களின் வாயாலேயே கேட்போம்.

புதுதில்லியில் 1947ல் நடைபெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 112 வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது இராமகிருஷ்ணரும் தற்கால இந்தியாவின் பிரச்சனைகளும் என்ற தலைப்பிலான இராஜாஜியின் ஆங்கில மொழிப் பேச்சின் சில பகுதிகள். (பெ.சு. மணி. இராகிருஷ்ண இயக்கமும் தமிழ்நாடும் பக்கம் 83)

இராமரையும் கிருஷ்ணரையும் ஏற்பதற்காக கிறிஸ்துவின் கீழ்ப் பாடங்கள் கேட்கச் செய்ய வேண்டியிருந்தது.

இவ்விசயங்களை நான் நகைச்சுவையோடு சொன்ன போதிலும் அவர்கள் செய்தது ஒரு பெரும் செயலே. அக்காலங்களுக்கு அது உகந்ததாய் இருந்தது.

கிறிஸ்தவ மதமும், நவீன பௌதீக சாஸ்திரமும், நாஸ்தீகமும், ஹிந்து மதத்தை எதிர்க்க வந்தன. ஆகையால் இம் முறைகளைக் கையாள வேண்டியது அவசியமாயிற்று.

ஆனால் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஒப்பற்ற பெருமையானது அவர் நூற்றுக்கு நூறுவிகிதம் ஹிந்துவாக இருந்தார். நம் மதத்தைக் காக்க அந்த இரவல் முறையை அவர் கைக் கொள்ளாமலேயே குறைவின்றி வெற்றி பெற்றார்.

19வது நூற்றாண்டில் ஹிந்து மதத்தின் உண்மைகளை விளக்கப் பிற மதங்களின் உதவியை நாட வேண்டியிருந்தது. ஒரு உதாரணம் சொன்னால் போதும், பிரம்ம சமாஜம் ஹிந்து மதத்தைக் கிறிஸ்தவக் குப்பியில் ஊற்றி மக்கள் அதை நல்ல மருந்தாக ஏற்று அருந்தச் செய்தது.

<u>விவேகானந்தரின் வாய்மொழி</u> "சென்னை நகரத்தில் இந்து பத்திரிக்கை நிருபர் கேட்ட கேள்விக்கு விடையளித்த சுவாமிஜி சிகாகோ வெற்றியைக் குறிப்பிட்டார்.

புறச் சமயக் கண்காட்சியாக அமைதற் பொருட்டே அந்த பல்சமயப் பெருமன்றம் கூட்டப்பட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் பார்வைக்குக் கிறிஸ்துவ சமயக் காட்சி போல் தோன்றச் செய்தனர்.

கிறிஸ்தவர்களின் கருத்துக் கோணத்தில் இருந்து பார்த்தாலும், இது அவர்களுக்குத் தோல்வியென்றே கூற வேண்டும். ஏனெனில் பாரிஸ் நகரில் இதுபோன்ற மன்றம் ஒன்று கூட்ட வேண்டும் என்ற பேச்செழுந்தபோது பல்சமய பெருமன்றத்தைக் கூட்டிய ரோமன் கத்தோலிக்கர்களே அதை எதிர்த்துப் பேசினார்கள்".

*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam



விவேகானந்தரின் எழுத்து சுவிட்சர்லாந்தில் இருந்து 8.8.1896ல் அழகிய சிங்கப் பெருமாளுக்கு எழுதப்பட்ட கடிதத்தில்..... கிறிஸ்தவ பாதிரிமார்களோடு, தியோபிசிக்கல் சங்கத்தாரும் சேர்ந்துக் கொண்டு அமெரிக்காவில் தமக்குத் தொல்லை கொடுத்தனர் என்பதை விவேகானந்தர் விளக்கிக் கூறினார். அமெரிக்காவில் பாதிரிமார்கள் விளைவித்த இன்னல்களை விளக்கும்போது அவர் கூறுகிறார்.

அன்னிய நாட்டிலே நான் ஒரு எளியவனாய்த் துணையற்றிருந்த காலத்தில், இவர்கள் நகரத்துக்கு நகரம் சென்று என்னைப்பற்றி, இழிவாகத் தூற்றி வந்தனர்.

நான் சென்று தங்கிய ஒவ்வொரு மனிதனையும் என்னிடம் விரோதம் கொள்ளுமாறு எல்லா வழிகளிலும் முயன்றனர். என்னை வேறு வழியின்றி பட்டினியாக்கவும் செய்தனர் என்றால் வேறென்ன வேண்டும் (பக்கம் 73).

தென்னிந்திய தீவிரவாதத்தின் கருத்துநிலை தலைவர் விவேகானந்தரும், அவரது சீடர்களும்தான் என்பதே வரலாற்றாய்வாளர்களின் கருத்தாக உள்ளது. பாரதியாரும் இதை ஒத்துக் கொள்கிறார்.

"அன்று (சிக்காக்கோ நகர பல் சமயப் பெருமன்றம்) மீண்டும் ஒருமுறை இந்துமதம் இன்னது என்பது வரையறுக்கப்பட்டது. அன்று அதே நாளில் இந்திய தேசியத்தின் விதைகள் தூவப்பட்டன" (பால பாரதா Vol 1908, P. 150 மேற்கோள்காட்டப்பட்டது. பெ.சு.மணி, இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும்) புதிய கட்சியும் கிறிஸ்தவர்களும் என்று தலைப்பிடப்படாதது சரிதான் என்பது ஏற்றுக் கொள்ளப்படும் என எண்ணுகிறேன். ஏன் எனில் கிறிஸ்தவர்களில் பெரும்பாலோருக்கு மேட்டுக் குடியினருடனோ சமுதாயத்தின் அதிகார பீடத்துடனோ எந்தவித தொடர்பும் கற்பனையில் கூட இருந்திருக்க வாய்ப்பில்லை. இவ்வித கற்பனையை ஊட்டக்கூடிய இன்றைய சினிமாக்கள் போன்ற கலைப்படைப்புகள் அன்று இருந்ததாகத் தெரியவில்லை. கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையினர் ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவினரேயாகும். அவர்கள் மதம் மாறியது உயர் வர்க்கமாக ஆவதற்காகவல்ல. தீண்டாமை என்னும் சமூக விலங்கை உடைத்தெறிவதற்கேயாகும். தாம் யார், தமது எதிர்காலம் என்ன என்பதை, தலையை நிமிர்த்திப் பார்க்க கூட முடியாதளவிற்கு அவர்கள் விலங்கிடப்பட்டிருந்தார்கள். அதை உடைத்தெறிய அவர்கள் நாடிய ஓர் குறுக்குவளிதான் கிறிஸ்தவ மதமாற்றமாகும். அது ஒடுக்கப்பட்டவர்களின் அரசியல் தந்திர உத்தி. மற்றும்படி வேறு எந்த அரசியலும் அவர்களுக்குத் தெரியாது. இத் தந்திர உத்தியைப் பின்பற்றாது நேரடியாக தீண்டாமையை எதிர்த்துப் போராடிய மக்களும் உண்டு. இந்த சூழலில் புதிய கட்சியையும் கிறிஸ்தவர்களையும் இரு வெவ்வேறு அணிகளாகக் கொண்டு இம்மோதல் வரலாறை ஆய்வு செய்ய முடியாது. புதிய கட்சியினரையும் கிறிஸ்தவ நிறுவனங்களையும் இரு வெவ்வேறு அணியினராகக் கொண்டுதான் இம்மோதல் வரலாற்றை ஆய்வு செய்ய முடியும். இவ் ஆய்வின் "விவேகானந்தரின் மூன்று அச்சங்கள்" என்ற 3 வது பகுதியில் இவ்வரலாறு விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றது.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



## சான்றாதரங்கள்


1. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம் 63
2. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம் 33
3. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம் 45,46
4. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம் 51.
5. Dilak & Kokulae, Page 69 Revolution & Reform in the making of Mordern India. STANLEY A. WOLPERT
6. ஸ்ராலின்குணசேகரன், "விடுதலை வேள்வியில் தமிழகம்" பாகம் I
7. ரகுநாதன், "பாரதி புதையல்" பக்கம் 120 - 121
8. ஜாய் ஞானதாசன், "ஒரு மறைக்கப்பட்ட வரலாறு" பக்கம் 22
9. மேற்கோள் காட்டப்பட்டது. புரட்சிகர இளைஞர் முன்னணி, "காந்தியும் காங்கிரசின் துரோக வரலாறும்". பக்கம் 28.
10. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம் 188, 189.
11. Dilak & Kokulae, Revolution & Reform in the making of Mordern India. STANLEY A. WOLPERT
12. ibid
13. ibid
14. ibid Page - 73
15. ibid
16. காஞ்சாஅய்லய்யா, "நான் ஏன் இந்துவல்ல". பக்கம் 183
17. Quated from ' Every body's book of true Religion' Dilak & Kokulae.
18. பெ.சு.மணி, "பிரம்மசமாஜம்".
19. அம்பேத்கார்பிரியன், "பகுத்தறிவுப்பாட்டன் பண்டிதமணி. க. அசோகதாசர்"
20. அதே நூல் பக்கம் 77
21. அதே நூல்
22. அதே நூல் பக்கம் 22
23. Quated Navajala, 'SRI ARUOBINDU' Page - 23.
24. மேற்கோள் காட்டப்பட்டது. பெ. சு. மணி, "வ.வே.சு. ஐயர். அரசியல். இலக்கியப் பணிகள்".
25. அதே நூல்
26. அதே நூல்
27. காங்கிரஸ் மகா சபை சரித்திரம் 2ம்பாகம் மேற்கோள் காட்டப்பட்டது. பெ.சு. மணி, "வ.வே.சு. ஐயர் அரசியல் இலக்கியப்பணிகள்".
28. 26.09.1908 "தமிழன்" இதழ்
29. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம்57
30. T.M. பார்த்தசாரதி, "Dr. T.M.நாயர்"
31. "காலச்சுவடு இதழ்" 30 ஜனவரி - பிப்ரவரி 2002
32. நாவலர் இரா. நெடுஞ்செழியன், "திராவிட இயக்க வரலாறு".
33. அதே நூல்
34. அதே நூல்
35. ஜாய் ஞானதாசன், "ஒரு மறைக்கப்பட்ட வரலாறு" பக் 25.


*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam



36. அர்த்யால் பென்ஸ், "வீரத்தியாகிகள் முழக்கம்" பக் 192
37. காஞ்சா அய்லய்யா, "நான் ஏன் இந்துவல்ல" பக் 89.
38. கூ.வ. எழிலரசு, "நீதிக்கட்சி தலைவர் T.M. நாயர்"
39. மேற்கோள் காட்டப்பட்டது. பெ. சு. மணி, "காங்கிரஸ் வினாவிடை, மூலமும் ஆய்வும்"
40. அதே நூல்
41. அதே நூல்
42. நா. இரவீந்திரன், "இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்"
43. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கார், ஆங்கில நூல் தொகுப்பு 8. பக்கம் 247 மேற்கொள் காட்டப்பட்டது. "தலித் முரசு" மே 2002
44. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம் 33.
45. அதே நூல் பக்கம் 109
46. அதே நூல் பக்கம் 138
47. அதே நூல் பக்கம் 32
48. அதே நூல் பக்கம் 51
49. அதே நூல் பக்கம் 55
50. அதே நூல் பக்கம் 55
51. அதே நூல் பக்கம் 60
52. அதே நூல் பக்கம் 67
53. பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கார், ஆங்கில நூல் தொகுப்பு 2, பக்கம் 407 மேற்கொள் காட்டப்பட்டது. "தலித் முரசு" ஏப்ரல் 2002
54. சிறீ அரவிந்தர், "பாரதத்தின் மறுபிறப்பு" பக்கம் 60
55. அதே நூல் பக்கம் 78
56. அதே நூல் பக்கம் 79
57. சுகோபன் சர்க்கார், வங்காள மறுமலர்ச்சி, MCBA பக் 82
58. அதே நூல்
59. அதே நூல் பக்கம் 88
60. அதே நூல் பக்கம் 89
61. அதே நூல் பக்கம் 88
62. அதே நூல் பக்கம் 88,89
63. அதே நூல் பக்கம் 222, 223
64. அதே நூல் பக்கம் 215
65. அதே நூல் பக்கம் 215,216
66. அதே நூல் பக்கம் 220
67. அதே நூல் பக்கம் 220
68. அதே நூல் பக்கம் 63
69. சிறி அரவிந்தர், பாரதத்தின் மறுபிறப்பு பக்கம் 154
70. டாக்டர் அம்பேத்கார், தீண்டப்படாதவர்கள் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
71. ஸ்ரீ நாராயணகுரு, பக் 293 294 மேற்கொள் காட்டப்பட்டது ஜோசப் இடமருகு இவர்தான் நாராயண குரு.

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam



## *பிண்ணிணைப்பு 1*

1988ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் தேதி காங்கிரஸின் நிலைக்கமிட்டி செயலாளருக்கு இந்திய தேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் A.O. ஹியும் அவர்களால் எழுதப்பட்ட கடிதம். *மிகக் கண்டிப்பாக தனியாருக்கானதும் இரகசியமானதுமாகும்.*

காங்கிரஸ் நிலைக்கமிட்டி செயலாளருக்கு, ஐயா!

எமது கடந்த கௌரவ தலைவர் பலதரத்திலுமான முகமதிய கனவான்களுடன் பேசிப்பார்த்ததில் காங்கிரசில் இருந்து விலகி நிற்பவர்களின் மனதில் காங்கிரஸையிட்டு பல சந்தேகங்கள் உறைந்திருப்பதை இனங்கண்டுள்ளார். இந்துக்கள் எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையானவர்களாக உள்ளதனால், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் முகமதிய நலன்களுக்கு நேரடியாகவே எதிரான சில தீர்மானங்களை காங்கிரஸில் திணிக்கவும் நடைமுறைப்படுத்தவும் முடியும் என்பதே அந்த சந்தேகமாகும்.

இந்துக்கள் எக்காரணம் கொண்டும் இவ்விதம் நடந்து கொள்ளமாட்டார்கள். அவர்கள் முகமதியர்களை நமது சொந்த தேச சகோதர குடிகளாகவே நோக்குகின்றனர். முகமதியர்களின் நல்வாழ்வையும், மகிழ்ச்சியையும் திருப்தியையும் தமது சொந்த நல்வாழ்வாகவும், மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவுமே இந்துக்கள் நோக்குகிறார்கள். என்பதில் நான் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளேனோ எவ்வளவு உறுதியாக உள்ளேனோ இதே போன்று எமது முன்னாள் தலைவரும் அவ்வளவு நம்பிக்கையும் உறுதியும் வைத்துள்ளார் என்பது எனக்கு நன்கு தெரியும். யூரோ ஏசியன்ஸ் மற்றும் ஐரோப்பியர்களைப் பொறுத்து குறிப்பாகச் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் முகமதியர்களை பாரபட்சமின்றியே நோக்குகின்றனர். பசுக் கொலையை ஒரு குற்றச் செயலாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற பிரேரணையை காங்கிரஸில் முன்வைத்து காங்கிரஸை தனது பக்கம் இயக்க முற்பட்ட அந்த மதிப்புக்குரிய பெரியார் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்தப் பிரேரணை சபையில் முன்வைப்பது தடைபட்டதையும், எமது தலைவர் ஒரு முகமதியராக இருந்ததையும் இன்னமும் அறியாத பல முகமதியர்கள் இருக்கவே செய்கிறார்கள் என்பதற்காக நான் கவலைப்படுகிறேன்.

இவ்விவகாரங்கள் தொடர்பாக ஒரு திட்டவட்டமான ஒழுக்கக் கோர்வை ஒன்று உருவாக்கப்படுவது மிகமிக அவசியமானது என்பது தெளிவாகிறது. இதன் மூலமே இவ்வித தப்அபிப்பிராயங்கள் நடைமுறைச் சாத்தியமற்றவை என்பதை உத்திரவாதப்படுத்த முடியும். இதன் காரணத்தால் நான் இதற்கு இணைவான ஒழுங்கு விதியை வரைந்தேன். அதை எமது முன்னால் தலைவரின் கவனத்திற்கு சமர்ப்பித்தேன். இதுவரை காலமும் எம்மில் (காங்கிரஸ்) இருந்து தூர விலகியிருந்த முகமதிய சகோதரர்களின் பெரும் பிரிவினர் அடுத்த வருடத்தில் எம்முடன் இணையக் கூடிய முறையில் முழுமையான நம்பிக்கையாளர்களாக மாற்றுவதை நடைமுறைச் சாத்தியமாக்குவதே இதன் நோக்கம் என்பதே எம் இருவரினதும் நோக்கமாக இருந்தது.



படிப்பகம்

padippakam



இந்த ஒழுங்கு விதி பதுார்தீன் தியாப்ஜியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவர் இதை பல முகம்மதியர்களுக்கு தெளிவுபடுத்தினார். இந்த விதி முறையாக அமுல்படுத்தப்படுமானால் காங்கிரஸ் இயக்கத்துடன் இதய பூர்வமாக இணைவதில் மீதமாயிருக்கும் அனைத்துத் தடைகளையும் முழுமையாகவே நீக்குவதற்கு உதவும் எனவும் விளங்க வைத்தார்.

இந்த ஒழுங்கு விதியை நான் இப்போது உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன். இந்த விதியை நடைமுறையில் தொடர்வதற்கானதோர் விதியை அடுத்த காங்கிரஸில் முன்வைப்பதற்கு தங்கள் கமிட்டி தயாராக உள்ளது. என உத்தரவாதம் அளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன். ஒழுங்கு விதியின் பிற அம்சங்கள் முறையாக தீர்மானிக்கப்பட்ட பின்னர் அதை வெளிப்படுத்தும் சரியான வார்த்தைகள் என்னவென்பதை பின்னர் தீர்மானிக்கப்படலாம். எமது அனைத்து நிலைக் கமிட்டிகளில் இருந்தும் கிடைக்கப் பெறும் இவ்வித உத்திரவாதங்களை நான் எமது முன்னைய தலைவரின் கரங்களில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் எனது எதிர்பார்ப்பாகும். அப்போது தான் இது விடயத்தில் அவர் முகங்கொடுக்கும் நெருக்கடிகளை எதிர்கொள்ள அவரால் இயலக் கூடியதாக இருக்கும். இது ஒரு அவசிய மற்றும் நியாயமான ஒழுங்கு விதி என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என எதிர்ப்பார்க்கிறேன். முகமதிய சகோதரர்களுடன் நாம் ஒரு உண்மையான சகோதரத்துவத்தை விரும்புகிறோமானால், அந்த சகோதரர்களின் நன்மையை மனதில் கொண்டு நாம் இந்த ஒழுங்கு விதியை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுவதை நிறுத்தி விட வேண்டும்.

தனது இந்து சகோதரர்களின் சகோதரத்துவ உணர்வின் அதிகாரப்பூர்வமான வெளிப்பாட்டை தனது சக இஸ்லாமியர்களுக்கு எடுத்துக் காட்டக்கூடிய ஒரு வாய்ப்பை எமது முன்னைய தலைவருக்கு நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இதைச் செய்தாக வேண்டும். ஆகவே எவ்வளவு உடனடியாக முடியுமோ அவ்வளவு உடனடியாக உங்கள் பதிலை அனுப்பி வைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவண்
உண்மையுள்ள
A.O. ஹீயும்,
பொதுச் செயலாளர்,
இந்திய தேசிய காங்கிரஸ்

*எனது நாடே! இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்துவர்கள், பௌத்தர்கள் ஆகியோர் அனைவரும் கடவுளால் ஒன்று கூட்டப்பட்டு யுகயுகமாக உன்முன்னே காத்து நிற்கிறார்கள்.*

*'விசுவாசம்' ரவீந்திரநாத் தாகூர் 1906.*



படிப்பகம்

# 101 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

## பின்னிணைப்பு 1 ன் தொடர்

1887 சென்னை காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

“அறிமுகப்படுத்தப்படும் எந்த ஒரு தீர்மானத்தையாவது முகமதிய இந்து பேராளர்கள் ஒரு குழுவாக திரண்டு ஒரு மனதாகவோ அல்லது ஏறத்தாழ ஒரு மனதாகவோ தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கும் பட்சத்தில் செயல் கமிட்டியோ அல்லது தலைவர் தானே முன்னின்றோ இவ்வித விவகாரத்தை உரையாடலுக்காக சமர்ப்பிக்கக் கூடாது. அதே போல் நிறைவேற்றப்படுவதற்காக முன்வைக்கப்பட்ட ஏதாவதோர் உத்தேசத் தீர்மானம் அனைத்து முஸ்லீம்களாலுமோ அல்லது அனைத்து இந்துக்களாலுமோ ஒரு குழுவாக இணைந்து ஏக மனதாகவோ அல்லது கிட்டத்தட்ட ஒருமனதாகவோ எதிர்க்கப்படுமானால், இவ்வித தீர்மானம் கைவிடப்பட்டுவிட வேணும். ஆனால் இவ்விதி காங்கிரஸால் ஏற்கனவே திட்டவட்டமாக வந்தடைந்துள்ள கருத்துக்களுக்குப் பொருந்தாது”.

*ஏதோ தேவையைக் கருதி அருகருகில் வசிப்பதானது உண்மையான ஐக்கியமாகாது. மனிதர்களுக்கு அமைதியை அது தரலாம், வலிமை தராது.... நாட்டின் ஒவ்வொரு அங்கத்திலும் ஒருமித்த உணர்வு பரவி உயிரூட்டுகின்ற பொழுதுதான் ஒரு பெரிய நாடு அல்லது மக்கள் தோன்ற முடியும்.... அத்தகைய பெரிய மக்கள் தோன்றாத நாடு சுதந்திர நாடாக இருக்க முடியாது. தன்னுணர்வு இல்லாமற்போனால் சுதந்திரத்துக்கு என்ன பொருள்?.. பொதுமக்களோடு உண்மையான உறவுகளைப் பூணுவதற்கு நமக்கு இன்று வழி இல்லை. ஆயினும் அத்தகைய உறவு இன்றியமையாதது. அது இல்லாததால் தான் தீவுக் கூட்டங்களைப் போலச் சிதறிக் கிடக்கிறோம். ஒரே கண்டம் என்ற ஐக்கியம் ஏற்படவில்லை.... மனிதன் மனிதனை அழைத்து உறவு பூணவேண்டிய காலம் இந்தியாவில் வந்துவிட்டது ( பிரச்சினை ) — ரவீந்திரநாத் தாகூர் 1908.*

**தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —**

padippakam



## பின்னிணைப்பு 2

சேர் செய்யது அகமத்கானிடம் இருந்து 24, ஜனவரி 1888 தேதியிடப்பட்டு பதுர்தீன் தியாப்ஜிக்கு எழுதப்பட்ட கடிததத்தின் சில பகுதிகள்

எனது அன்புக்குரிய பதுர்தீன் தியாப்ஜி அவர்கட்கு!

தேசிய காங்கிரஸ் என்ற சொற்பதத்தின் அர்த்தம் என்ன என்பதே எனக்குப் புரியவில்லை. இந்தியாவில் வாழும் வெவ்வேறு சாதிகளும் பிரிவுகளும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறதா அல்லது இவர்கள் ஒரு தேசமாவார்கள் என்றோ இவர்களின் குறிக்கோள்களும் அபிலாஷைகளும் ஒன்றேதான் என்றோ கருதப்படுகிறதா? இது எந்த வழியிலும் சாத்தியமற்றது என்றே நான் கருதுகிறேன். இது இவ்விதம் சாத்தியமற்றதொன்றாக இருக்கும் நிலையில் தேசிய காங்கிரஸ் என்பதொன்று இருக்கவும் முடியாது. அது சகல மக்களுக்கும் சமமான பலாபலன்கள் தரக்கூடியதொன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

தேசிய காங்கிரஸ் எனத் தப்பான பெயர் சூடிக்கொண்ட இவ்வமைப்பின் செயற்பாடுகள் இந்தியாவுக்கு நன்மை பயக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள். ஆனால் நானோ அவை எமது கழகத்திற்கு மட்டுமல்ல பெருமளவிற்கு இந்திய நலனுக்கே தீங்கு விளைவிப்பவை என்றே கருதுகிறேன். இது விடயத்தில் உங்கள் கருத்துக்கு நேரெதிரான கருத்தைக் கொண்டிருப்பது வேதனையாகத்தான் உள்ளது.

அதனது தோற்றமும் வடிவமும் எவ்விதமாக இருந்த போதிலும் சரி, இந்தியாவை முழுமையாக ஒரு தேசமாகக் கருதும் தப்பான கோட்பாட்டில் அமைந்திருக்கும் சகல காங்கிரஸ்களையும் நான் நிராகரிக்கிறேன். நீங்கள் எனது கருத்தை விரும்பாமல் இருப்பீர்கள் என்றே கருதுகிறேன். ஆகையினால் நான் இந்தளவிற்கு எழுத துணிந்தமைக்காக என்னை மன்னிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இவண்,
உண்மையுள்ள
சையத் அகமது

*கிராம்சி கூறுவது போல, ஆதிக்கம் செலுத்தக்கூடிய வர்க்கமாக உருவாக விரும்பும் எந்தவொரு வர்க்கமும் தன்னையே தேசிய மயமாக்கிக் கொள்ள வேண்டும், அதாவது தங்களுக்காகவே, தங்கள் நலன்களுக்காகவே தேசத்தை உள்ளடக்க வேண்டும். அதாவது தன்னையே ஒரு தேசமாக, தேசமே தங்களுக்காகப் பாவிக்கப்பட வேண்டும். தான் தான் தேசம் முழுவதுமுள்ள மற்ற வர்க்கத்தினரையும் பிரதிநிதித்துவம் செய்வதாகக் காட்டிக் கொள்ள வேண்டும். (ஏ.பி. வள்ளிநாயகம், உரிமைப் போராளி இரட்டைமலை சீனிவாசனார் பக்கம் 22)*

## புதிய கட்சி

படிப்பகம்

padippakam

# 103 புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்

அ. கௌரிகாந்தன்
பணியேற்பில்
'சுடர்' வெளியீட்டகத்தின்
முன்முயற்சியில்
விரைவில் வெளிவர இருப்பவை.

'புதிய கட்சி எழுச்சியும் பின்னடைவும்' நூல்வரிசை

<u>பாகம் 1</u> - அரவிந்த மகரிஷி சைத்திரிய தேடலில்

1. நூல்வரிசை 2 புதிய கட்சியினரின் நொண்டித் தேசியம்
2. நூல்வரிசை 3 ஆயுத கிளர்ச்சியில் அரவிந்தர் — ஊக்கியாகவும், தலைவனாகவும்
3. நூல்வரிசை 4 அரவிந்தரின் சிறைவாழ்க்கையும் அதற்குப் பின்னரும்.
4. நூல்வரிசை 5 அரவிந்தர் — வாலிபத்துக்கு முன்னைய நிலை.
5. நூல்வரிசை 6 'சனாதன' ஆன்மீகக் குட்டையுள் புதிய கட்சியினர்.
6. நூல்வரிசை 7 அரவிந்தர் எதிர் காந்தி (தீவிர சனாதனம் எதிர் மிதவாத சனாதனம்)

<u>பாகம் 2</u> — மூர்க்க சுபாவ இந்து சமய சகோதரி நிவேதிதா


7. நூல்வரிசை 8 நிவேதிதா — அரவிந்தரின் சகா, விவேகானந்தரின் சீடர், பாரதியின் குரு.
8. நூல்வரிசை 9 இந்தியத் தேசியக்கொடியின் பரிணாமம் — புதிய கட்சி சகாப்தத்தில்

<u>பாகம் 3</u> — விவேகானந்தரின் அந்த மூன்று அச்சங்கள்

9. நூல்வரிசை 10 பஞ்சமர்கள் இந்து சமயத்தைவிட்டு விலகி விடுவார்களா?
10. நூல்வரிசை 11 பிறமதங்கள் இந்து சமயத்தை முழுங்கி விடுமா?
11. நூல்வரிசை 12 பொருள்முதல்வாதம் (மாக்சிசம்) எனும் பூதம் இந்தியாவையும் துவசம் செய்து விடுமா?

<u>பிற நூல்கள்</u>

12. ஹிட்லர் — முசோலினி அடித்தளம் என்ன? எது?
13. பாசிசத்தின் களம் ஜெர்மனியும் இத்தாலியும் மாத்திரந்தானா?
14. நல காலனியல் பாசிசத்தின் சில லத்தீன் அமெரிக்க மாதிரிகள்.



*தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத —*

படிப்பகம்

padippakam

படிப்பகம்

otrivin



"புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும்" (1905 - 1919) காலகட்டத்தில் இந்திய சமூகத்தின் அரசியல் அரங்கில் செயற்பட்டுவந்த பிரதான முரண்பாடுகள் :

1. ஆளும் வர்க்க மிதவாதப் பிரிவுக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் இடையேயான முரண்பாடு. இது சினேக முரண்பாடாகும்.

2. ஆளும் வர்க்க தேசியவாதப் பிரிவுக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் இடையேயான முரண்பாடு இது பகை முரண்பாடாகும்.

3. மிதவாதப் பிரிவுக்கும், தேசியவாதப் பிரிவுக்கும் இடையேயான முரண்பாடு. இது பகை முரண்பாடாகும்.

4. இந்திய உழைக்கும் மக்களுக்கும் (மிகக் குறிப்பாக தலித் மற்றும் பழங்குடியினர் ) ஆளும் வர்க்கத்திற்கும் (பார்ப்பனிய பனியாற்ஸ்கள்) இதுவும் பகை முரண்பாடாகும்.

5. பிற மதத்தவர்களுக்கும் (குறிப்பாக இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும்) ஆளும் வர்க்கத்திற்கும் (சனாதன இந்து) இடையேயான முரண்பாடு. இதுவும் பகை முரண்பாடாகவே இருந்தது.

இந்த ஐந்து வகை முரண்பாடுகளினதும் வரலாறுதான் புதிய கட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய வரலாறாகும். இதில் அரவிந்த மகரிஷி சத்திரிய தேடலில் என்ற நூல் முன் சொன்ன முரண்பாடுகளில் மூன்றாவது முரண்பாட்டின் செயல்பாட்டை மையமாகக் கொண்டு நடைபெற்றுவந்த வரலாறு பற்றிய ஆய்வாக அமைந்துள்ளது. பிற முரண்பாடுகள் வெறுமனே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அம்முரண்பாடுகளின் அடிப்படையும் அம்முரண்பாடுகள் பற்றிய புரிதல்களுக்கான திசைவழியும் குறிப்பிடப்பட்டுள்ளன. தொடர்ந்து எழுத எண்ணியுள்ள பிற நூல்கள் இவ்ஐந்து முரண்பாடுகளில் ஒவ்வொன்றையும் பற்றிய விளக்கமாக அமையும்.

SL9L SL6110